
கல்கி



ALKI 17-11-1957 30 நயா பைசா


பாருங்கள்! ஒரு அரை வில்லை ஸன்லைட் தான்
இவ்வளவு சலவையும் செய்து
முடித்தது!
அதன் அதிகப்படியான நுரையே
இதை நிறைவேற்றியது!
SUNLIGHT SOAP
பளிச்சென்று வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 248-50 TM
பம்பாயிலுள்ள ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் கம்பெனியின் தயாரிப்பு

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 17 }
இதழ் 16 }

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —*பாரதியார்*

{ ஹேவிளம்பி
{ கார்த்திகை 2

நேரு ஜெயந்தி

அமெரிக்காவிலுள்ள நியூயார்க் ஹெரால்டு ட்ரப்யூன் என்ற பிரசித்தி பெற்ற பத்திரிகை, உலகில் சமாதானத்தை நிலைநாட்ட மகத்தான சேவை புரிந்த தலைவர்கள் யார் என்று உலகப் பொதுமக்களிடம் அபிப்பிராயம் கேட்டது. அதற்கு ஐரோப்பிய மக்களும், அமெரிக்கரும் முதல் ஸ்தானம் ஐஸன்ஹோவருக்கும், அடுத்த ஸ்தானம் நமது பிரதமர் நேருஜிக்கும் அளித்தனர்.

ஜப்பான் உள்ளிட்ட ஆசிய நாடுகள் அனைத்தும் முதல் ஸ்தானம் நேருஜிக்கும், அதற்கு அடுத்த இடம்தான் அமெரிக்க ஜனாதிபதிக்கு அளித்தன.

சுதந்திரம் பெற்று மிகச் சொற்ப ஆண்டுகளே ஆன நாட்டுக்கு உலக மக்களின் மத்தியில் இவ்வளவு பெருமையும் புகழும் ஏற்படுத்தித் தந்தவர் நம்முடைய நேருஜி அவர்கள். அவருடைய பிறந்த நாளாகிய நவம்பர் பதினான்காம் தேதியை விமரிசையாகக் கொண்டாடுவோமாக. அவருக்கு இன்னும் நீடித்த ஆயுளை அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

* * * *

உலகம் இன்று ஒரு மகத்தான கட்டத்தில் வந்து நிற்கிறது !

இதுகாறும் விஞ்ஞானத் துறையில் அமெரிக்கா முன்னணியில் நின்று வந்தது ! அணுகுண்டை முதலில் கண்டுபிடித்தது அமெரிக்காதான். ஐ. ஸி. பி. எம். என்னும் கண்டங்களைக் கடந்து சென்று குறித்த குறியில் வெடிக்கும் குண்டுகளை அமெரிக்கா செய்து விடப் போவதாகப் பெருமையடித்துக் கொண்டது. எல்லாவற்றையும் விட "வான்கார்டு" என்ற செயற்கைக் கிரகமும் விடப் போவதாகச் சொல்லிக் கொண்டது.

அமெரிக்கா வெறும் பேச்சளவிலிருந்த போதே ருஷ்யாதான் ஐ. ஸி. பி. எம். குண்டுகளில் வெற்றி பெற்றுவிட்டதாக அறிவித்தது.

இதை நம்பலாமா கூடாதா என்று தயங்கிக் கொண்டிருந்த போதே ஒரு சிறு செயற்கைச் சந்திரனை வான உலகில் விட்டு, விஞ்ஞானத் துறையில் அமெரிக்காவை மிஞ்சி விட்டது என்பதை உலகுக்கு நிரூபித்தது !

ருஷ்யாவின் இந்தச் செயற்கைச் சந்திரனைக் கண்டு, வியப்பும் அவமானமும் கலந்த நிலையில் அமெரிக்கா இருந்தபோது, முதலில் விட்ட சந்திரனைவிடப் பெரிய சந்திரனை ஒரு நாயுடன் அனுப்பி அமெரிக்காவைப் பிரமிப்பில் ஆழ்த்தி வாயடைத்துப் போகும்படி செய்துவிட்டது !

நேற்றுவரை இயந்திரக் கலையில், விஞ்ஞானத் துறையில் முன்னணியில் நின்ற அமெரிக்கா இன்று பின்தங்கி விட்டது !

நேற்றுவரை இரண்டாவது இடத்திலிருந்து ருஷ்யா முன்னணிக்கு வந்துவிட்டது!

அதனால் இப்பொழுது ஒரு புது நிலை ஏற்பட்டுள்ளது. இப்படியே இரு வல்லரசுகளும் போட்டிகள் நடத்திக் கொண்டு போவதா என்பதே பிரச்னை.

இப்படி நடத்திக் கொண்டு போனால் இது உலகத்தை எங்கு எந்தப் பேர் அழிவில் கொண்டு போய் வீழ்த்தும் என்ற பீதி உலக நாடுகளிடையே எழுந்துள்ளது !

இரண்டு பெரிய வல்லரசுகளும் இனி விஞ்ஞானப் போட்டி போடுப் பட்டினிலே இனி தார்மீகத் துறையில்தான் போட்டி போட வேண்டும்.

இத்தகைய நிலையில் உலகுக்கு வழிகாட்டக் கூடிய தலைவர் ஒருவர் உண்டென்றால் அவர் நமது பாரதப் பிரதமர் தான்!

துப்பாக்கியும் ராணுவ பலமும் கொண்ட பெரிய பிரிட்டிஷ் ஆட்சியை அஹிம்சா முறையில் அடிபணிய வைத்த காந்தி மகானின் முக்கிய சீடர்களில் ஒருவர் நேருஜி! அன்பும், அறனும், அஹிம்சையும் கலந்த நெறியே இன்று உலகுக்குத் தேவைப்படுகிறது!

இந்த நெறியைப் பாரத பிரதமரே பேரரசுகளிடையே தாம் பெற்றுள்ள செல்வாக்கின் காரணமாக வற்புறுத்தி வழிகாட்ட முடியும்!

சட்டமா? சமாதானமா?

காந்தி மகானின் படத்தைக் கிழிப்பதும் எரிப்பதும் குற்றம்; நாட்டின் கொடியை அவமதிப்பதும் குற்றம். அரசியல் நிர்ணயச் சட்டத்தை அச்சடித்து விலைக்கு விற்று, பின்பு தீக்கிரையாக்குவதும் குற்றம்—இப்படியொரு புதிய சட்டம் இந்தப் பகுதி எழுதும் தறுவாயில், சட்டசபையில் விவாதிக்கப்படுகிறது.

இத்தகைய சட்டங்களைச் சட்ட நிபுணர்களைக் கொண்டு நன்கு யோசித்துச் செய்ய வேண்டும். இல்லாவிடில் சட்டத்தில் பொத்தல்கள் ஏற்பட்டுவிடும். அதன் விளைவாக அக்கிரமங்களுக்கு இடம் உண்டாகும்.

என்ன செய்தால் அவமதிப்பாகக் கருதப்படும்; என்ன செய்தால் அவமதிப்பாகக் கருதப்பட மாட்டாது என்ற சந்தேகங்கள் எழலாம். உதாரணமாக, திரு ஈ. வெ. ரா. படத்தை மேலே வைத்து, மகாத்மா காந்திஜியின் படத்தைக் கீழே வைத்தால் குற்றமா என்று கேட்பார்கள். நேருஜியின் படத்தை எரித்தால் குற்றமில்லையா என்றும் கேட்பார்கள். ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் படத்தை அவமதித்தால் குற்றமில்லையா என்ற கேள்வி பிறக்கும். தானே அச்சடித்து லாபம் சம்பாதிக்கும் அரசியல் நிர்ணயச் சட்டச் சுருக்கம், அரசியல் நிர்ணயச் சட்டமாகுமா என்றும் விவாதிக்கலாம்.


குற்றம் என்பது மனிதனுடைய நோக்கத்தில் இருக்கிறது. அடிப்படைத் தத்துவம் இது. அதைத் தண்டிக்காமல் சிற்சில புறச் செய்கைகளைக் குறிப்பிட்டுச் சட்டம் செய்தால் பல சிக்கல்கள் ஏற்படும்.

இத்தகைய சட்டம் மத்திய சர்க்கார் யோசித்துச் செய்வதே மேலான முறையாகும். அவசரத்துக்கு வேண்டுமானால் தடையுத்தரவுகள் வழக்கம்போல் பிறப்பிக்கலாம். அதை நிராகரித்துச் சிறைக்குப் போவது பெரியாருடைய திட்டமாகும். ஆகவே அவருக்கு இச் சட்டம் சௌகரியமாகவே இருக்கும்.

நேருஜியின் பிறந்த நாள் பரிசு



நல்லுறவுப் பாலம்



"இந்தி வழங்காத பகுதி மக்களுக்கு பாதகம் ஏற்படக் கூடாது. சர்க்கார் உத்தியோகங்களுக்கு இந்தியைக் கட்டாயமாக்கக் கூடாது" என்று நேருஜி காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சிக் கூட்டத்தில் கூறினார்.—செய்தி

முப்பது கோடி மக்கள் தலைமுறை தலைமுறையாக மதித்துப் பூசித்து வந்த சமயச் சின்னங்களை வெளிப்படையாக அவமதித்து மக்களை மனம் நோகச் செய்திருக்கிறார். அதுமட்டுமா? நாட்டில் கலகத்துக்கும் குழப்பத்துக்கும் காரணமாக விளங்கும் காரியங்களை தமது தனித் திட்டம் என்று பல மேடைகளில் பேசியிருக்கிறார் திரு ஈ. வெ. ரா. அவரை ஏதும் செய்யாமல் விட்டு வந்த சர்க்கார் இப்போது, அரசியல் நிர்ணயச் சட்டத்தையும், காந்தி மகான் படத்தையும் அவமதிப்பதைத் தடுப்பதற்கென்று சட்டம் செய்ய ஆரம்பித்திருப்பது விநோதம். புராதன சமயாசாரங்களையும் தெய்வீகச் சின்னங்களையும் அவமதித்து கலகத்துக்குக் காரணமான காரியங்களைச் செய்வதைவைத்து மெக்காலே காலத்தில் செய்யப்பட்ட பழைய சட்டப்படி குற்றம் சாட்டி நடவடிக்கை எடுத்துக் கொண்டால் திரு ஈ. வெ. ரா. அவர்களுக்கு நீடித்த சிறைவாசம் விதிக்க வேண்டியிருக்கும். அதனால்தான் அந்த முறையை விட்டு விட்டு ஒரு மாதம் வெறுங் காவல் அல்லது அபராதம் போட்டு, அதைச் செலுத்தாமல் சிறைக்குப் போகும் போலிச் சத்தியாக்கிரகத்துக்கு இடம் கொடுக்கும் சட்டங்களை நிறைவேற்றப் பார்க்கிறார்கள். அதில் பயனில்லை. இது பெரியாரின் அடுப்புக்கு விறகு ஆகுமே தவிர தடையாகாது.

இந்தச் சட்டம் மேலிடத்தாருக்குச் சமாதானமாகவும் பெரியாருக்குச் சௌகரியமாகவும் முடியுமே தவிர வேறில்லை.

செஞ்சிலுவைச் சங்கம் வேண்டுமா?

இன்றைய அணுகுண்டு யுகத்தில் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு இடமே இல்லாமற் போய் விட்டதை உணராமல் அந்தச் சங்கத்தின் மடாதிபதிகள் சமீபத்தில் ஒரு மகாநாடு கூட்டினார்கள். புது தில்லியில் நடந்த இந்த மகாநாட்டுக்கு ஸ்ரீமதி ராஜ்குமாரி அம்ருத கௌர் தலைமை வகித்தார்.

இம் மகாநாடு சாதித்த சாதனைகள் என்ன?

1. அணுகுண்டு சோதனைகளை உடனே நிறுத்திவிட வேண்டும் என்று ருஷ்யப் பிரதி

நிதி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதைப் பற்றிப் பேசவே கூடாது என்று இந்தக் கழகத்தின் மடாதிபதிகள் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

2. சீனப் பெருநாட்டுக்குப் போட்டியாக அமெரிக்காவின் ராணுவ உதவியுடன் பார்மோஸாத் தீவில் ஒரு ஆட்சி நடைபெற்று வருகிறது. அந்தப் பார்மோஸா சர்க்காரின் பிரதிநிதியைச் 'சீன சர்க்காரின் பிரதிநிதி' என்று பெயரிட்டு வரவேற்றார்கள். அமெரிக்காவின் யோசனையின் பேரிலேயே இந்த வரவேற்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த அக்கிரமம் ஆட்சேபிக்கப் பட்டது. பிறகு கூட்டம் பெரும் கலவரத்தில் முடிந்தது. ஸ்ரீமதி அம்ருத கௌர் தமது தலைமைப் பீடத்தை விட்டு வெளியேறினார். செஞ்சிலுவைச் சங்கம் யுத்தகளத்தில் காயப்பட்டும், காலிழந்தும், கையிழந்தும் கிடக்கும் போர்வீரர்களுக்குச் சிகிச்சை செய்து, உதவி புரியும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அணுகுண்டு போரில் இத்தகைய பணிக்கு இடமே இல்லை. அணுகுண்டு வெடித்தால் போர்வீரர்கள் மட்டுமின்றிப் பலப்பல மைல்களுக்கு நாடு நகரங்களும் அழிந்து போகும். ஆகவே, செஞ்சிலுவை சங்கத்துக்கு வேலையே இல்லை. தவிர யுத்தக் காலத்தில் செஞ்சிலுவைப் படைகளுக்கு கிட்டப் போக இடமில்லை. யுத்தம் முடிந்தபின் செஞ்சிலுவை சேவைக்கு அவசியமே இல்லை.

ஆனால் சங்கத்துக்குப் பணம் இருக்கிறது. மகாநாடு கூட்டுகிறார்கள், பணம் இருக்கிற இடத்தில் சண்டையும் சச்சரவும் ஏற்படுவது சகஜந்தானே? செஞ்சிலுவைச் சங்கத்தைக் கலைத்து விடுவதே நலம்.

வல்லரசுகளின் பொம்மலாட்டம்

பாரத நாட்டைச் சேர்ந்த கோவா விஷயத்தில் இந்திய சர்க்கார் கையாண்டு வரும் நேர்மையான கொள்கையை, போர்ச்சுகீசியப் பிரதமர் டாக்டர் சலாஸார் ஆத்திரத்துடன் கண்டித்துப் பேசியிருக்கிறார். கோவாவில் இந்திய சர்க்கார் பயங்கரமான நடவடிக்கைகளைத் தூண்டி வருகிறார்களாம். போர்ச்சுகீசியர்களின் ஆதிக்கத்தைக் கோவா மக்கள் எதிர்த்துப் போராட்டம் நடத்துவதுபோல் உலகத்துக்குக் காட்ட இந்திய சர்க்கார் சூழ்ச்சி செய்து வருகிறார்களாம்.

போர்ச்சுகீசியப் பிரதமரின் இந்தக் கூற்றில் புதுமை எதுவும் இல்லை. பாரத நாட்டில் ஆட்சி புரிந்த பிரிட்டிஷ் தலைவர்களும் அக்காலத்தில் இப்படித்தான் கூறினார்கள். பாரத மக்களைத் தேசத்தலைவர்கள் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் இறங்கும்படி தூண்டி வருகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்காகக் காந்தி மகானிலிருந்து பல தலைவர்களையும் சிறைப்படுத்தித் துன்புறுத்தினார்கள்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தில் வெற்றி பெற்ற பிரிட்டிஷார், இந்திய சாம்ராஜ்யத்தை விட்டு விட்டு வெளியேறும்படி நேர்ந்து விட்டது. பிரிட்டிஷார் இலங்கையில் கோடிக்கணக்கில் செலவு செய்து நிர்மாணித்திருந்த கடற்படை, விமானப்படைத் தளங்களைக் கூடச் சில தினங்களுக்கு முன் விட்டு விட்டுப் போய் விட்டார்கள். ஆனால், பிரிட்டிஷ் சிங்கத்தினால் முடியாத காரியத்தை இப்போது போர்ச்சுகல் நரி முயற்சித்துப் பார்ப்பதுதான் விந்தையாக இருக்கிறது.

கோவா விடுதலைக்காகப் போராடும் தேச பக்தர்களுக்குக் காட்டுமிராண்டித்தனமாகக் கொடிய தண்டனை விதித்தும், சித்திரவதை செய்தும் வரும் போர்ச்சுகீசிய சர்க்கார், இந்திய சர்க்கார் கோவாவில் பயங்கர இயக்கத்தைத் தூண்டிவருவதாகக் கூறுவது வெறும் பித்தலாட்டப் பிரசாரம் அல்லவா?

தாங்கள் இந்தியாவை விட்டு வெளியேற மறுப்பது உலக நீதிக்கும் ஜனநாயக தர்மத்துக்கும் முரணானது என்பதைப் போர்ச்சுகீசியர்கள் அறிவர். ஆனால், அவர்களின் பிடிவாதத்துக்குக் காரணம், சர்வ தேச சபையை ஆட்டிவைக்கும் வல்லரசுகளின் மறைமுகமான ஆதரவுதான். தங்கள் கட்சியில் சேராமல் உலக அரங்கில் நேர்மையாக நடந்துகொண்டு வரும் இந்தியாவுக்கு விரோதமாக, வல்லரசுகள் போர்ச்சுகலைத் தங்கள் இஷ்டப்படி பொம்மலாட்டம் ஆட்டி வருகிறார்கள்.

அருள் வாக்கு

பழங்களையும், பழுப்பு இலைகளையுமேதான் சாப்பிட வேண்டுமென்பதை எல்லோரும் பின்பற்ற முடியாதென்பது வெளிப்படை. ஆனால், சிலருக்கு அது முடியும். அவர்கள் அதைச் செய்ய வேண்டும். மற்றவர்கள் அதிக ஹிம்ஸை இல்லாத உணவைச் சாப்பிடலாம். 'அஹிம்ஸை என்பது எல்லோருக்குமே ஒரு பொது லட்சியமாயிருக்க வேண்டும்; ஆனால் தகுதியுள்ள ஒரு சிலரே அதை நடைமுறையில் பின்பற்ற வேண்டும். மனிதர்களுடைய சுபாவம், தகுதியைக் கவனிக்காமல் எல்லோரும் அஹிம்ஸையை அனுஷ்டிக்க வேண்டுமென்று ஏசுநாதரும், புத்தரும், காந்திஜியும் சொன்னார்கள். ஆனால் ஹிந்து மதம் மனிதர்களின் வெவ்வேறு தன்மைகளை உணர்ந்து, எந்தவிதமான உலகப் பற்றுகளும் இல்லாத சன்யாசிகள் மட்டும் இதை அனுஷ்டித்தால் போதுமென்று விதித்திருக்கிறது. மற்றவர்களுக்கு எவ்வளவோ சமூகக் கடமைகளும், நிர்ப்பந்தங்களும் இருக்கின்றன. சன்யாசிகளைப் போல் அவர்கள் அஹிம்ஸையை அவ்வளவு கண்டிப்பாகப் பின்பற்ற முடியாது.

தனி மனிதனின் அந்தஸ்து, அதற்குரிய கடமைகளை அடிப்படையாகக் கொண்டுதான் ஹிந்து தர்மம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனனைப் போரிடும்படி கட்டளையிட்டார். மற்றொரு சந்தர்ப்பத்தில் அஹிம்சையைப் பின்பற்றும்படி அர்ஜுனனுக்குக் கட்டளையிடப்பட்டது. ஒரு மனிதனுக்கு மரண தண்டனையோ அல்லது வேறு தண்டனைகளோ விதிப்பது நீதிபதியின் கடமையாகும். நமக்கு மிகவும் நெருக்கமானவர்களுக்குப் பைத்தியம் பிடித்து, உபத்திரவம் செய்ய ஆரம்பித்தால் கட்டிப் போடுகிறோம். இந்த மாறுபட்ட தன்மைகளை (அதிகார பேதம்) 'பகவான் புத்தரும், ஏசுவும், கவனிக்கத் தவறி விட்டார்கள். மக்கள் தாம் சொல்லுவதைச் செயலில் காட்டும்படி செய்வதற்கும் தவறி விட்டார்கள். மாறுபட்ட தன்மைகளுக்கேற்ப தர்மத்தைப் பின்பற்றினால் உயர்ந்த நோக்கங்கள் பாதிக்கப்படுவதில்லை. அனாவசியமாகத் தவறுகளையும் இழைக்க மாட்டார்கள். அவசியமான தவறுகள் கூடக் கூடியவரையில் குறைந்து விடும்.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்.

வம்புச் சாவடி

இன்று தமிழ் பல துறைகளில் முன்னேறி வருகிறது. தமிழில் பல கதைப் புத்தகங்கள் வெளி வந்து விட்டன. நவீனங்கள் வெளி வந்த வண்ணமிருக்கின்றன. விஞ்ஞான நூல்களும் வெளிவந்திருக்கின்றன! சில ஆண்டுகளுக்கு முன் தமிழில் விஞ்ஞானத்தையும் கணிதத்தையும் சொல்ல முடியுமா என்று மலைத்து வந்தார்கள். ஆனால் இன்று தமிழில் அத்துறையில் பல நூல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. விரைவில் தமிழில் சொல்ல முடியாத விஷயமே இருக்க முடியாது என்ற நிலை ஏற்படப் போகிறது!

இதற்கெல்லாம் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே வித்தூன்றியவர் அ. மாதவய்யா அவர்கள். அவர் சர்க்காரில் ஸால்ட் இன்ஸ்பெக்டராக வேலை செய்து வந்தார். என்றாலும், அவர் தமிழில் அபரிமிதமான ஈடுபாடு கொண்டு பல கதைகள் கட்டுரைகள் நூல்கள் எழுதினார். "பஞ்சாமிர்தம்" என்ற உயர் தரமான பத்திரிகை நடத்தி அதில் விஞ்ஞானக் கட்டுரைகள் பதிப்பித்தார்.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் அ. மாதவய்யா அவர்கள் ஞாபகார்த்த தினத்தைச் சமீபத்தில் கொண்டாடினர். நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் தலைமை வகித்தார். திரு பெ. நா. அப்புஸ்வாமி மாதவய்யா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விவரமாகக் கூறினார். ராஜாஜி அவர்கள் பேசியபோது ஒரு ரஸமான நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார்!

சென்னையில் ஒரு பொருட்காட்சி நடைபெற்றதாம். அதை நடத்தும் நிர்வாகப் பொறுப்பு ராஜாஜியின் நண்பராயிருந்த ஒரு உத்தியோகஸ்தரிடம் இருந்தது. அந்தப் பொருட்காட்சியைப் பார்வையிட அந்தச் சமயத்தில் சென்னை கவர்னராக இருந்த பெண்ட்லண்டு பிரபு வந்தார். அவர் வருவதற்குச் சற்று முன்பு அ. மாதவய்யா வந்து விட்டுப் போனார். அவரைப் பார்த்த பெண்ட்லண்டு பிரபு "அதோ போகிறாரே அவர் யார்?" என்று கேட்டாராம், அதிகாரிடம்.

"அவர் ஒரு ஸால்ட் இன்ஸ்பெக்டர்!" என்றாராம். அதாவது கவர்னரின் பார்வையைக் கவரக்கூடிய அளவுக்குப் பெரிய மனிதர் அல்ல என்று தொனிக்கும்படி.

"பெயர்?"

"ஏ. மாதவய்யா!" என்றார்.

"ஓ! 'தில்லை கோவிந்தன்' ஆசிரியரா? அப்படியானால் அவரைக் கண்டு நான் பேசியிருக்கலாமே!" என்று கவர்னர் உடனே சொன்னாராம்.

ஒரு வெள்ளைக்கார கவர்னர் 'தில்லை கோவிந்தன்' என்ற நாவலை அந்த நாட்களில் வாசித்திருக்கிறார் என்பது எவ்வளவு பெரிய விஷயம்! அத்துடன் அதை எழுதிய ஆசிரியரின் பெயரையும் நினைவு வைத்துக் கொண்டிருந்தார். ஒரு நல்ல ஆசிரியர் என்றால் பிரிட்டிஷ் மக்கள் எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார்கள் என்பது தெரிகிறது!

★

விசாரணையின்றிச் சிறையில் வைக்கப்பட்டுள்ள திரு முத்துராமலிங்கத் தேவர் பெயரில் கொலை சதிக்குற்றம் சாட்டி நடவடிக்கை எடுத்துள்ளார்கள். கொலையைத் தூண்டி விட்டதாக அவர்மீது குற்றச்சாட்டு. அவரைச் சிறைப்படுத்திப் பல நாட்களான பிறகு இம்மாதிரியான குற்றம் சுமத்துவது பல கேள்விகளுக்கு இடம் தருகிறது.

எனினும் தாம் நிரபராதி என்று நிரூபிப்பதற்கான வசதிகளைத் திரு தேவர் அவர்களுக்குத் தரவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். தற்போது அமுலிலிருக்கும் தடுப்புக் காவல் சட்டத்தை ரத்து செய்து விட்டு, திரு தேவரை விடுதலை செய்தால் நீதிமன்றத்தில் அவரால் வழக்காட முடியும். சர்க்காரால் தரப்படும் சாட்சியங்களை விசாரணை செய்து விவாதத்தை நடத்திக் கொள்ள முடியும். சிறையில் அடைத்து வைத்து விட்டு இம்மாதிரியான குற்றத்தை விசாரணை செய்வது நீதியாகாது!

பிரபல தேயிலைத் தோட்ட அதிபரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு எஸ். தொண்டமான் அவர்களின் புதல்வர் திரு இராமநாதனுக்கும், செல்வி ராஜேஸ்வரிக்கும் செப்டம்பர் நாலாம் தேதி இலங்கை வேவண்டன் குரூப் தோட்டத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் இராமநாதன் - ராஜேஸ்வரியையும், மணப்பந்தலுக்குத் திரு தொண்டமான் தம்பதிகள் கவர்னர் ஜெனரல் திரு ஆலிவர் குணதிலகா அவர்களை அழைத்துச் செல்வதையும் படத்தில் காணலாம்.







இந்தியாவில் முதல்...
ஆண்டுகளுக்குமுன் பிரபாத் கியாஸ் விளக்குத் திரிகள் உற்பத்தியுடன் ஆரம்பித்தனர். சடுதியில் ஆயில் பிரஷர் விளக்குகள், ஸ்டவ்கள் செய்யத் தொடங்கினர். இன்று பிரபாத் பொருள்கள் உயர்தரத்தின் சின்னங்கள் - உலகில் எந்தேசமும் பெருமை கொள்ளக்கூடிய தரம்.
பிரபாத்
ஸ்டவ்கள் - ஊது விளக்குகள்
- லாந்தர்கள் - மான்டில்கள்
ஆறுவும் சிறந்தது!

வள்ளுவர் வாசகம்

4


துறவிகளையும், உலக வியாபாரத்தைத் துறந்துவிட்டு வனம் சென்று தவம் இருக்கும் பெரியோர்களையும், இல்வாழ்க்கை நடத்தும் சம்சாரிகள் காப்பாற்றி வருகிறார்கள். அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் இவர்கள் செய்து தருகிறார்கள். ஆனபடியால், உலக சுகங்களைத் தேடாமல் வாழும் அவர்களைப் போலவே, இவர்களும் பாராட்டத் தக்கவர்கள். இல்லற வாழ்க்கை நடத்துகிறவர்களுடைய உழைப்பினாலும், அவர்கள் சம்பாதிக்கும் பொருளைக் கொண்டும், உலக வாழ்க்கையில் ஈடுபடாத மாணவர்களும் வனம் சென்று தவம் இருக்கும் வயோதிகர்களும், அனைத்தும் துறந்த சந்நியாசிகளும் தங்கள் தங்கள் தருமத்தைக் காப்பாற்றி வாழ முடிகிறது. உலகத்தைத் துறவாமல் நல்ல வழியில் இல்வாழ்க்கை நடத்தும் மக்களின் உபகாரத்தினால் தான், முற்றும் துறந்தவர்கள் அவர்களுக்கு உரிய கடமைகளையும் தவங்களையும் நடத்தி வருகிறார்கள். ஆனபடியால், இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களைக் குறைவாக எண்ணுதல் முறையாகாது. பற்றற்றவர்களாகிய துறவிகளும் மாணவர்களும் வானப்ரஸ்தர்களுமே உயர்ந்தோர். சம்சாரிகள் எல்லாம் தன்னலத்தில் காலம் கழிப்பவர்கள் என்று கருதுவது தவறு. மெய்வருந்திப் பிழைக்கும் சம்சாரிகள் துறவிகளைக் காப்பாற்றி வருகிறார்கள்.

இல்வாழ்வான் என்பான்
இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற
துணை.

"என்பான்" என்று குறிப்பிட்டிருப்பது, அவனும் மற்ற மூவரைப் போலவே மேம்பட்ட தருமத்தைச் செய்து வருபவன் என்று காட்டுகிறது. தனக்காக மட்டும் அவன் மெய் வருந்தவில்லை. துறவிகளுக்காகவும் மாணவர்களுக்காகவும் பாடுபடுகிறான். அவர்களுடைய உயர்ந்த தரும வாழ்க்கைக்கு இவனுடைய துணை வேண்



ராஜாஜி



டியதாகிறது. இவன் இல்லையேல் அவர்களுடைய தவநெறி நடக்காது. ''இல்வாழ்வான்'' என்று அவனுக்குப் பெயர் ஆயினும், தன் இல்லத்தைக் காப்பது மட்டுமல்லாமல், துறவிகளுடைய நல்லாற்றின் துணை ஆகிறான். அவர்களுடைய தருமங்கள் சரியான வழியில் நடைபெறுவதற்குத் துணையாகிறான். நிலையான துணையாக நிற்கிறான். இதையே ''நின்ற துணை'' என்றார். எந்தச் சமயத்திலும் கைவிடமாட்டான். இது சம்சாரிகளுடைய கடமை என்கிற பொருள்படும்படி குறிப்பிடுகிறார். தத்தம் குடும்பங்களை மட்டும் காப்பாற்றினால் போதாது. துறவிகள் முதலியோரையும் கவனித்து வர வேண்டும்.

* * * *

இல்வாழ்க்கை சுக வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்று விரும்பினால்- பயன்பட்ட வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்று விரும்பினால்—அந்த வாழ்க்கையின் உண்மையான பண்பை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். அதற்கு இரண்டு குணங்கள் அமைய வேண்டும். ஒன்று அன்பு; மற்றொன்று தருமம், அதாவது குற்றமற்ற வாழ்க்கை.

அன்பும் அறனும்
உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனு
மது.

இல்வாழ்க்கை பயனும் பண்பும் கொண்டதாகும்; — எப்பொழுது? அன்பும் அறனும் உடைத்தாயின், தன் பண்பை முற்றிலும் கொண்டிருக்கும் பழமே பழமாகும். அதைப் போல் அன்பும் நல்வாழ்க்கையும் கொண்டு பழுத்த இல்வாழ்க்கையே இல்வாழ்க்கை. அவையில்லையேல் அது இல்லறம் ஆகாது. அன்பும் அறனும் நிறைந்து நிற்கும் இல்வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கையாகும். இல்லாவிடில் பயனற்ற வாழ்க்கையாகி விடும்.

அன்பானது இல்லறத்துக்கு அழகு தருகிறது. அறம் அதைப் பயன்படும் வாழ்க்கையாகச் செய்கிறது. அன்பும் தரும வாழ்க்கையும் இணைந்த குடும்பங்கள் பொலிவும் பயனும் பெற்று விளங்கும்.

ஒரு குடும்பத்தில் அன்பு இல்லாமற் போனால் அந்த வீட்டில் என்ன சுகம் இருக்க முடியும்? தரும வாழ்க்கையை விட்டு அதருமத்தில் இறங்கிக் காலம் கழிக்கும் குடும்பத்தினால் மக்களுக்குத் துன்பமே ஒழியப் பயனில்லை. அந்த வீடு துஷ்ட மிருகங்கள் இருக்கும் முள்காடேயாகும்.

நீண்டகாலம் பொருளாதாரத் துறையில் ஈடுபட்டு, கல்கத்தா, தில்லி முதலிய நகரங்களில் பத்திரிகைகளுக்குப் பொருளாதார நிருபராகப் பணியாற்றி, தற்போது ஓய்வு பெற்றுச் சென்னையிலுள்ள நண்பர் திரு எம். எஸ். சிவஸ்வாமி அவர்கள் சென்ற வாரம் வெளியான கல்கி தலையங்கத்தை (ஸ்டர்லிங் நிதியும் அவசரச் சட்டமும்) வாசித்து விட்டு தமது உள்ளத்திலே தோன்றிய கருத்துக்களை நமக்கு எழுதியிருக்கிறார். முக்கியமாக நமது ஏற்றுமதி வர்த்தகத்தைப் பற்றியும் அரசாங்கத்தின் நடை முறை கொள்கையைப் பற்றியும், அவர் எழுதியுள்ளதை இங்கே நேயர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு தருகிறோம். — ஆசிரியர்

நமது ஏற்றுமதி வர்த்தகம்

எம். எஸ். சிவஸ்வாமி

நமது அரசாங்கத்துக்குக் கொஞ்சகாலமாகவே பணத்தட்டு ஏற்பட்டு அது முற்றி இப்போது நெருக்கடியான நிலைமையை அடைந்து விட்டது. முக்கியமாக அன்னியச் செலாவணிக் கையிருப்பு படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்ததால்தான் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதைச் சமாளிக்க அரசாங்கம் பல முறைகளைக் கையாண்டிருக்கிறது. அவற்றில் ஒன்றுதான் சமீபத்தில் ஸ்டர்லிங் நிதி சம்பந்தமாகப் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம். இதைப் பற்றிச் சென்ற வாரத்திய கல்கி தலையங்கம் வெகு தெளிவாக விளக்கியிருக்கிறது.

இது தற்காலிகமாகச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடுதான். வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகிக் கொண்டிருக்கும் சாமான்களுக்குப் பணம் செலுத்த வேண்டுமாகையால் அதற்குத் தடங்கல் ஏற்படக் கூடாதே என்று இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் ஏற்படும் இதர விளைவுகள் ஒருபுறம் இருந்தாலும் இந்த நடவடிக்கை மூலம் அன்னியச் செலாவணி நெருக்கடி தீர்ந்துவிடாதென்பதுமட்டும் நிச்சயம். ஏனெனில் இப்போதுள்ள நிலைமை இதே போல நீடித்தால் நான்கைந்து மாதங்களுக்குப் பின் இதே நெருக்கடி மறுபடியும் ஏற்படத்தான் செய்யும். மற்றொரு அவசரச் சட்டம் அப்போது பிறப்பிக்க முடியாமல் போனாலும் வியப்படைவதற்கில்லை. ஸ்டர்லிங் நிதி மேலும் கரைக்க முடியாத அளவுக்குக் கரைந்து போயிருக்கக் கூடும்!

எனவே இந்த நெருக்கடியைத் தீர்க்க இதர வழிகளை மேற்கொள்ளுவது அவசியமாகிறது. இதில் ஒன்றுதான் நமது ஏற்றுமதி வர்த்தகத்தைப் பெருக்குவது. இதைப் பற்றியும் சென்ற வாரத்தில் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது சென்ற சில ஆண்டுகளாக நமது ஏற்றுமதி வர்த்தகம் எப்படி நடைபெற்று வந்திருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

திட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு பார்க்கும்போது அயல் நாட்டு வர்த்தகத்தின் குறிக்கோள் அன்னியச் செலாவணிக் கையிருப்பை அதிகரிப்பதே என்பது வெளிப்படை. எவ்வளவு தூரம் இது அதிகரித்துள்ளது என்பது அன்னிய நாட்டு வியாபாரம் சாதகமான நிலையிலிருக்கிறதா, அல்லது பாதகமான நிலையிலிருக்கிறதா என்பதைப் பொறுத்தது? ஏற்றுமதி அதிகமாயிருந்து இறக்குமதி குறைவாயிருந்தால், நாட்டுக்குச் சாதகமான வர்த்தக நிலை என்று அது கருதப்படுகிறது. ஏனெனில் செலாவணிக் கையிருப்பு இதன் மூலம் பெருகும். மாறாக, இறக்குமதி அதிகமாக இருந்து ஏற்றுமதி குறைவாக இருந்தால், அது பாதகமான வர்த்தக நிலையென மதிக்கப்படுகிறது. ஏனெனில் கையிருப்புச் செலாவணி இதனால் குறையும். இம்மாதிரி சாதகபாதகமாக வர்த்தக நிலையைக் கொண்டுதான் அயல் நாட்டு வியாபாரத்தில் நாம் எவ்வாறு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்று கணக்கெடுக்கப்படுகிறது.

இந்தக் கணக்குப்படி பார்த்தால் நமது அயல் நாட்டு வியாபாரம் நமக்குச் சாதகமாக இல்லையென்றும் ஏற்றுமதி கணிசமான அளவுக்குப் பெருகவில்லை என்றும் ஏற்படுகிறது. இப்போது மட்டுமல்ல, கடந்த ஐந்தாண்டுகளாகவே அப்படித்தான் இருந்து வந்திருக்கின்றது என்பதும் தெரிய வருகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள சில கணக்கு விவரங்கள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன.

இதிலிருந்து முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே ஏற்றுமதி வியாபாரம் படிப்படியாகக் குறைந்து கொண்டேதானிருந்தது என்றும், இறக்குமதியும் குறைந்து கொண்டே வந்தாலும், இரண்டையும் இணைத்துப் பார்க்கும்போது வருஷத்துக்குச் சராசரி நூறு

வருஷம்	ஏற்றுமதி (கோடி ரூபாய் கணக்கில்)	இறக்குமதி (கோடி ரூபாய் கணக்கில்)	சாதக + பாதக— நிலை
1951—52	730.1	962.9	—232.8
1952—53	601.9	633.0	— 31.1
1953—54	539.7	591.8	— 52.1
1954—55	596.6	681.6	— 85.0
1955—56	642.2	747.7	—105.5

[புள்ளி விவரங்கள் மத்திய அரசாங்கத் தொழில் வர்த்தக இலாகா வெளியீடுகளிலிருந்து எடுக்கப்பட்டவை.]

கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கரைந்து கொண்டுதான் வந்தது என்பதும் விளங்கும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்தபிறகும் இந்தப் பாதகமான அயல் நாட்டு வியாபார நிலை மாறவில்லை. சமீபத்தில் ரிஸர்வ் பாங்க் ஸ்தாபனத்தார் வெளியிட்ட மாத சஞ்சிகையில்கூட இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1957-ம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் மூன்று மாதங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கணக்குப்படி மொத்த ஏற்றுமதி 132·8 கோடி ரூபாய் மதிப்புள்ளவை என்றும், இவ்வாண்டு முதல் மூன்று மாதத்தில் இது 177·2 கோடி ரூபாய் மதிப்புள்ளதாக இருந்ததென்றும், மூன்று மாதத்தில் மட்டும் 37·4 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி குறைந்திருக்கிறது என்றும் விளக்கப்பட்டிருக்கின்றன. இதை மேலும் விமர்சனம் செய்யும் வகையில் இந்தக் குறைவு ஸ்டர்லிங் நாடுகள், டாலர் நாடுகள் என்ற பாகுபாடின்றி எல்லா நாட்டு வியாபாரத்திலும் காணப்படுகிறதென்றும், இதன் காரணமாக அன்னியச் செலாவணிக் கையிருப்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டது என்றும் கூறியுள்ளார்கள்.

ஏற்றுமதி விஸ்தரிப்பு முக்கியம் என்று நன்கு உணரப்பட்டிருந்தும், அதற்காக முயற்சிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டிருந்தும், இவை பயனளிக்காமல் போனதற்குக் காரணம் என்னவென்பதை ஆராய்வது அவசியமாகிறது. பொதுப்படையாகப் பார்த்தால், அயல்நாட்டு வியாபாரத்தில் நாம் உலகத்தில் மற்றெல்லா நாட்டவர்களுடன் போட்டியிட்டுத்தான் நம்முடைய பொருள்களை விற்க வேண்டும். பொருளின் தரமும் விலையின் அளவுமே அன்னிய வியாபாரத்தில் முக்கிய இடம் பெறும். இந்தியாவுடன் நேசமாகப் பழகுகிறார்கள் என்பதற்காகவோ தாட்சண்யத்திற்காகவோ அதிக விலை கொடுத்து நம்நாட்டுப் பொருள்களை எந்த அயல் நாடும் வாங்காது. இந்தியாவைக் காட்டிலும் முன்னேற்றமடைந்துள்ள இதர நாடுகள் தங்கள் பண்டங்களை மலிவாக விற்றால் அவர்களுக்குத் தான் வியாபாரம் பெருகும்.

அடக்க விலையும் உற்பத்தி விலையும் எவ்வளவுக் கெவ்வளவு குறைந்திருக்கின்றனவோ அவ்வளவுக்குப் போட்டியிடும் சாமர்த்தியமும் சக்தியும் அதிகரித்திருக்கும். நம் நாட்டில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள பல சட்டங்களின் விளைவாகவும், சலுகைகள் காரணமாகவும், தேசிய வரி விதிப்பு காரணமாகவும், தொழிற்சாலைப் பண்டங்களின் உற்பத்தி விலையும் அடக்க விலையும் போட்டி போட இயலாத அளவுக்கு உயர்ந்து விட்டன. உதாரணமாக இறக்குமதிப் பொருளாக இருந்து சமீபகாலத்தில் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக மாறி விட்ட ஜவுளித் தொழிலை எடுத்துக் கொள்ளலாம். வருஷத்துக்கு நூறு கோடி கெஜம் ஜவுளி தினுசுகள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்று லட்சியம் ஏற்படுத்தப் பட்டது. ஆனால் 85 கோடி கஜத்துக்கு மேல் ஏற்றுமதி செய்ய முடியாமல் போகலாம் என்னும் நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட தினுசுகள் வியாபார மந்தத்தினால் தேங்கிக் கிடக்கின்றன. மேலும் உற்பத்தியைப் பெருக்கினால் கிடங்கில் உற்பத்திப் பொருளை வைக்க இடமில்லை. உற்பத்தி மெதுவாகத்தான் நடக்கிறது. உச்சபக்ஷ தேசிய வரி இந்நிலையை ஏற்படுத்தி விட்டது. ஆலை விஸ்தரிப்புத் திட்டத்தையும் ஏற்றுமதி விஸ்தரிப்பையும் இணைத்துச் சில சட்டங்கள் அமுலிலிருக்கின்றன. ஆலையை விஸ்தரித்து உற்பத்தியைப் பெருக்கினால், ஏற்றுமதி செய்தே ஆக வேண்டும். இல்லையென்றால் தனி வரி விதிப்புக்கு உட்பட வேண்டும். தொழிலாளிகளுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் காரணமாக உற்பத்தி பெருகா விட்டாலும், உற்பத்தி விலை அநேகமாக எல்லாத் தொழிற்சாலைகளிலும் உயர்ந்து விட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் வெளிநாட்டு ஏற்றுமதி வியாபாரத்துக்கு உகந்த முறையில் ஆதரவளிப்பதாக இல்லை. ஏற்றுமதிக் குறைவுக்கு இது ஒரு காரணம்.

இதர காரணங்களும் உண்டு. வெளி நாடுகளில் விலை குறைந்து விட்டதனால் வியாபாரம் குறைந்து போவதும் உண்டு. உதாரணமாக, தேயிலையைக் கூறலாம். தேயிலை ஏற்றுமதி குறைந்ததற்கு இது ஒரு காரணம். மேலும் வெளி நாடுகளில் இந்தியத் தேயிலை இதர நாட்டுத் தேயிலையுடன் போட்டியிட வேண்டியிருப்பதால், மத்தியப் பிராந்திய அரசாங்கங்கள் சட்டப்படித் தொழிலாளிகளுக்கு அளித்துள்ள சலுகைகள் காரணமாக, இந்தியத் தேயிலையின் அடக்க விலையும் உயர்ந்துள்ளது. தென்னாப்பிரிக்கா தேயிலை இங்கிலாந்து மார்க்கெட்டில் இந்தியத் தேயிலையை விரட்டி அடித்து விடுமோ என்ற பயம் கூடத் தோட்டத் தொழிலாளிகளிடம் தோன்றியிருக்கிறது.

மேலும் ஏற்றுமதி வியாபாரத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் பண்டங்கள் குறிப்பிட்ட சில பொருள்களே. உணவு வகையைச் சார்ந்த தேயிலை, முந்திரி, மிளகு, காப்பிக் கொட்டை, புகையிலை முதலியவை; மூலப் பொருள்கள் வகையைச் சார்ந்த பருத்தி, ஆட்டு ரோமம், மைகா, அரக்கு, நிலக்கடலை, நிலக்கரி, மாங்கனீஸ், தோல் முதலியவை; எண்ணெய் வகைகள், தொழிற்பகுதியைச் சேர்ந்த ஜவுளி தினுசுகள், சணல் வகைகள், கம்பளங்கள் முதலியவைகள்தான் மாமூலாக ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள். சமீப காலத்தில் பல புதிய ரகங்கள் இந்த ஜாபிதாவில் இடம் பெற்றிருக்கின்றன. உதாரணமாக லாந்தர்கள், மின்சார விசிறிகள், தையல் இயந்திரங்கள், சோப்புகள் முதலியன. ஆனால் ஏற்றுமதிப் பொருள்கள், குறிப்பிட்ட சிலவற்றைத் தவிர, மற்றவைகளெல்லாம் அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாகவும் இதர காரணங்களாலும் ஒவ்வொரு வகையில் பல்வேறு இன்னல்களுக்காளாக வேண்டியிருக்கிறது. ஏற்றுமதி எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றமடையாததற்கு இவையெல்லாம் ஓரளவுக்குக் காரணம். திட்டத்தைப் பரிசீலனை செய்ய முற்படும்போது, அதைத் தொடர்ந்து தொழில் ஸ்தாபனங்களையும் ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் பகுதிகளையும் எவ்வாறு பலப்படுத்தலாம் என்பதையும் பரிசீலித்தால் நன்மை பயக்கும்.

வட்ட மேஜை

ஒரு வேண்டுகோள்

எதிர்கால நல்வாழ்வுக்கு இளங் குழந்தைகளைப் பயிற்றுவது பள்ளிகள். பம்பாயிலே தென்னக மக்களின் சிறுவர்களுக்குக் கல்வி அறிவை ஊட்டும் நற்பணியைச் செய்து வரும் சில ஸ்தாபனங்களுள் தென்னிந்திய நல்வாழ்வுக் கழக உயர்நிலைப் பள்ளியும் ஒரு பெருமையான இடத்தைப் பெறுகின்றது.

பொதுவாக ஸ்தாபனங்கள் வளர்ந்து சேவை புரிய அதற்கென்று உரிமையிடம் ஒன்று தேவை. குறிப்பாகக் கல்விச்சாலைகளுக்கு இத் தேவை மிக முக்கியம்.

இதை உணர்ந்த கழகத்தை நிறுவிய சான்றோர்களும் அவ்வப்போது அதற்குத் துணையாக நின்ற அன்பர்கள் பலரும் பொது மக்கள், பெற்றோர்கள் இவர்களுடைய ஒத்துழைப்பை ஏற்றுச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய நிதி முயற்சிகளை மேற்கொண்டு, சமீபத்தில் சேகரிக்கப்பட்ட நிதியோடு மேலும் சில ஏற்பாடுகளைச் செய்து குழந்தைகள் சிறந்த வசதியுடன் நல்லதொரு சூழ்நிலையில் உயர்ந்த கல்வி கற்க அழகிய கட்டடம் ஒன்றை நிறுவி வருகின்றனர்.

இருப்பினும், கட்டடம் முழு வடிவம் பெற்று ஓங்கிப் பொலிய இன்னும் நிதி தேவையாக உள்ளது. இந்த நிதி திரட்டலுக்காக வருகிற நவம்பர் 15, 16, 17 தேதிகளில் ஓர் அரிய கலை நிகழ்ச்சி ஏற்பாடாகியுள்ளது மகிழ்ச்சியான செய்தி. சென்னை, அடையாறு கலாக்ஷேத்திர ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்கள் தமது குழுவினருடன் வந்திருந்து தங்களது சிறந்த நாட்டிய நாடகங்களாகிய "குற்றாலக் குறவஞ்சி", "குமார சம்பவம்", 'இராமாயணம்' இம்மூன்றினையும் நிகழ்த்த இருக்கின்றார்கள். இவை கண் மகிழும் கலைக் காட்சி, உள்ளம் இனிக்கும் உவகை உணர்ச்சி. சிந்தனையைக் கவரும் சிறப்பான நிகழ்ச்சி.

"வீதிதோறும் இரண்டொரு பள்ளி" யென்று அறிவுத் தாகம் கொண்டு பாடினார் அமரகவி பாரதியார். எனவே பள்ளிக்கூடங்களின் தேவைக்கு இதனினும் சிறந்த சான்று தேவையில்லை. அறிவு வளர்க்கும் ஆலயமாகிய இந்தத் திருப்பணிக்குப் பொதுமக்களிடம் ஓர் ஒரு வேண்டுகோள்:

"நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்,
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்"

பம்பாய்
4—11—57 தென்னிந்திய நல்வாழ்வுக் கழகத்தார்

வள்ளுவர் வாசகம்


"வள்ளுவரின் சிறப்பு என்னவென்றால், குறிக்கோளை விட்டுவிடாமல் அதை விளக்கி, சாதாரண மக்களும் வாழ்க்கையில் கடைப்பிடித்துச் செல்லும் வகையில் உபதேசிப்பார்" என்று ராஜாஜி அவர்கள் 'வள்ளுவர் வாசக'த்தை ஆரம்பித்திருப்பது, 'அதே பொருத்த சிறப்புடைத்து' என்று சொல்லும் படியாக அமைந்திருக்கிறது: குறிப்பாக, என் போன்ற ஆசிரியர்களுக்கு 'வள்ளுவர் வாசகம்' நல்ல உதவி நல்கும். இங்ஙனம் அறவழியை உணர்த்தித் தமிழ்ப் பணி செய்து வரும் ராஜாஜி அவர்கள் நீடூழி வாழ இறைவனைப் பணிகின்றேன்.

தூத்துக்குடி
27—10—57 கெ. வேலுமகராஜன் பி. காம்.

இனிக்கும் அருங்கனி

தமிழகம் ஈன்ற தவப் புதல்வரான ராஜாஜி அவர்களின் பாதங்களை மனத்தால் தொட்டு வணக்கம் செலுத்தி, 'வள்ளுவர் வாசக'த்தை வாசிக்கத் தொடங்கினேன்.

அறிவின் கிளைகளோடு அடர்ந்த தமிழக விருட்சத்தில் வளம் பெற்றுப் பழுத்து உதிர்ந்த, சுவைக்கு முன் இனிக்கும் அருங்கனி தான் வள்ளுவர் வாசகம். ராஜாஜி அவர்கள் அதனை உள்ளன்போடு பரிமாறுகிறார். இந்தத் தீங்கனியைக் கனி கசக்கவா செய்யும்?



நம் நாட்டின் பெரும்பாலோர், கண்களிருந்தும் குருடர்களாக, மேதாவிகளின் கருத்துக் கோவைகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறி அஞ்ஞான இருளில் அவதிப்படுகின்றனர். இக்கொடுமையைச் சகியாது தன்னலமற்ற அன்புடன் பஜகோவிந்தம், ரகுபதி ராகவ, சக்கரவர்த்தித் திருமகன் போன்ற அரும் பெரும் விருந்தினை நல்கி நல்வழி காட்டிய ராஜாஜி அவர்கள் மீண்டும் வள்ளுவர் வாசகத்தை அளிக்க முன்வந்தது பிறவிக் குருடன் ஒருவனுக்குக் கண் கொடுப்பது போலாகும். தமிழக மக்கள் தேனைப் பயன்படுத்திக் கொள்வார்களென்று நம்புவதோடு, தமிழ் மக்கள் சார்பாக ராஜாஜி அவர்களை வாழ்த்தி வணங்கி, அவருக்குத் தேக ஆரோக்கியத்தையும், இன்னும் நீண்ட ஆயுளையும் அருளுமாறு ஆண்டவனை வேண்டுகிறேன்.

தங்கவயல்
4-11-57

எஸ். மாதவகிருஷ்ணன்

பொய்யாமொழி

"அணுவைத் துளைத்து, அதனுள் எழு கடலைப் புகுத்திக் குறுகத் தறிக்கப் பெற்றது" வள்ளுவர் பொய்யாமொழி. மதிப்பிட முடியாத திருக்குறளை ராஜாஜியின் வாயிலாகத் தெளிவாக விளக்குவித்தலை எல்லோரும், சிறப்பாக மாணவர்கள் இனிது வரவேற்பர். தெய்வீக வாழ்க்கையும், உயிர்கள் மேல் அன்பும் குன்றிவரும் இந் நாட்களில், திருக்குறள் எல்லோருக்கும் வேண்டிய புத்திமதியை நல்ல முறையில் அளிக்கிறது. இந்த ஆக்கத்துக்கு ஊக்கமளிக்கும் கல்கிக்கு உளங்கனிந்த நன்றி.

இலங்கை
29—10—57

க. தியாகமூர்த்தி

கீழத்தூவல் விசாரணை

கீழத்தூவல் விசாரணைக் கமிஷன் அறிக்கை பற்றிய தலையங்கத்தைப் போற்றுகிறேன். அறிக்கை எல்லோரும் எதிர்பார்த்தமாதிரிதான் இருந்தது. சர்க்காரில் மந்திரிகளின் நேரடி நிர்வாகத்தில் இருக்கும் விசாரணை அதிகாரியிடமிருந்து வேறு விதமான அறிக்கையை எதிர்பார்க்க முடியுமா? கீழத்தூவல் விசாரணை வெறும் கண் துடைப்புத்தான் என்பதில் சந்தேகமில்லை.

கொழும்பு
29—10—57

ராம. சொக்கலிங்கம்

பரம்பிக்குளம் வெள்ளம்

"பரம்பிக்குளம் வெள்ளம்" தலையங்கமும், "வைக்கோல் தொட்டியில் நாய்" கார்ட்டூனும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. சென்ற இதழிலும் சரித்திர முக்கியத்துவ சம்பவம் போன்ற உண்மை விஷயங்கள் போற்றுதற்குரியவை. இம்மாதிரி விஷயங்களைத் தொடர்ச்சியாக வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

சிவகிரி
1—11—57

எஸ். எம். கார்க்கி

அவமானம் தரும் காரியம்


"வெகாலைப் பிரசாரம்" என்ற தலையங்கத்தைப் படித்தேன். முதுகுளத்தூர் தீ முற்றிலும் அணைவதற்குள், பெரியார் இம்மாதிரியானதொரு துவேஷப் பிரசாரம் செய்ய முன்வந்திருப்பது வருந்தத் தக்க விஷயம். நம நாட்டுக்காக, நம் நலனுக்காக, நம் ஒற்றுமைக்காக, நம் சுதந்திர வாழ்வுக்காக, நம் கண்ணெதிரிலேயே தங்கள் உயிரைத் தியாகம் செய்த மகான்களைக் கண்டும் நல்வழியில் செல்லாமல், இம்மாதிரி துவேஷ மனப்பான்மை கொண்டிருப்பது நம் நாட்டுக்கே அவமானமாகும்.

சென்னை
2—11—57

வி. ராமஸ்வாமி

கால்நடைச் செல்வத்துக்கு ஆபத்து

கால்நடைச் செல்வங்களை அன்னை மகாலக்ஷ்மிக்குச் சமமாக எண்ணி ஆராதனை செய்து பூஜித்து வருவது தமிழகத்தின் பண்பு. ஆனால் இன்று தமிழ்நாட்டின் பகுதிகளான சென்னை, ஜோலார்பேட்டை, சேலம் ஜில்லா ஓசூர், மதுக்கரை ஆகிய இடங்களில் தினம் ஒன்றுக்கு நூறு காளை, எருமைகளைக்



கொன்று இறைச்சியை ரயில் மூலமாகக் கோலார் தங்கவயல், பெங்களூர் பகுதிகளுக்கு எடுத்துச் செல்கின்றனர். மைசூர் ராஜ்யத்தில் மாடுகளைக் கொல்லக் கூடாது என்ற சட்டம் அமுலில் உள்ளது. சட்டம் அமுலானதிலிருந்து இன்றுவரை தமிழ்நாட்டிலிருந்து மைசூர் ராஜ்யத்துக்கு நாலு லட்சம் மாடுகளைக் கொன்று இறைச்சியாக அனுப்பியுள்ளனர். தமிழ் நாட்டில் சென்னை ராஜ்யத்தில் உழவுத் தொழிலுக்கு எருதுகள் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் ஏரானமான விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இது விஷயம் அரசாங்கத்துக்குத் தெரிந்திருக்க வேண்டும். எனவே, தமிழ் நாட்டின் கால் நடைச் செல்வத்துக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின், மாட்டிறைச்சி ஏற்றுமதியைச் சென்னை சர்க்கார் உடனே தடுக்க வேண்டியது அவசியமாகும்.

வாணியம்பாடி
31—10—57 வி. என். தத்தப்பன்

பாவை விளக்கு

அகிலன் அவர்களின் ''பாவை விளக்கு'' திகட்டாத காவியமாகத் திகழுகிறது. எளிய முறையில் இனிமையாகக் கதை சொல்லுகிறார். கதையின் இடையிடையே உயர்ந்த கருத்துக்கள் தென்படுகின்றன. எழுத்துத் துறையில் அகிலன் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றே கூறலாம்.

திருப்பூர்
29—10—57 இ. ரா. இராமசாமி

பெண்கள் முன்னேற்றம்

''மாதர்குல திலகங்கள்'' பகுதியை மிகவும் ரசித்து வாசித்து வருவோரில் நானும் ஒருத்தி. பெண்கள் முன்னேற்றத்துக்காகத் தாங்கள் ''கல்கி''யில் ஒரு பக்கம் ஒதுக்கி வருவதைக் கண்டு பெருமைப்படுகிறேன்.

இலங்கை
31—10—57 க. யோகாம்பிகை

சர்க்கார் கவனிக்குமா ?

அண்மையில் நமது மாநில அரசாங்கம் எங்கள் ''இசை வேளாளர்'' சமூகத்தை மிகவும் பின்தங்கிய வகுப்பு ஜாபிதாவில் சேர்த்து, அதற்கு ஹரிஜன வகுப்புக்குரிய சகல கல்விச் சம்பளச் சலுகைகளும் உண்டு என அறிவித்துள்ளது. ஆனால் அதன்படி இவ்விடம் உயர்நிலைப்பள்ளிகளில், நான்காவது பாரத்துக்குமேல் படிக்கும்போது இசை வேளாள சமூக ஏழை மாணவர்களுக்கு முழுச் சம்பளச் சலுகை தருவதில்லை. கேட்டால், அரசாங்கத்திலிருந்து எந்த விதத்திலும் சலுகை வரவில்லை என்கிறார்கள். பள்ளிக்கூடம் திறந்து ஐந்து மாதங்கள் ஆகியும் கிடைக்க வேண்டிய மற்றும் சில சலுகைகளும் கிடைக்கவில்லை. விரைவில் மேற்படி ஏழை மாணவர்களுக்கு வேண்டிய சலுகைகள் கிடைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாயூரம்
31—10—57 எல். பி. சீனிவாசன்

மாதர்குல திலகங்கள்



ஸ்ரீமதி கமலாதேவி

"விட்ட குறை வந்து தொட்டாச்சு" என்றால் ஸ்ரீமதி கமலா தேவி சட்டோபாத்யாயா அவர்களின் வாழ்க்கையைத் தான் பார்க்க வேண்டும்!

சிறு பிராயம் முதலே ஸ்ரீமதி கமலா தேவிக்குக் 'கலை' என்றால் தனி மோகம்.

அந்தக் கலையின் மேலிருந்த அபரிமிதமான மோகத்தின் காரணமாக ஒரு கலைஞரை மறுமணம் செய்து கொண்டார். சிறு பிராயத்திலே கைம்மையை அடைந்து விட்ட ஸ்ரீமதி கமலாதேவி, தமது சமுதாயத்திடையே புரட்சி செய்து அந்தக் கலைஞரை மணந்தார். தமது கணவர் இங்கிலாந்திலிருந்தார். துணிந்து தைரியமாகக் கடல் கடந்து தமது கணவரை அடைந்தார்! அவர் தனியாகக் கடல் கடந்து செல்ல வேண்டும் என்று துணிந்து விட்ட போது உற்றார் உறவினர் எல்லாரும் வியந்தனர்! சிறு பிராயம் முதலே ஸ்ரீமதி கமலாதேவிக்கு அசாத்தியத் துணிச்சல். இவர் கான்வெண்ட் பள்ளியில் படித்தார். சகமாணவிகளுக்கு இவர் ஒரு புரியாத புதிராக இருந்து வந்தார். நல்ல செல்வம் கொழிக்கும் குடும்பத்தில் பிறந்து விட்டு, ஏழை எளிய மாணவிகளுடன் நட்புறவு கொண்டால், மற்றவர்களுக்கு வியப்பாகத்தானே இருக்கும்!

அவருக்குக் கலைகளின்மீது அபரிமிதமான ஆசை காரணமாக, பல நாடக அரங்குகளில் தாமே வேஷம் தரித்து நடித்தார். தமது கணவர் இயற்றிய பல நாடகங்களில் நடித்தார்.

நாடகம், கவிதை முதலியவற்றில் மட்டுமின்றி தமது நாட்டுக் கிராமமக்கள் செய்யும் பண்டங்களின் கலையழகைப் பல முறை வியந்து வியந்து பாராட்டியிருக்கிறார். அவற்றைப் பற்றிப் பல கட்டுரைகள் மூலமும் பேச்சுக்கள் மூலமும் உலகறியச் செய்திருக்கிறார்.

ஆனால் இந்தப் பணியிலேயே ஈடுபட்டு இருக்க முடிய வில்லை. ஏனெனில் கலைப் பணியை விட நாட்டின் சுதந்திரப் போராட்டப் பணியே முதற் பணியாகி விட்டது. ஒத்துழையாமை இயக்கம் காந்தி மகான் ஆரம்பித்தவுடனே அதில் முதன் முதலிலேயே பங்கெடுத்துக் கொண்ட ஒரு சில மாதரசிகளில் ஸ்ரீமதி கமலா தேவியும் ஒருவர். முதற் சிறை வாசம் பிரசித்தி பெற்ற எர்வாடா சிறையில் கழிந்தது. அப்பொழுது தேசபக்தி கொண்ட பல தேசத் தலைவர்களும் அச்சிறையிலிருந்தனர். அதனால் சிறை வாசம் புதுமையாகத் தோன்ற வில்லை. ஆனால் அதற்குப் பிறகு இரண்டு முறை கைது செய்யப்பட்டு, பெல்காம் சிறையிலும் வேலூர் சிறையிலும் வைத்துக் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாகினர். அப்போது தான் அவருடைய உடல் நிலை சீர் கெட்டது! ஆயினும் தேச பக்திக் கனல் சிறிதும் குறைய வில்லை.

காங்கிரஸில் பிளவு ஏற்பட்டு வலது சாரிக் கட்சி இடது சாரிக் கட்சி என்று இரண்டு கட்சிகளாகப் பிரிந்தது. இடது சாரிக் கட்சியில் ஜெயப்பிரகாச் நாராயணன் போன்றவர்கள் இருந்தனர். ஸ்ரீமதி கமலாதேவி அந்தக் கட்சியில்சேர்ந்து தீவிரப் பிரசாரம் செய்தார்!

பாரத நாட்டுப் பெண் குலத்துக்கு ஸ்ரீமதி கமலா தேவி பல அருந் தொண்டுகள் புரிந்திருக்கிறார். அகில இந்திய மாதர் சங்கத்தின் பொதுக் காரியதரிசி பதவி வகிப்பது என்றால் எவ்வளவு சிரமம் என்பது எளிதில் ஊகிக்கலாம். அந்நாட்களில் மாதர்களிடையே விழிப் பூட்ட எத்தனை ஊர்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டும்; எத்தனை மேடைகளில் ஏறிப் பிரசங்கங்கள் புரிய வேண்டும்; எத்தனை ஊர்களில் சங்கங்கள் அமைக்கவேண்டும் என்பதை யெல்லாம் நீங்கள் ஊகிக்கலாம். இவற்றை வெகு வெற்றிகரமாகச் செய்ததாலேயே, மூன்று முறை பொதுக் காரியதரிசி பதவி ஸ்ரீமதி கமலாதேவிக்குக் கிடைத்தது. அத்துடன் ஒரு முறை உதவித் தலைவியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இப்படிப் பாரத நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலும் மற்றத் துறைகளிலும் அருந்தொண்டாற்றிய ஸ்ரீமதி கமலாதேவி தற்பொழுது தமது பழைய விருப்பத்துக்குரிய பணியில் ஈடுபட்டிருக்கிறார். பாரத நாட்டுக் கிராம மக்களின், கலைத் திறமை வாய்ந்த கைத் தொழிலை ஊக்குவிப்பதிலும், வளர்ப்பதிலும் ஈடுபட்டிருக்கிறார். சென்ற வாரம் பாரதநாடெங்கும் அவர் மேற்பார்வையில் கைத்தொழில் வாரம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதைப் பார்க்கும் போதுதான் 'விட்டகுறை வந்து தொட்டாச்சு" என்ற அடியின் பொருள் பளிச்சென்று புரிகிறது.



சின்னம்மன்பாளையத்தில் பொழுது 'பொல' 'பொல' வென்று விடிந்தது. ஒரே அகண்டாகாரமாய் விரிந்துக் கிடந்த வான வெளியின் கீழ 'சில்' லென்று வீசும் வாடைக்காற்றில் நார்க் கட்டிலில் சுருண்டு கிடந்தான் சின்னய்யன். முதல் நாள் மாலை குப்பன் அந்தச் செய்தியைச் சொன்னதிலிருந்து சின்னய்யன் குமைந்து கொண்டிருந்தான். அதுவே அவனுடைய ஒரு நாள் தூக்கத்தை அபகரித்துக் கொண்டது.

குப்பன் அவனிடம் அவிழ்த்து விட்ட முடிச்சு இதுதான். ''உன் அத்தைக் கிழவி 'இப்போ, அப்போ'ன்னு கெடக்குது. உன் அண்ணன்காரன் சொத்தை அமுக்கிவிடப் பார்ப்பான். நீ முந்திக்கோ!''

அத்தையிடமுள்ள ஆஸ்தியை அபகரிக்க என்ன செய்யலாம்? அவன் வக்ர மூளைக்குள் ஆயிரம் யோசனைகளும், திட்டங்களும் உருவாகி, உருத் தெரியாமல் போயின. சட்டத்தின் கழுகுக் கண்களினின்று தப்பினால் அத்தனை வழியும் வெற்றி தருபவைதான்.

உருவில்லாத யோசனைகள், எரிச்சல், பொருமை, சோர்வு எல்லாமாகச் சேர்ந்து அவனைச் சங்கடப்படுத்தின.

பாவம், அன்று அவனுக்குத் தூங்கக் கொடுத்து வைத்திருந்தாத்தானே? இரைக்க, இரைக்க வேகமாக ஓடி வந்தான் குப்பன். ''ஓ, சின்னண்ணே! கேட்டியா சங்கதி! கோட்டை வுட்டுட்டியே! அத்தைக் கிழவி போயிட்டுதாம்!'' என்றான்.

சின்னய்யன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். தூக்கமும், சோர்வும் தூர ஓடி ஒளிந்தன. ''என்ன, நிசமாவா? யார் சொன்னது? நீ அங்கே போனியா?''—சின்னய்யனுக்கு ஒரே படபடப்பு.

''என்னண்ணே! இன்னுமா நீ தூங்கிட்டு இருக்கே? நேத்து ராவே கிழவி கண்ணை மூடிக்கிச்சாம். நாலு கல்லு தொலைவுலே இருக்கே, ஒனக்குக் கூடத் தெரியலே' பார்த்தியாண்ணே!'' என்றான் குப்பன்.

''பாவி முத்தய்யன் ஏன் சொல்லப் போகிறான்? குப்பண்ணே! காரியமே கெட்டுப் பூடுச்சே! நாம் போட்ட திட்டம் முடியறதுக்குள்ளே கிழத்துக்குச் சாவு என்ன அவசரம்?'' என்று சீறினான் சின்னய்யன்.

''அதுக்காவ நீ செஞ்சது கொஞ்சமா அண்ணே? அத்தனையும வீணாய்ட்டுதே! உன் அண்ணன்காரன் இதுக்குள்ளாற அத்தனையுமில்லே சுருட்டிக்கிட்டிருப்பான்!''

''கேட்கிறபடி கேட்டு அவனைக் கக்க வச்சுட மாட்டேன்! இல்லே, பஞ்சாயத்து இருக்குது. பஞ்சாயத்திலே எந்தப் பயல் நமக்கு எதிரா பேச முடியும்? சின்னய்யனு, கொக்கான்னேன்!'' என்றவன் மீசையை முறுக்கி விரைப்பாய் நிமிர்ந்து குப்பனுடன் அடுத்த ஊரை நோக்கி நடந்தான்.

ஒரு காணி நிலத்துக்குச் சொந்தக்காரனான சின்னய்யனுக்கு அந்த ஊரில் 'அடாபிடிக்காரன்' என்று பெயர். இதை அவன் எதிரில் சொல்ல யாரும் துணிய மாட்டார்கள். அவனது கத்தி முனை மீசையும், விஷமமாக ஜ்வலிக்கும் கண்களும், ஆளைக் குடைந்தெடுக்கும் பேச்சும், யாரையுமே அவனிடம்



துன்பத்தின் எல்லையில்...

ராஜலக்ஷ்மி



நெருங்கி நேயம் கொள்ள விட்டதில்லை. சின்னய்யனும், மூத்தய்யனும் தாயாதிகள். இருவருடைய அப்பன்மார்களும் உடன் பிறந்தவர்கள். மூத்தய்யன் சுபாவத்தில் சாது; குணத்தில் சின்னய்யனுக்கு நேர் எதிரிடை. உழைப்புக்குச் சலிக்காத பிறவி. குழந்தைக் குட்டிக்காரன். 'ஊரோடு ஒத்து வாழ்' என்பதில் அவனுக்கு நம்பிக்கை உண்டு. அரைக் காணி நிலம், இரண்டு சோலி மாடுகள், ஒரு எருமை, நாலு குழந்தைகள். — இவைதான் மூத்தய்யனின் ஆஸ்தி.

சின்னய்யனின் சொத்தெல்லாம் அக்கிரமத்தில் சம்பாதித்தது. ஒரு காணி நிலம், ஒரு ஜோடிக் காளைகள், ஒரு கட்டை வண்டி, ஒரு ஓட்டு வீடு — இவை சின்னய்யனின் உடைமைகள்.

இருவருக்கும் உறவினளான அத்தைக் கிழவி ஒருத்தி, கையில் கொஞ்சம் ரொக்கத்துடன், கிராமத்துக்கு வந்து சேர்ந்தாள். அவள் வசதியாக வாழ்ந்து கெட்டவள். அவளுக்குப் பிள்ளைக் குட்டி ஒன்றும் கிடையாது. அவள் புருசன் பெட்டிக் கடை வைத்து நிறையச் சம்பாதித்தான். சம்பாதித்த பணத்தில் பெரும் பகுதியை அவனே செலவழித்து விட்டு, கண்ணையும் மூடினான். மிஞ்சினதை விற்று, துட்டைக் கையில் எடுத்துக்கொண்டு தன் மனிதர்களைத் தேடிச் சின்னம்மன்பாளையத்துக்கு வந்து சேர்ந்தாள் கிழவி. வந்தவள் முதலில் சின்னய்யனைத் தான் தேடிச் சென்றாள். ஆனால் சின்னய்யனுக்கு அவள் மடியில் 'கனம்' இருக்கும் விஷயம் தெரியாது. தெரிந்திருந்தால், வீடு தேடி வந்தவளை 'வா' வென்று அழைக்காமல் விரட்டி விடுவானா? அத்தைக் கிழவி கடைசியில் மூத்தய்யனிடம் போய்ச் சேர்ந்தாள்.

மூத்தய்யன் அத்தையை அன்புடன் வரவேற்று, ஆதரவு தந்தான். அவன் மனைவி, அவன் குணத்துக்கு ஏற்றபடி அமைந்தவள். ஆகையால் அத்தைக் கிழவி அங்கேயே தங்கி விட்டாள். மூத்தய்யனின் தரித்திரக் குடும்பத்துக்கு அவள் பாரமாக இல்லை; உபகாரமாகவே இருந்தாள். கையிலிருந்த பணத்துக்கு அந்த ஊரில் காணி நிலம் வாங்கினாள். நிலம் வாங்கிய பின்னர்தான் சின்னய்யன் விஷயமறிந்தான். தானாகச் சிக்கிய பசுவைத் தொழுவத்தில் கட்டிக் கொள்ளாமல், விரட்டி விட்டோமே என்ற ஆற்றாமை, தன்னுடைய ஏமாற்றம், அண்ணனுக்கு ஏற்றமாகி விட்டதே என்ற ஆத்திரம்: சின்னய்யன் துடியாய்த் துடித்துத் தவியாய்த் தவித்தான்.

விஷயமறிந்த நாள் முதலாகச் சின்னய்யன் அத்தைக் கிழவியைச் சுற்றிக் கும்மி அடிக்கலானான். அவளுக்காகப் பாலாய், தயிராய், காய், கீரையாய்க் கொண்டு போய்க் கொடுத்தான். தினம் ஒரு முறை அவளைப் பார்த்து, க்ஷேமம் கேட்டான். தன்னிடம் வந்து விடும்படி கெஞ்சுவான். பட்டணத்துச் சந்தியிலே, பழக்கப்பட்டவளாதலால், கிழவி அவனுடைய ஜால வித்தைக்கெல்லாம் மசியவில்லை.

சின்னய்யன் இத்தனை பாடுபட்டு என்ன? கிழவி ஒரு நாள் உடம்பென்று படுத்துக் கொண்டாள். 'இலவு காத்த கிளி' என்பார்களே அது போல், கிழவிக்குப் பல நாட்களாய்க் குல்லாய்ப் போட்டு, சமயம் பார்த்துக் கொண்டிருந்த சின்னய்யன் பெரிய ஏமாற்றமாக அடைந்தான். கிழவி அவனிடம் சொல்லிக் கொள்ளாமல் செத்துப் போனாள்.

சாவு வீட்டுக்கு வந்தவரில் சின்னய்யன் தான் அதிகமாய் அழுதவன். ஒரு வேளை உள்ளே குமைந்து கொண்டிருந்த ஆத்திரம் தான் அழுகையாய் வெடித்ததோ? கல் நெஞ்சக்காரன் கண்ணீரைத் தண்ணீராய்ச் செலவழிப்பதைக் கண்ட ஊரார் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள்.

கிழவியின் காரியங்களெல்லாம் முடிந்தன:

சின்னய்பனுக்கு நெஞ்சிலே ஜுரம் ஏறியது: சிரமத்துடன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். "என்ன அண்ணே! அத்தை சொத்தெல்லாம் உனக்குத்தானே கொடுத்து விட்டுப் போயிருக்கா? அது என்ன அவ நினைப்புக்குப் போதாதா?"

"என்ன, தம்பி! சொத்து எனக்கா கொடுத்தா? யார் சொன்னது?"

"அண்ணே! முழுப் பூசிணிக்காயைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கிறியே! நம்மகிட்டே சொன்னா என்ன அண்ணே?" என்றான் அவன் நயமாய்.

"ஒரு காணி நிலம் வாங்கினாங்களா? அதைச் சின்னம்மன் கோவிலுக்குத் தருமமா எழுதி வச்சுட்டாங்க. வேறே என்ன சொத்து இருக்குது?" என்றான் மூத்தய்யன்.

"அண்ணே! நம்மகிட்டே வேலை காட்டாதே, அண்ணே! காணி நிலம் வாங்கிக்

கோவிலுக்கு வைப்பாங்க? நீயும் சும்மா இருப்பே! அண்ணே! நெசத்தைச் சொல்லி விடு. ரொக்கமா எம்மாம் பணம் இருக்குது? சும்மாச் சொல்லு. நான் கேட்கவா போறேன்?" என்றான்.

"தம்பி! நீ அத்து மீறிப் பேசறே! உனக்கே இது நியாயமாங்கறேன்? நீ எதுனாச்சும் நெனச்சுக்கோ. எங்கிட்டே ஏதாச்சும் இருந்தால், நானே சொல்ல மாட்டேனா?" என்றான் முத்தப்பன்.

"நியாயம் என் பக்கம்தான் இருக்குது: பஞ்சாயத்திலே உன் விசயத்தைத் தீர்த்துடறேன், பார்! அண்ணனுக்குச் சொத்து மேலே இருக்கிற சொத்தும் தம்பிக்கு இல்லேன்னா, ஊரிலே பெரிய மனுசங்க இருந்துதான் என்ன சொகம்?" என்று உறுமி விட்டு, வேகமாய் நடந்தான் சின்னப்பன்,

★

நாட்டாண்மைக்காரர் வீட்டுப் பெரிய திண்ணையிலே பஞ்சாயத்து கூடியது. ஊரிலேயே பெரிய குடித்தனக்காரரான பஞ்சபூத பரமானந்தம் பிள்ளை, நாட்டாண்மை நாகலிங்கம், தர்மகர்த்தா துரைசிங்கம், மளிகை மாணிக்கம், பள்ளிக்கூட சுப்பையா இவர்களுடன், இன்னும் பலரைக் கூட்டி விருந்தான் சின்னப்பன். எப்படியும் தன் பக்கமே வெற்றி என்ற நம்பிக்கை அவனுக்கு.

பஞ்சாயத்தின் தலைவரான பஞ்சபூதம் வழக்கை விசாரித்தார். அத்தைக் கிழவி காணி நிலம் வாங்கியதற்கும், வாங்கிய நிலத்தைக் கோவில் தர்மமாக எழுதி வைத்ததற்கும், நாட்டாண்மை நாகலிங்கமும், தர்மகர்த்தா துரைசிங்கமும் சாட்சிகளாக இருந்தனர். முத்தப்பன் அதற்கான பத்திரத்தைப் பயபக்தியோடு பஞ்சபூதத்திடம் சமர்ப்பித்தான். பத்திரத்தைப் பார்த்த பரமானந்தம் நெற்றியைச் சுளித்தார்: "என்ன சின்னப்பா! விசயம் இவ்வளவு தெளிவா தீர்ந்துவிட்டது. அது தெரிஞ்சு என்னத்துக்கு அனாவசியமா பஞ்சாயத்து வேணுமின்னே? இந்த நிலத்திலே உங்கள் இரண்டு பேருக்கும் சொந்தம் கிடையாது. அந்த நிலத்திலே வருகிற வரும்படியே சின்னம்மனுக்கு உற்சவம் செய்யவும், ஏழைகளுக்கு அன்னமிடவும் செலவிடணுமின்னு இருக்குது. அதற்குப் பொறுப்பா இரண்டு பெரிய மனிதர்களின் பேரு வேறு போட்டிருக்குது. இதற்கு என்னு விபாத்தியம் போட்டே, நீ!" என்று கேட்டார் பெரியவர்.

சின்னப்பன் கள்ள ஒடுக்கத்துடன் உடலைக் குறுக்கி, கும்பிடு போட்டுக் கூறினான்: "பெரிய மனுசங்க நீங்க சொன்னால் நான் ஒத்துக்கிட மாட்டேனா? வழக்கு இத்தோடே இல்லே. அத்தைக் கிழவி கொண்டாந்த பணத்திலே நிலம் வாங்கக் கொஞ்சம் தான் செலவு செஞ்சிருக்குது. மீதம் பணத்தை முத்தப்பன் தான் மறைச்சிட்டான். எங்கிட்டே அத்தை எத்தனையோ முறை சொல்லிச்சு. அந்தப் பணத்திலே எனக்கும் பங்குண்டு. இதைப் பஞ்சாயத்து விசாரிக்கணும்."

முத்தப்பன் நடுங்கிப் போனான்: இந்த அண்டப் புளுகன் இன்னும் என்னவெல்லாம் சொல்லுவானோ? "பெரிய மனுசங்க எதிரே நான் பொய் சொல்லுவேனா? சாமி சாட்சியா நான் எந்தப் பணத்தையும் அமுக்கல்லே: அத்தையைக் கடைசி வரை வைச்சுக் காப்பாத்தினேன். அதுக்காவ நெலம் வாங்கி மிஞ்சின நூறு ரூபாய்ப் பணத்தை அது எனக்குக் குடுத்துது. வேறு ஏதுமில்லீங்க!" என்றான் முத்தப்பன்.

முத்தப்பனின் நல்ல குணத்தில் எல்லாருக்கும் நம்பிக்கை உண்டு. ஆனால் வழக்கென்று வந்தால் விசாரணை வேண்டுமே!

"உன் அத்தை நிலம் வாங்கினது போக மீதிப் பணம் நூறு ரூபாய்தான் இருந்தது என்றதற்கு என்ன அத்தாட்சி?" என்றார் மாணிக்கம்.

"எசமான், அப்படிக் கேளுங்க! மொதல்லே ஒன்றுமே இல்லேன்னவன், இப்போ நூறு என்கிறான்! இன்னும் எத்தனை பணம் இருக்குமோ?" என்றான் சின்னப்பன்.

"நீ சும்மா இரு சின்னப்பா!" என்று அவனை அடக்கிய பரமானந்தம், முத்தப்பனை நோக்கி, "இதற்கு நீ என்ன சொல்றே?" என்று கேட்டார்.

"நான் என்னத்தைச் சொல்வேனுங்க! நிலம் வாங்குறப்போ நாட்டாண்மைக்காரரும், தர்மகர்த்தா ஐயாவும் இருந்தாங்க: அவர்களுக்குத் தெரியும். கேட்டுப் பாருங்க!" என்றான் முத்தப்பன்.

"அத்தை எங்கிட்ட எத்தனை முறையோ சொன்னுங்க! மிச்சம் ஆயிரம் ரூபாய் போலே இருக்குதுன்னு. பஞ்சாயத்து நல்லா விசாரிக்கணும்" என்று கூசாமல் பொய் கூறினான் சின்னப்பன்.

அக்டோபர் மாதச் சிறுகதைப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற

"அடிமையின் காதல்"

என்னும் கதை அடுத்த இதழில் பிரசுரமாகிறது.

பரிசு பெற்றவர்: திரு வி. கே. மூர்த்தி. "கௌசிகன்"
2-25, வி. எஸ். வி. கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை - 4.

"அத்தை உன்னிடம் சொன்னதற்கு யார் சாட்சி?" என்றார் பரமானந்தம்.

சின்னய்யனின் சகாவான குப்பனும், சங்கிலிக் கறுப்பனும், தங்கள் காதாலேயே அத்தை சொல்லிக் கேட்டதாகச் சாதித்தனர். போக்கிரியான குப்பனுடைய சாட்சியும், கன்னம் வைக்கும் கலையில் தேர்ந்தவனான சங்கிலிக் கறுப்பனின் சத்தியமும், அங்கே எடுபடவில்லை.

பஞ்சாயத்தார்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்! பிறகு பஞ்சபூதம் தீர்ப்பைச் சொன்னார்:

"அத்தைக் கிழவி வீடு தேடி வந்தபோது, சின்னய்யன் அவளை ஆதரிக்கவில்லை. முத்தய்யன் அவளைத் தன்னிடம் வைத்துக் கொண்டு சாகும் வரை காப்பாற்றினான். ஈமச் சடங்குகளும் அவனே செய்தான். பிதுரார்ஜித சொத்து விசயமில்லே இது. அதனாலே கிழவி இஷ்டப்பட்டவனுக்குக் குடுத்தா! அதிலே பங்கு கேட்கச் சின்னய்யனுக்கு உரிமை இல்லே!"

பஞ்சாயத்தின் தீர்ப்பைக் கேட்ட சின்னய்யன், 'உங்க எல்லாரையும் நான் ஒரு கை பார்க்கிறேன்!' என்று கருவிய வண்ணம் ஆத்திரத்தோடு பல்லைக் கடித்தான்.

★

நட்ட நடுநிசியிலே, அந்தக் குடிசை 'திகு திகு' வென்று பற்றி எரிவது, சுற்று வட்ட கிராமங்களுக்குக் கூட நன்றாகத் தெரிந்தது. முதல் மூங்கில் 'சட, பட' வென்று வெடித்த சத்தம் கேட்டதுமே விழிப்புக் கண்ட முத்தய்யன், மனைவி, குழந்தை குட்டிகளோடு தீக்கிரையாகாமல் தப்பினான்.

குழந்தைகளும், மனைவியும் சூழ மரத்தடியில் நின்ற முத்தய்யனுக்கு நெஞ்சு பற்றி எரிந்தது. சமீபத்தில் தான் குடிசைக் கூரையைப் புதிதாக வேய்ந்திருந்தான். அத்தை கொடுத்த பணத்தில், குடிசையின் பின்புறம் குவித்திருந்த வைக்கோல் போரும் நெருப்பினால் நாசமாகி யிருந்தது.

முத்தய்யனின் நல்ல குணத்துக்கு ஊரே திரண்டு வந்து உதவி செய்தது. விசாரிக்க வந்த அனுதாபிகளில் சின்னய்யனைக் காணவில்லை. சின்னய்யன் வெளியூருக்குப் போயிருப்பதாகச் சொல்லிய குப்பன், முதலைக் கண்ணீர் வடித்தான். ஊரார் அனைவரும் ஒரே தீர்மானமாக, "இது சின்னய்யனின் வேலை தான்!" என்று கூறினார்கள்.

குடிசைக் கூரையும், வைக்கோற்போரும் நாசமானதில் அவனுக்கு நூறு ரூபாய் நஷ்டம். ஆனால், நஷ்டத்தைப் பெரிதாக நினைக்காது அவன் நடந்து கொண்ட விதம் தான் யாருக்கும் புரியாததாக இருந்தது.

மனச்சாட்சியை மதிப்பவனாகிய முத்தய்யனுக்கும், பஞ்சாயத்தாரிடம் 'நூறு ரூபாய் இருக்கிறது' என்று சொன்னது முள்ளாய்க் குத்திக் கொண்டிருந்தது. அத்தை அவனிடம் இருநூறு ரூபாய் கொடுத்திருந்தாள். உண்மையைச் சொல்லியிருந்தாலும், பஞ்சாயத்து அவன் பக்கம்தான் தீர்ப்புச் சொல்லும். சின்னய்யன் பிடுங்கிக் கொள்வானே என்ற

பயத்தில்தான் அவன் பொய் சொன்னான்: பொய் சொன்னதற்குத் தண்டனையாக, ஒரு நூறு ரூபாய், நீ விபத்தால் நஷ்டமாகியது. 'பொய் சொன்னதற்குத் தண்டனை' என்று திருப்திப்பட்டுக் கொண்டான் நல்ல மனம் படைத்த முத்தய்யன்.

சின்னய்யனுக்கும் நெஞ்சாரத் திருப்தி ஏற்பட்டது. தமக்கு எட்டாத பொருள் எதிரிக்கும் கிட்டாமல் போயிற்றே என்று. கூடிசையை எரித்து, தன் மன எரிச்சலைத் தணித்துக் கொண்டான் தம்பி.

★

நிழல் விரிந்த அந்த நெடுஞ்சாலையில் ஒரு கட்டை வண்டி சென்றது. ஆடிக் கொண்டு வந்த அந்த வண்டியிலே, தெம்மாங்குப் பாடிக் கொண்டு வந்தான் சின்னய்யன். அவன் பாட்டுக்குக் கட்டை வண்டி 'லொடக் லொடக்' என்ற சத்தத்துடன் தாளமிட்டது. சின்னய்யன் மேனிபுரம் செல்லும்போது வண்டி நிறைய மூட்டைகளுடன் போனான். திரும்பும்போது அத்தனையும் மடி நிறையப் பணமாகியிருந்தது. அவனுடைய அளவற்ற உற்சாகத்துக்குக் கேட்பானேன்?

நெல் மூட்டைகளை நிறைய ஏற்றிக் கொண்டு, ராட்சதனைப் போல எதிரே ஓடி வந்த லாரிக்கு வழி விட நினைத்து, தன் வண்டியை ஓரமாக ஓட்டினான் சின்னய்யன். அருகில் வந்து அலறி நின்ற லாரியைக் கண்டு மிரண்ட காளைகள் பள்ளத்தில் இறங்கி விட்டன. வண்டியின் ஏர்க்காலிலே உட்கார்ந்திருந்த சின்னய்யன், தூக்கித் தூர எறியப்பட்டான்.

அலங்கோலமாய் விழுந்த வண்டிக்காரனைக் கண்ட லாரி டிரைவர் பதறிப்போனான். அவனைத் தூக்கி லாரியில் போட்டுக் கொண்டு, மேனிபுரம் ஆஸ்பத்திரிக்கு ஓடினான்.

ஆஸ்பத்திரியின் பெரிய கட்டடத்தையும், புதிய மனிதர்களையும் கண்டு சின்னய்யன் மிரண்டு விட்டான். வலது கால் எலும்பு முறிந்திருப்பதை அறிந்து அவன் துக்கம் அதிகமாகியது.

கட்டிலருகே தொங்கிய முகத்துடன் வந்து நின்ற அண்ணனைக் கண்டதும் தம்பி, 'ஓ' என்று அலறி அழுதான்.

"அண்ணே! இப்படியாயிப்பூட்டேனே!" என்று அழுத தம்பியை அண்ணன் தடவிக் கொடுத்து, ஆறுதல் சொன்னான்: "தம்பி! நான் இருக்கேன், அழாதே, தம்பி! இந்தா, இதைச் செலவுக்கு வைச்சுக்கோ!" என்று நீல நிற நோட்டு ஒன்றை நீட்டினான்.

ஆஸ்பத்திரியின் விளக்கு வெளிச்சத்தில், அண்ணன் கையில் பணத்தைக் கண்டதும், அவன் மனசில் ஊசி குத்துவது போன்ற வலி உண்டாயிற்று.

"தம்பி! இதை வாங்கிக்கோ!" என்று கையிலே நோட்டைத் திணித்த, அண்ணனைப் பார்க்கவே அவனுக்குக் கூசியது.

அவன் கையிலிருந்து நழுவி விழுந்தது ஒரு நூறு ரூபாய் நோட்டு!

கி.ரா.கோபாலன் குடும்ப உதவி நிதி

திரு ஆர். எஸ். சுப்பிரமணியம்,
ஜோடா, ஒரிஸ்ஸா 25 00

திரு கி. வா. ஜகந்நாதன், ஆசிரி
யர், கலைமகள், சென்னை 20 00

தென்னிந்திய சங்க மாதர்கள்,
கதமா, ஜாம்ஷெட்பூர் 20 00

திரு பி.எஸ்.காந்தி,கோலாலம்பூர் 15 00

திரு ஆர். சாந்தாராம், பூனா 10 00

திரு ஏ. ஏ. ராமதாஸ், பூனா-3 10 00

திரு எ. மு. செ. ஷாகுல் ஹமீது.

திரு அ. மு. மு. செய்யது இப்ரு
ஹிம், பினாங்கு 10 00

திரு எல். பி. ராஜகோபாலன்,
ஹட்டன், கொழும்பு 10 00

திரு ஆர். சிவசுப்பிரமணியன்,
தெளளீச்வரம் 10 00

ஒரு அன்பர், பம்பாய் 5 00

ரூ. 5-00 கொடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள் ஆர். சீனிவாசன், அந்தேரி, பம்பாய்; டி. ராஜகோபாலன், சதாரா ரோடு; எஸ். டி. அருணாசலம், சிவகாசி; ஜ. சாமிநாதன், சென்னை-28; கே. சுப்பிரமணியம், 'சுப்ரி', கோயமுத்தூர்; எம். கிருஷ்ணமூர்த்தி, பர்ன்பூர், அசன்ஸால்; வி. சீனிவாசன், அடையாறு, சென்னை - 18; எம். எம். இப்ராஹிம், இராமநாதபுரம்; ஒரு தமிழர், கௌஹாத்தி; பி. வி. கிருஷ்ணமூர்த்தி, ஜேகே நகர்; திருமதி கோமளம்மாள், அலிப்பூர், கல்கத்தா; திருமதி எம். எஸ். ருக்மிணிஅம்மாள், கும்பகோணம்; திருமதி கிரிஜா, பூந்தோட்டம்; திருமதி கே. அலமேலு, கல்கத்தா; குமாரி கலைவாசனு, கும்பகோணம்; திரு வி. எம். சங்கரன், கடலூர் 4 00; திரு கர்மசாரி, பம்பாய் 3 00; திரு டி. ஆர். எம். சோமசுந்தரம், சீர்காழி 3 00; திரு மணியம், திருவல்லிக்கேணி, சென்னை - 5 3 00; திருமதி பி. எஸ். கமலா, சென்னை-6 3 00 திரு டி. எஸ். சீனிவாசன், விசாகப் பட்டணம் 3 00; திரு ஏ. கே. பழநிசாமி, திருப்பூர் 3 00; திரு எம். ஆர். நாகராஜன், பில்லூர் 2—22.

ரூ. 2 00 கொடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள் வி. பி. சுப்பிரமணியம், வேலூர்; கே. ஜி. கிருஷ்ணன், ஆவடி, சென்னை; எஸ். வெங்கடராமன், டெக்டோக்ரா, தார்ஜிலிங்; கே. ஏ. வி. ஐயர், கரக்பூர்; வி. நாராயணசாமிப் பிள்ளை, சொக்கநல்லூர்; வி. லக்ஷ்மணன், கோத்தகிரி; எஸ். திருமலை, தார்க், மத்திய பிரதேசம்; ஆர். எஸ். கோவிந்தசாமி, கதாங்கஸ்லவி; கே. வி. சேஷாத்திரி, திருவல்லிக்கேணி, சென்னை - 5; என். வி. இப்ராஹிம், ஆலாந்துறை; திருமதி ராதா, கல்கத்தா - 29.

திரு நரசிம்மன், தார்க், மத்திய பிரதேசம்; 1-51. திரு எஸ். பெரிய நாடார், மேலகிருஷ்ணபுதூர் 1-50; திரு கனக பழனி மன்னன், புதுவை 1-11; திரு எஸ். கிருஷ்ணன் பேரூர் 1-05.

ரூ. 1-0-0 கொடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள் ப. பாலசுப்பிரமணியம், தலைமை ஆசிரியர், சிவியம்பட்டி; ராமசுப்பன், திருப்பரங்குன்றம்; ஆர். லக்ஷ்மிநாராயணன், தாணு, பம்பாய்; எஸ். சங்கரசுப்பிரமணியம், தாணு, பம்பாய்; என். வெங்கடாசலம், தாணு, பம்பாய்; திருமதி பரிமளா சுப்பிரமணியம், அகூர், திண்டிவனம்; பி. செல்வராஜ், அணைக்கட்டு மதுராந்தகம்; ஆர். ராஜகோபாலன், திருமணஞ்சேரி; ஆ. ராமகிருஷ்ணன், திருக்கனூர்; குதிரை மார்க் காப்பி ஒர்க்ஸ், சேலம்; சி. ஜி. ராமமூர்த்தி, தார்க், மத்திய பிரதேசம்; ஆர். வெங்கடசுப்பையர், தனிக்கொத்தனூர்; ஆர். கிருஷ்ணசாமி, திண்டுக்கல்; பா. வீராசாமி, வைகை அணை போஸ்டு; டி. கிருஷ்ணமூர்த்தி, பெரிய நாயக்கன் பாளையம்; கே. ஆர். பட்டாபிராமன், பூனா-3; என். எல். சுப்பராமன், தாம்பரம்; ஆர். சுப்பராமன், மதனபள்ளி; வி. எஸ். ராமநாதன், வேலூர்; வி.ஏ. பி.ராமன், ஜபல்பூர்; திருமதிகள்: விசாலாக்ஷி பத்மநாபன், மேட்டூர் அணை; சாவித்ரிபாய், சென்னை-17; எஸ். ஜயா, கயத்தாறு; ஜானகி நாராயணசாமி, மயிலாப்பூர், சென்னை - 4.

மதுரை தமிழ் எழுத்தாளர் சங்க மூலம் வசூலான ரூ. 51-க்கு விவரம்:

திரு நா. பார்த்தசாரதி, செய
லாளர், மதுரை எழுத்தாளர் சங்கம் 10 00

திரு பட்டாபி நாராயணன், 5 00

திரு தி. சேஷாத்திரி, மதுரை 3 00

திருமதி அ. பத்மாவதி அம்மாள்,
மகாராஜபுரம் 3 00

இந்து கலாசாலை மாணவர்கள்,
வத்திராயிருப்பு 3 00

பாரதி புத்தக நிலையம், மதுரை 2 00

வித்துவான், திரு வீ. ப. நட
ராஜன், பசுமலை, மதுரை 2 00

திரு இளம் பாரதி, மதுரை 3 00


திரு கே. வி. கிருஷ்ணசாமி, புதுப்
பட்டி 2 00

ரூ. 1-0-0 கொடுத்த அன்பர்கள்: திருவாளர்கள், மு. அருணாசலம், மதுரை: ஆ. சண்முகவேலன், மதுரை; ஜ. கமலக்கண்ணன், மதுரை; கி. இலக்குமிகாந்தன், மதுரை; வ. வி. சங்கரப்பன் புதுப்பட்டி; ம. சீதாராமன், புதுப்பட்டி; கே. எஸ். வி. சங்கரமூர்த்தி நாயுடு, புதுப்பட்டி; சுப்பையா நாயுடு, புதுப்பட்டி; ஏ ராகவன், புதுப்பட்டி; கே. என். கிருஷ்ணசாமி, புதுப்பட்டி; அரிகரகிருஷ்ணமூர்த்தி, வத்திராயிருப்பு; இரா. வேலுசாமி சன், வத்திராயிருப்பு; கே. சங்கரநாராயணன், வத்திராயிருப்பு; எஸ். என. எஸ். மணி, கல்வி ஏஜண்டு, வத்திராயிருப்பு; எஸ். குப்புசாமி நாயுடு, இலக்கியப் பண்ணை, வத்திராயிருப்பு; சக்ரதாரி, மதுரை; இளம் பெருவழுதி, மதுரை; திருமதி கி. ருக்மிணி, புதுப்பட்டி; அரை எட்டு அளித்தவர்கள்: மு உலகநாதன், மதுரை; குமார தேவன், மதுரை.

முன் வசூல் ரூ. 929 19

ஆக ரூ. 1265 58

பாவை விளக்கு



அத்தியாயம் 27

உள்ளதைச் சொன்னால்...

தணிகாசலத்துக்கு வேலை போய் விட்டது.

சமஸ்தானச் சட்டத்தில் நியாயமிருந்தது. அதில் கதை எழுதியதற்காக யாரையும் வேலையை விட்டு நீக்க இடமில்லை. ஆகவே சட்டப் புத்தகத்தில் உள்ள குற்றங்களைத் தேடிப் பிடித்துத் தணிகாசலத்தின் மீது சுமத்தினார் நாகநாதன். தாற்காலிகமாக வேலையில் அமர்ந்தவர்களை நீண்ட கால அனுபவம் பெற்ற மேலதிகாரிகள் என்ன வேண்டுமானாலும் செய்ய வழி உண்டு. தம்மால் முடிந்ததைச் செய்து விட்டார் தலைமை இன்ஜினியர். அவருடைய கண்ணாடிக் கண்களுக்குத் தணிகாசலம் மிகப் பெரிய புரட்சிக்காரனாகவோ, பிசாசாகவோ, பூதமாகவோ தோன்றியிருக்கக்கூடும். திரும்பிய பக்கமெல்லாம் திருடர்களுக்குப் போலீஸ் நிற்பதுபோல் தோன்றுவதில்லையா?

தணிகாசலம் வேலை நீக்க உத்தரவைப் பெற்றுக் கொண்டு அலுவலகத்திலிருந்து வெளியில் வந்தான். பரம்பரை பரம்பரையாய்ச் சமஸ்தானத்துக்கு உழைத்து வந்த பெருங்குடியின் வாரிசுக்கு அன்றிலிருந்து அங்கே வேலையில்லை.

ரங்கராஜன் தன்னிடம் ஏன் காலையில் அப்படி நடந்து கொண்டார் என்பது அவனுக்கு விளங்கியது. அவர் கொடுத்த ஐம்பது ரூபாய் சட்டைப் பையில் பத்திரமாக இருந்தது. நடக்கப் போவதை அறிந்தே அவர் ஆபீசுக்கு வரவில்லை போலும். வாழ்க்கைக்கும் மனச்சாட்சிக்கும் இடையில் அகப்பட்டுத் தவிக்கும் அவருடைய அன்பு அவனுக்குச் சிறிது ஆறுதல் தந்தது. அவர் கொடுத்த பணத்துக்கு இரண்டு வகையில் மதிப்பு அதிகம். ஒன்று ஐம்பதுரூபாய் கைவிட்டுக் கொடுக்கக் கூடிய நிலையில் இல்லாத ஏழை அவர். இரண்டு, இனிமேல் காலணாவாக எண்ணி இறுக்கிப் பிடித்துச் செலவு செய்யும் காலமும் வந்து விட்டது.

வேலை போன செய்தியை அவன் ரகசியமாக வைத்துக் கொள்ள நினைத்தான்: தாயாருக்கும்கூடத் தெரிவிக்க வேண்டாம். கௌரியைத் துரதிர்ஷ்டக்காரி என்று தூற்றுவார்கள் பலர். அவளுடைய பாட்டி வீரம்மாளுக்குச் செய்தி எட்டினால், அவள் கிராமத்திலிருந்து ஓடி வந்து, 'அப்போதே சொன்னேன்,



கேட்டார்களா? பெண்ணைப் பாழுங் கிணற்றில் தள்ளி விட்டார்களே என்று ஒப்பாரி வைப்பான். ஊரைக் கூட்டித் தமுக்கடிக்கும் புண்ணியவதி அவள். அதன் பிறகு பொன்வயலில் அவன் தாயாரோ, பாட்டியோ, மனைவியோ தலை நிமிர்ந்து நடக்க முடியாது. தணிகாசலத்தைச் சுட்டிக் காட்டிப் பெருமை பேசிக் கொண்டவர்கள் அவர்கள்.

மத்தியானச் சாப்பாடு தேவகியின் கல்யாண விருந்தல்லவா! உடை மாற்றிக் கொண்டு உல்லாசமான தோற்றத்தில் கிளம்பினான். யாருக்குத் தெரிந்தாலும் தேவகிக்குத் தெரியக் கூடாது. கண்ணாடியை எடுத்து முகம் உற்சாகமான நிலையில் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான். நாடகத்துக்கு வேஷம் போட்டுக் கொள்பவனின் மனநிலை அவனுக்கு. கண்ணாடியில் சிரித்துப் பார்த்துக் கொண்டான்; அழுகைதான் வெடித்தது. வேலை போனதால் முறிந்து போன அவனது முதுகெலும்பின் உச்சியில், தோளுக்கொருவராகத் தாயார் கல்யாணியும், மனைவி கௌரியும் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். குடும்பச் சுமை தோளை அழுத்தும்போது நடிப்புச் சிரிப்பு சிரிக்க முடியுமா?

என்றாலும் அவன் தெருவில் கைவீசி நடந்தான். நாகநாதனை நம்பித்தானா கடவுள் மனிதனைப் படைத்திருக்கிறார் என்ற வீறாப்பு.

தேவகி புது மாப்பிள்ளையை ஓடி ஓடி உபசரித்தாள். நீண்ட தலை வாழை இலையைப் போட்டு, சமையல் கை வரிசையைத் தன் பரிமாறுதலில் காண்பித்தாள். தணிகாசலம் தானாக வரவழைத்துக் கொண்ட குதூகலத்துடன், சாப்பாட்டு மன்னரான தன் மாமனாரை நினைத்துக் கொண்டு, வடை பாயாசத்தை ஒரு கை பார்த்தான். சாப்பிட்டுக் கை அலம்பிய மறுகணமே புறப்படுவதற்கு அவசரப்பட்டான். தேவகிக்கு முன்னால் தன் நடிப்புக் கலை தோற்றுப் போய் விடும் என்ற பயம் அவனுக்கு ஏற்பட்டு விட்டது.

"ஆபீசுக்குப் போக வேண்டும், அக்கா! நேரமாகி விட்டது!" என்று விடைபெற்றுக் கொண்டான்.

"லீவு நாளில் அங்கே என்ன செய்கிறாய்? வாரத்துக்கு ஒரு நாளாவது வந்து போய்க் கொண்டிரு!" என்று தேவகி வழியனுப்பினாள்.

தப்பிப் பிழைத்த உணர்ச்சியுடன் அறைக்கு வந்து சேர்ந்தான்.

வயிற்றுப் பிழைப்பில் மண்ணை அள்ளிப் போட்ட அவன் எழுதிய இரண்டாவது கதை அன்றைக்குப் பத்து ரூபாய் அன்பளிப்பைக் கொண்டு வந்து கொடுத்தது. எல்லாப் பணத்தையும் சேர்த்து எண்ணிப் பார்த்தான். எழுபத்தைந்து ரூபாயும் சில்லறையும் இருந்தன.







இரண்டு மாத நடப்புக்கு இடைஞ்சல் இல்லை. இடையில் கதைகள் எழுதினால் ஐந்து - பத்து கிடைக்கும்.

பத்திரிகைகளில் வேலை காலியிருப்பதாக வந்த விளம்பரங்களுக்கெல்லாம் விண்ணப்பம் அனுப்பினான். வேலை ஒன்றும் கிடைப்பதாக இல்லை. இருக்கும் பொழுதை வீணாக்காமல் படிப்பதும் எழுதுவதுமாகக் கழித்தான். பிற்பகல் நேரங்கள் பெரும்பாலும் ஊர் சுற்றுவதிலும், மாலை நேரங்கள் மாணவர் மத்தியிலும் சென்றன. ஊர் சுற்றிப் பார்ப்பதில், புத்தகங்களில் தெரிந்து கொள்ள முடியாத உண்மைகள் சில தெரிந்தன. மனித சரித்திரத்தின் ஒரு ஏட்டை நேரடியாகப் புரட்டிப் படிக்கும் அறிவைக் கண்ணபுரத்துத் தெருக்கள் வாயிலாகப் பெற்றான்.

சிறுகதைகள் பத்துப் பன்னிரண்டு எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பினான். ஐந்தாறு கதைகள் திரும்பி வந்தன; மூன்று நான்கு வெளி வந்தன; ஓரிரண்டு திரும்பியும் வரவில்லை; அச்சாகவுமில்லை; கண்ணபுரத்திலேயே அப்போது மாதப் பத்திரிகை ஒன்று நடந்து கொண்டிருந்தது. திரும்பி வந்த கதைகளை எடுத்துக் கொண்டு அதன் ஆசிரியரிடம் சென்றான். தணிகாசலத்தின் பெயரை அவர் தெரிந்து கொண்டதால் கதைகளை வாங்கிக் கொண்டு, ''நாளைக்குச் சாயங்காலம் வாருங்கள்; படித்துச் சொல்கிறேன்'' என்று அனுப்பினார்.



மறுநாள் அந்த ஆசிரியரின் கருத்து வெளிப்பட்டது :—

''சிறுகதைகளை எழுத அதிக அநுபவம் வேண்டியதில்லை. உங்கள் வயதே இதற்கும் போதும். நீங்கள் எப்படியோ சுமாராக எழுதத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கதைகள்கூடப் போடக் கூடிய கதைதான். ஆனால்...''

இந்த 'ஆனால்' வந்தவுடன் ஏமாற்றத்துக்குத் தயாரானான் தணிகாசலம்.

''ஆனால் நீங்கள் எழுதுகிற விஷயங்கள் பொல்லாத விஷயங்களாக இருக்கின்றன. திருட்டு வியாபாரம், லஞ்சம், ஏழைகள் கஷ்டம், அன்னிய ஆதிக்க எதிர்ப்பு - இப்படி எழுதினால் நாங்கள் எப்படிப் போடுவது?''

''வாழ்க்கையில் நடப்பதைத்தானே எழுத வேண்டும்? இந்த அக்கிரமங்களை என்னால் சகிக்க முடியவில்லை'' என்றான் தணிகாசலம்.

''வீண் வம்பை எங்களுக்கு விலை கொடுத்து வாங்கத் தேவை இல்லை'' என்று அவன் கதைகளை அவனிடமே திருப்பி நீட்டினார் ஆசிரியர்.

தணிகாசலத்தின் முகம் கன்றியது. ''நாட்டில் நடப்பதை வெளியில் சொல்வது கூடத் தப்பா?'' என்று தயங்கிக் கொண்டே கேட்டான்.

ஆசிரியருக்குக் கடும் கோபம் வந்து விட்டது. ''உள்ளதை வெளியில் சொன்னால் உள்ளே

போக வேண்டியதுதான், சிறைக்குள்ளே!'' என்றார் கோபமாக.

தணிகாசலத்தை பயம் சூழ்ந்து கொண்டது. புதுப் பெண்டாட்டியைக் கைப் பிடித்த வேளை பொல்லாத வேளைபோல் இருக்கிறதே! அதற்கு மேல் அங்கு நின்றால் இன்னும் எதையாவது சொல்லி அந்த ஆசிரியர் பயமுறுத்தப் போகிறார் என்று மெதுவாக எழுந்தான்.

''நீங்கள் சென்னைப் பத்திரிகைகளில் எழுதிய காதல் கதைகளைப் படித்தேன். அப்படி ஏதாவது எழுதிக் கொண்டு வந்தால் போடுகிறேன்.

தணிகாசலம் அப்பொழுது தான் வெளிவந்த கதைகளையும் திரும்பி வந்த கதைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தான்.



'இருபது ரூபாய்' என்ற ஒன்றைத் தவிர மற்றவை காதல் கதைகள். 'உண்மையைச் சரியாக அறிந்து கொள்ளும் காலமும், வெளியிடும் காலமும் இன்னும் வரவில்லை; பொறுத்திருந்து கற்றுக் கொள்வோம்.' — இந்த நினைவோடு தணிகாசலம் புறப்பட்டான்.

திரும்பும் வழியில், கடைத் தெருவின் ஓரத்தில், பங்கீட்டு அரிசிக் கடை ஒன்றின் எதிரில் எறும்புச் சாரைபோல் ஜனத்திரள் நின்றது. அது சாமான்களின் கட்டுப்பாட்டுக் காலம். பொது மக்களின் தேவைகளைக் கட்டுப்படுத்தி யுத்தப் பேயின் நெருப்பு வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தார்கள். தணிகாசலம் அருகில் நின்று வேடிக்கை பார்த்தான்.

ஆண், பெண், குழந்தை, கிழம் அனைத்தும் கூட்டமாய் அங்கு நெருக்கி அடித்துக்கொண்டு நின்றன. கைகளில் பங்கீட்டுச் சீட்டுகள், கூடைகள், துணிப்பைகள், சில்லறை. ....

கால் கடுக்க, கை வலிக்க நின்ற மனிதர்களைப் பார்த்துக் கொண்டு தணிகாசலம் நின்றான். குடும்பத்தை இங்கே அழைத்துக் கொண்டு வந்தால் தனக்கும் இந்தக் கதிதான். பொன் வயல் நிலைமை இதைவிட மோசமாக இருந்தாலும் மங்களத்துப் பாட்டி சமாளித்துக் கொண்டாள்.

கூட்டத்தின் பிற்பகுதியில் பரட்டைத் தலைப் பெண்ணொருத்தி கந்தலை இழுத்துப் போர்த்துக் கொண்டு கூடையும் கையுமாக நின்றாள். இருபது இருபத்தைந்து வயதிருக்கும். அவளுக்குப் பக்கத்தில் ஐந்து வயதுப் பையன் ஒருவன் அவளுக்குப் பெருந்தொல்லை கொடுத்துக் கொண்டு நின்றான்.

அவன் பாடிய பாட்டு இது :-

''ஆத்தா, பசிக்குது! ஆத்தா, பசிக்குது! ஆத்தா...''

''கொஞ்ச நேரம் பொறுடா; அரிசி வாங்கிக் கஞ்சி காய்ச்சி ஊத்தறேன்'' என்றாள் தாய்க்காரி.

''இப்போ பசிக்குது. ஆத்தா! இப்போ பசிக்குது...''

''அட! பொறுத்துத் தொலைடா!''

பொறுத்துத் தொலைக்கவில்லை அவன். அவளைத் துளைத்தெடுத்து விட்டான். குதியாய்க் குதித்து, அவள் சேலையைக் கிழித்துக் கூடையைத் தட்டிவிட்டு, சில்லறையைப் பிடுங்கி எறிந்து ஆர்ப்பாட்டம் செய்து விட்டான்.

பசிப்பல்லவி கீறல் விழுந்த இசைத்தட்டின் கீதம் போலத் திரும்பத் திரும்பத் துரித கதியில் ஒலித்தது.

''ஆத்தா! பசிக்குது, பசிக்குது, பசிக்குது! ஏ, ஆத்தா...''

''டேய், சும்மா இருக்க மாட்டே?'' என்று கூறி உருட்டி விழித்தாள் பெண் பிள்ளை.

பையனைப் பசி சும்மா இருக்க விடவில்லை. 'வள்'ளென்று வெறி நாய்க் குட்டிபோல் பெற்றவளின் தொடையில் விழுந்து பிடுங்கினான். பல்லோடு ஒரு துண்டுச் சதை ஒட்டிக் கொண்டு வந்திருந்தால் அதை அவன் மென்று தின்றிருப்பான். சதை வரவில்லை; கந்தல் துணி வந்தது; அதை அவன் வெறுப்போடு துப்பி விட்டான்.

வந்தவள் பேயானாள். ஐந்து வயதுப் பாலகனை நடுத் தெருவில் போட்டுப் புரட்டி எடுத்து விட்டாள். கூடையை இறக்கி வைத்து விட்டு அவன் முதுகுத்

தோலைப் பொரித்தெடுத்த அப்பள மாக்கிவிட்டாள். அடித்தாள், கிள்ளி ஞள், குட்டிஞன், காதைப் பிடித்துத் திருகிஞள்.

அப்போதாவது பையன் பாட்டை நிறுத்திஞஞ? நெஞ்சிலிருந்து வருகிற பாட்டா, அதை நினைத்தவுடன் நிறுத்து வதற்கு? கொதித்து எழுந்த கும்பி வடித்தெடுத்த முகாரி ராக ஆலாபனை யல்லவா?... தொண்டை கிழிய வானம் பிளக்க அந்தப் பிள்ளை கத்திஞன்.

தணிகாசலத்தின் கண்களில் நீர் வடிந் தது. எவளோ பெற்றெடுத்த பிள்ளைக் காக இவன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான். பெற்றவளும் கை ஓயும் வரையில் அடித்து விட்டு, பிறகு அவ னைத் தூக்கி முகத்தோடு முகம் வைத் துக் கொஞ்சிஞள், தேம்பி அழுதாள்.

தணிகாசலம் தன்னையே கேட்டுக் கொண்டான்: 'எதற்காக அவனை அடிப் பானேன்? இப்போது அழுவானேன்?' அவனே அதற்குப் பதிலும் சொல்லிக் கொண்டான்: 'பசிக்கொடுமை அடிக்க வைத்தது; பாசக் கொடுமை அழ வைக்கிறது.'

உடனே தன் குறிப்பு நோட்டை வெளியில் எடுத்து, 'பசியும் பாசமும்' என்ற தலைப்பை எழுதிக் கொண்டான். சிறுகதையின் வித்தொன்று அவன் உள் ளத்தில் விழுந்துவிட்டது.

கதை எழுதி அநுபவம் பெற்ற புத்தி சாலிகள், "வாழ்க்கையை எழுத்தா ளன் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்க வேண்டுமே தவிர, அதன் சிக்கல்களில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது" என்று அறிவுரை வழங்கி இருக்கிறார்கள். தணிகாசலம் அதுவரையில் 'கதை எப் படி எழுதுவது?' என்று ஒரு நூலைக் கூடப் படிக்கவில்லை.

அவனுக்கு வாழ்க்கையிலிருந்து ஒதுங் கிப் போகத் தெரியவில்லை. அவளுக்கு அரிசி கிடைக்கும் வரையில் அங்கேயே நிற்பது என்று முடிவு கட்டிஞன்.

அவளுக்கு அன்றைக்கு அரிசி கிடைக் கவே இல்லை.

'க்யூ' வரிசையில் முக்கால் பகுதி முடிந்தவுடன், அன்றைக்கு வியாபாரம் தீர்ந்ததென்று கை விரித்துவிட்டார்கள் கடைக்காரர்கள். அரிசி தீர்ந்து விட்ட தாம். சரியாக அந்தப் பெண் பிள்ளை யின் முறை வரும்போதுதாஞ இந்தச் சங்கடம் மூளைக்க வேண்டும்? அவளு டைய முகத்தில் அறைவதுபோல் கடைக் கதவைப் படீரென்று மூடிஞர்கள். ஒரு அடி அகலத்துக்கு இடைவெளி தெரிந் தது; கடைசிப் பலகை போடவேண்டி யதுதான் பாக்கி.

பின்ஞல் இருந்த கூட்டம் யார் யாரையோ வாயில் வந்தபடி திட்டிக் கொண்டு கலைந்தது. பெண் பிள்ளையும், பையனும், யாரோ ஒரு நாகரிக மனி தருமே மிஞ்சிஞர்கள். காசை நீட்டிப் பிச்சை கேட்பது போல் அந்தப் பெண் பிள்ளை கேட்டாள்; தன் பையனைச் சுட் டிக் காட்டிஞள்; காரியம் நடக்கவில்லை.

அத்துடன் நின்றிருந்தால் தணிகா சலத்துக்கு ஆத்திரம் வந்திருக்காது.

அவளுக்குப் பின்ஞல் நின்ற வெள்ளை உடுப்புப் பிரமுகர் கடையில் வேலை செய் தவனுக்கு ஏதோ கைச்சாடை காட்டி ஞர்; அவனும் பதில் சாடை காட்டி ஞன். திறந்த இடைவெளியின் வழியே அவர் புகுந்து போய் அரிசி வாங்கிக்



கொண்டு வந்தார். "அநியாயம்! அநியாயம்!" என்று கத்திஞள் பெண் பிள்ளை. "இது கடவுளுக்கு அடுக்குமா? உங்களுக்குப் பிள்ளை குட்டி இல்லையா? ஏழை பாழை வயிற்றில் அடிக்கலாமா?"

தணிகாசலம் தன்னை மறந்து கடைக் குள் பாய்ந்தான்.

"இதென்ன அக்கிரமம்? நியாயவிலைக் கடை லட்சணம் இதுதாஞ? இவருக்கு முன்ஞல் வந்தவள் அங்கே அழுது கொண் டிருக்கிறுளே, தெரியவில்லையா?"

கல்லாப் பெட்டியில் கணக்கு வழக்குத் தெரியாமல் காகித நோட்டை அள்ளித் திணித்துக் கொண்டிருந்தவர், சாக்கு மூட்டைக்குப் பின்ஞல் நின்ற மனித மூட்டையிடம் கண்ணைக் காண்பித்தார்.

கண்ணைக் காட்டிவிட்டு, "யாருடா நீ, நியாயத்தைக் கண்டுவிட்டவன்? அவளுக்கும் உனக்கும் என்ன சொந்தம்?" என்று கேட்டார்.



மனித மூட்டை பதில் சொல்லியது: "வெளியே சொல்லக் கூடாத சொந்தமாயிருக்கும். பயலும் சிறு பயல்; குட்டியும் சின்னக் குட்டி!"

கேலிச் சிரிப்பு கடைக்குள் கிளம்பியது.

அரிசியை எடுத்துப் பார்க்கும் குத்தூசியை ஓங்கிக் கொண்டு தணிகாசலத்தின் நெற்றி மயிரை எட்டிப் பிடித்தான் அவன். நெற்றியில் வந்து விழும் அந்த ஒரு பிடி மயிரும் அன்றைக்கு அவன் கைக்குப் போய் விடும்போல் தோன்றியது. "மூச்சு விட்டால், இந்த ஊசியால் குத்திக் கிழிப்பேன்? - யாரடா! அந்தப் பலகையைப் போட்டுக் கடையை மூடு!"

"அவளுக்கு அரிசி போடாத வரையில் போக மாட்டேன்" என்று கத்தினான் தணிகாசலம். பிறகு வாய்த் துடுக்காக நாலு வார்த்தை பேசிவிட்டான்.

முகத்தில் இரண்டு மூன்று குத்துக்கள் விழுந்தன. சில் மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியது. கண் மூக்குத் தெரியாமல் செம்மையாகக் கவனித்து விட்டான் அந்தக் கடைக்காரனின் வேலையாள். செத்த பாம்பைப் புரட்டி வெளியே தள்ளுவது போல் தணிகாசலத்தைப் பிடித்துத் தெருவில் தள்ளினார்கள்.

தெருவுக்கு வந்து பார்த்தபோது யாருக்காகப் போராடினானோ, அந்தப் பெண்ணையும் காணவில்லை; அவள் மகனையும் காணவில்லை. அவர்கள் அப்போதே போய் விட்டார்கள். 'சண்டைக்குப் போன நேரத்தில் இரண்டு பழங்களாவது வாங்கி அந்தப் பையனிடம் நீட்டியிருக்கலாமே? இரும்புப் பாறையில் போய்த் தலையைமோதிக்கொண்டோமே....?'

இருட்டுகிற நேரம் வரையில் அறைக்குத் திரும்பவில்லை. மணிக்கூண்டுக் குளத்தில் முகத்தைச் சுத்தமாகக் கழுவிக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான். மூக்கிலும் உதட்டிலும் ரத்தம் உறைந்து போயிருந்தது. மாணவர்களின் கண்களில் படாமல் அறைக்குள் சென்று கண்ணாடியில் முகத்தைப் பார்த்தான். உதட்டின் ஓரம் கிழிந்து கன்றியிருந்தது; மூக்குக்குப் பக்கமாய் எலுமிச்சங்காய் அளவுக்கு வீக்கம். 'நல்லவேளை, குத்தூசியை வயிற்றுக்குள் பாய்ச்சாமல் இருந்தானே, பாவி!' என்று நினைத்துச் சிரித்துக்கொண்டான்.

அதற்குள் மாணவர்களிடம் சொல்வதற்கென்று ஒரு பொய் உருவாகியது. மாடிப்படியிலிருந்து வேகமாக இறங்கும் போது இடறி விழுந்து விட்டானாம்! உண்மையைச் சொன்னால், பையன்கள் பத்துப் பேராய்த் திரண்டு போய், தனக்குக் கிடைத்ததையே பகிர்ந்து கொண்டு வருவார்கள்.

தணிகாசலம் தன்னுடைய குறிப்பில் அன்றைக்கு எழுதிக் கொண்ட எழுத்துக்கள் இவை: "உள்ளதைச் சொன்னால் வேலை போகும்; உள்ளதைச் சொன்னால் உதடு கிழியும்; உள்ளதைச் சொல்ல நினைக்கிறவன் ஆபத்தில் மாட்டிக் கொள்வான். கடவுள்தான் அவனைக் காப்பாற்ற வேண்டும்!"

அத்தியாயம் 28

தொல்லைபிடித்த மனம்

கல்லூரி ஆசிரியராக இருக்க வேண்டுமென்று கனவு கண்ட தணிகாசலத்தின் ஆசை வீண் போகவில்லை. விடுதியில் உள்ள பத்துப் பன்னிரண்டு பேருக்கும் வெளியிலிருந்து வந்த சிலருக்கும் அவன் சம்பளம் வாங்காத ஆசிரியர். பள்ளியில் சொல்லிக் கொடுக்கத் தவறிய நாட்டின் விடுதலைப் படலத்தை அவன் நடத்தினான். பாரதியின் கவிதைகள், திரு. வி. க. வின் நூல்கள், செய்தித்தாள் விவரங்களே அவனுடைய பாடத்தின் உள்ளுரை.

வேலை போய் விட்ட செய்தி விடுதியில் வெட்டவெளிச்சமாகியது. புதுப்பட்டிக்கும் எட்டி, சித்தப்பா நேரில் வந்துகண்டபடி அவனைத் திட்டி விட்டுப் போனார். பொன் வயலுக்கும் தேவகிக்கும் மட்டிலும் ரகசியமாக வைத்துக் கொண்டான்.

இரண்டு மாத நடிப்பு முடிந்து மூன்றாவது மாதமும் தொடங்கியது. வேலையும்

கிடைத்தபாடில்லை. வேலையற்ற வெட்டிப் பையனுக்கோ நேரமும் போதவில்லை. கண்ணபுரத்தில் வாடகை வீடுகளே கிடைக்கவில்லை என்று தாயாருக்குச் சேர்த்துக் கதை எழுதினான்! வார விடுமுறையில் போய்த் திரும்பலாமென்றால் சமஸ்தான ஆபீசில் வேலை அதிகமாம். விடுமுறை நாட்களிலும் போட்டு வாட்டி எடுத்தார்களாம். பெண்பிள்ளைகள் நம்பாமல் என்ன செய்வார்கள்?

கௌரியின் நினைவுகள் அடிக்கடி அவனிடம் தலை நீட்டின. கல்யாணத்துக்கு முன்பு அவளைச் சட்டை செய்யாதவன், இப்போது வட்டியும் முதலுமாகச் சேர்த்து வைத்து நினைத்தான். மாலை நேரத்தின் விளிம்பில், இரவு நேரத்தின் கருக்கிருட்டில் விடியற்கால வெள்ளி மூலைப்பில் அவனுக்குக் கௌரியின் வட்ட முகம் தெரிந்தது. நெற்றிப் புருவத்தில் தழும்பையும் சின்னஞ் சிறு லோலக்குகளையும், பாவாடை, தாவணி, சட்டைப்பின்னல், வளைக் கரம் எல்லாவற்றையுமே அவன் காண ஆசைப்பட்டான். இந்த ஏக்கத்தில் எத்தனையோ பெருமூச்சுகள் பிறந்தன; சில சிறுகதைகளும் பிறக்காமல் இல்லை.

திடீரென்று நாடெங்கும் அந்தக் கொந்தளிப்பு தோன்றியிருக்காவிட்டால் தணிகாசலம் நல்ல பிள்ளையாகத்தான் இருந்திருப்பான். ஆனால் சரித்திர நிகழ்ச்சிகளில் பல யாரையும் கேட்டுக்கொண்டு நடப்பதில்லையே? 1942 ஆகஸ்டு மாதம் நினைவிருக்கிறதா?

சமஸ்தானத்துக்கு வெளியே ஆங்கில ஆட்சியின் அடக்குமுறை தாண்டவமாடியது. ஆயிரக்கணக்கில் மக்கள் சிறைப் பட்டார்கள். தடியடி நாட்டியம், துப்பாக்கி வேடிக்கை, உயிர்க் கொலை நாடகம் இத்தனையும் நடந்தன. அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் நாட்டுக்கு உழைத்த பலர் கடுமையாக வாட்டி யெடுக்கப் பட்டார்கள்.

சமஸ்தானம் இது போன்ற வெளி விவகாரங்களில் எப்போதுமே தலையிடுவதில்லை. மன்னரிடம் மக்கள் அன்பு கொண்டவர்கள். ஆனால் இம்முறை மாணவ உலகம் மட்டும் கொதித்தெழுந்தது. கண்ணபுரம் இத்தனை பெரிய நாட்டில் ஒரு சிறு பகுதிதானே?



விடுதிமாணவர்களும் வெளிமாணவர்களும் தணிகாசலத்தைச் சூழ்ந்துகொண்டு தாங்கள் செய்ய வேண்டியதைக் கேட்டார்கள். தணிகாசலத்துக்கு ஒன்றும் புரியவில்லை. இந்தச் சமயத்தில் வழி காட்டக்கூடிய பெரியவர்களும் அங் கில்லை. அவனும் உணர்ச்சி வசப்பட்டுத்தான் இருந்தான். ஆனால் வெறும் உணர்ச்சி பலன் தராது. இது அவன் அனுபவத்தில் படித்த பாடம். இன்னும் உதட்டுக் காயம் ஆறவில்லை.

"ஒரு நாள் மட்டும் மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாமல் நின்று எதிர்ப்பைக் காட்டுங்கள், போதும்" என்றான் தணிகாசலம். "மாணவர்கள் அரசியல் கிளர்ச்சிகளில் கலந்துகொள்ளக் கூடாது. ஆனால் இது அரசியல் இல்லை; அடிமைப்பட்ட நாட்டின் விடுதலைக் கிளர்ச்சி."

அடுத்த நாள் மாணவர்களின் வேலை நிறுத்தம் நடந்தது.

இரவோடு இரவாக இருபதுக்கு மேற்பட்ட மாணவர்கள் சுவரொட்டிகளை எழுதி எல்லாத் தெருக்களிலும் ஒட்டினார்கள். 'வெள்ளையனே, வெளியேறு! செய்து முடி! அல்லது செத்து மடி!' போன்ற சமஸ்தானம் கண்டிராத காந்தியடிகளின் சொற்கள் மக்களின் கண்களில் மின்னின.

சமஸ்தான அதிகாரிகள் முதன் முதலாகத் திடுக்கிட்டார்கள். இயல்பாகவே முக்கால்வாசி மாணவர்கள் செய்தி அறிந்து பள்ளிக்குச் செல்லவில்லை. வீட்டுக்குப் பயந்து கொண்டு பள்ளிக்குச் சென்ற கால்வாசிப் பேரும், தெருக்களில் நடமாடிய போலீசுக்குப் பயந்து கொண்டு திரும்பி விட்டார்கள்.

தணிகாசலமும் இன்னும் இரண்டு மாணவர்களும் ஊரைச் சுற்றிவந்து நடப்பைக் கவனித்தார்கள். போலீஸ்காரர்களுக்கு விவரம் தெரிந்து விட்டது. மூவரையும் வளைத்து லாரியில் போட்டுக் கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் பிள்ளை குட்டிக்காரர். அவ

ருடைய மூத்த மகன் ரத்தினமே கல்லூரி வாசலில் மறியல் நடத்திக் கொண்டிருந்தான். ''நீங்கள் இப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாது'' என்று தொடங்கி நீண்ட நேரம் அவனுக்கு உபதேசம் செய்தார்.

கடைசியில் தணிகாசலத்தைத் தனியே அழைத்து, ''நீ இப்போது மாணவன் இல்லை; எல்லோரும் உன் பெயரைச் சொல்லுகிறார்கள்; இந்த முறை உன்னை எச்சரித்து விடுகிறேன். இனி ஊரில் கலவரம் நடந்தால் நீதான் பொறுப்பு!'' என்று பயமுறுத்தினார்.

ஒரு மணி நேரத்தில் அவர்களுக்கு விடுதலை கிடைத்தது. ஆனால் அதன் பிறகு தணிகாசலம் தினந்தோறும் தன்



விடுதிப் பக்கம் ரகசியப் போலீஸ் சுற்று வதைக் கண்டான். அவன் எங்கே வெளியில் சென்றாலும் ஒரு மனிதர் நிழலைப் போல் பின்தொடர்ந்தார். 'ஒரு நாள் கூத்து முடிந்த பிறகும் இவர்கள் நம்மை விடுவதாக இல்லையே? வீணாக வீரனாகவும் தியாகியாகவும் ஆக்கி விடுவார்கள் போலிருக்கிறதே!' என்று நினைத்தான் தணிகாசலம்.

அவர்களுடைய சந்தேகத்தை வளர்ப்பது போல் ஒரு காரியமும் நடந்தது. செய்திப் பத்திரிகையில் விவரத்தைப் படித்துவிட்டுத் திருச்சியிலிருந்து கணபதி என்ற புரட்சிக்கார இளைஞன் ஒருவன் வந்து சேர்ந்தான். தணிகாசலத்துடன் இரண்டு நாள் அழையா விருந்தாளியா கத்தங்கித் தன் பயங்கரத் திட்டங்களை வெளியிட்டான். வெடிகுண்டு, தந்திக் கம்பி, தண்டவாளம், தஸ்தாவேஜு போன்ற சொற்கள் அவன் பேச்சில் அடிபட்டன. தணிகாசலத்துக்கும் அவன் போக்குப் பிடிக்கவில்லை; மற்ற மாணவர்களுக்கும் பிடிக்கவில்லை.

''கணபதி! உங்கள் திட்டத்துக்கு சமஸ்தானம் சரியான இடமில்லை. தயவு செய்து மாணவர்களின் படிப்பையும் எதிர்கால வாழ்வையும்கெடுக்காதீர்கள். திருச்சிக்கே திரும்பி விடுங்கள்.''

''நீங்கள் பயப்படுகிறீர்கள்'' என்றான் கணபதி.

''தகாதது செய்யப் பயப்பட வேண்டியதுதான். மக்களுடைய மனம் உங்கள் செய்கையை இந்த ஊரில் ஒப்புக் கொள்ளாது. வீணாக மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள்.''

கோபத்துடன் எழுந்து சென்று விட்டான் கணபதி. திருச்சிக்குத் திரும்பி விருப்பான் என்று நினைத்தான் தணிகாசலம். அவன் கண்ணபுரத்திலிருந்து கொண்டு வேறு சில மாணவர்களைத் தூண்டி விடுவது தெரிந்தது. தணிகாசலத்துக்கு அவன் போக்கைத் தடுக்கவும் முடியவில்லை. பரபரப்பான செய்திகள் வரத் தொடங்கின.

ஒரு நாள் காலை போலீஸ் இன்ஸ்பெக்டரின் மகன் ரத்தினம் அவசரமாக வந்து தணிகாசலத்தின் அறைக்குள் நுழைந்தான். அவனுடைய முகத்தில் பயம் குடி கொண்டிருந்தது. ''உங்களைப் பற்றி மோசமான ரிப்போர்ட்டுகள் சி.ஐ.டி. களிடமிருந்து வந்திருக்கின்றனவாம். என்னிடம் அப்பா ரகசியமாய்க் கேட்டார். நான் எவ்வளவோ சொல்லியும் அவர் நம்பவில்லை. சரியான விவரம் இன்னும் கிடைக்கவில்லை. ருசு கிடைத்து விட்டால் உடனே உங்களைக் கைது செய்வார்கள்.''

தணிகாசலம் சிரித்தான். கணபதியைக் காட்டிக் கொடுக்கவும் அவன் விரும்பவில்லை. ''என்னை உனக்குத் தெரியாதா? ரகசியமான ஒன்றும் என்னிடம் கிடையாது.''

''குற்றவாளிகளோடு பழகிப் பழகி அப்பா என்னைப் பார்த்தால் கூடக் குற்றவாளி என்று நினைக்கிறார். நான் என்ன சொல்லியும் கேட்கவில்லை. நீங்கள் இந்த ஊரைவிட்டு இன்றைக்கே கிளம்பி விடுங்கள்.''

முடியாதென்று தலையாட்டினான் தணிகாசலம்.

''தலைமறைவாய் 'அண்டர் கிரவுண்டி'ல் கொஞ்சநாட்கள் இருந்து விட்டு வாருங்களேன்?''

"'ஓவர் "கிரவுண்'டிலேயே பிழைப்புக்கு வழியில்லை; 'அண்டர் கிரவுண்டு'க்குப் போய் மண்ணையா தின்பது?—பிடித்துக்கொண்டு போய் வைத்திருந்து சோறு போடட்டும்."

ரத்தினம் தணிகாசலத்தை விடவில்லை. சமீபத்தில் கல்யாணம் செய்து கொண்டவன் என்பது தெரியும். "நீங்கள் பேசுகிற நியாயம் அங்கே நடக்காது. யாராவது எதையாவது செய்து விட்டுத் தலை மறைவாய்ப் போவார்கள். அதற்கு உங்களைக் கொண்டு போய்க் கோர்ட்டில் நிறுத்துவார்கள். இந்தமாதிரி வழக்குக்குப் பணம் கொடுத்தால் கூட வக்கீல்கள் வரமாட்டார்கள். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன்; சீக்கிரம் கிளம்ப வழி பாருங்கள்."

ரத்தினம் கிளம்பி விட்டான்.

தணிகாசலத்துக்கு இது புதிய தலைவலியைக் கொடுத்தது. பழி ஒரு பக்கம்; பாவம் ஒரு பக்கம். குற்றம் ஒரு பக்கம்; தண்டனை ஒரு பக்கம். கண்ணபுரத்தை விட்டு எங்கே போவது? போனால் மட்டும் விட்டு விடுவார்களா?

விடுமுறையில் வந்திருப்பதாகச் சொல்லி நான்கு நாட்கள் பொன்வயலில் தங்கலாம். அதற்கு மேல் தங்கினால் உண்மையைச் சொல்ல வேண்டும். அப்படித் தங்கும்போது அங்கு வந்து போலீஸார் தொல்லை கொடுத்தார்களானால் அதைவிட வேறு ஆபத்தே வேண்டாம். கடன்காரன் வந்து விலங்கு மாட்டியதாக வீரம்மாள் பாட்டி வெகு வேகமாகக் கதை கட்டிவிடுவாள்!

பயம் நெஞ்சைச் சுற்றி வளைத்தது. என்றாலும் கண்ணபுரத்தை விட்டுக் கிளம்புவதில்லை என்ற முடிவுக்கு வந்தான். இன்னும் முப்பது ரூபாய் செலவாகும் வரையில் அங்கு தங்கலாம்.

அன்றைக்குத் தபாலில் ஒரு அதிசயம் வந்தது. என்றுமில்லாதபடி கௌரி அவனுக்குத் தன் கையால் கடிதம் எழுதியிருந்தாள். அவனுடைய மனைவியிடமிருந்து வந்த முதல் கடிதம் அது! வழக்கமாகத் தாயாரோ, தங்கையோ எழுதுவார்கள். அவர்கள் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக அனுப்பியிருந்தாள்.

"அன்புள்ள அத்தான் அவர்களுக்கு, கௌரி வணக்கத்துடன் எழுதிக் கொண்டது. என்ன வென்றும் இதை யாருக்கும் தெரியாமல் எழுதுகிறேன். தெரிந்தால் என்னைக் கேலி செய்து உயிரை எடுத்து விடுவார்கள்.

உங்களுக்கு ஞாபகமறதி அதிகமாம். கல்யாணம் ஆனது உங்களுக்கு நினைவு இருக்கிறதா? வாடகைக்கு வீடு கிடைக்கவில்லை என்று அத்தைக்கு எழுதுவதை நிறுத்தி விடுங்கள். நான் நம்பவில்லை. புதுக் குடித்தனம் செய்வதற்கு இங்கே அம்மா பாத்திரம்-பண்டம் வாங்கிக்

கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு என்னைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை இருந்தால் முதலில் வீட்டைப் பார்த்து விட்டு மறு வேலை பாருங்கள். ஆசை இல்லையா உங்களுக்கு?

இன்னொரு விஷயம். நீங்கள் இதைப் படித்து விட்டுச் சிரிக்கக் கூடாது. இன்னும் பத்து நாட்களில் உங்களை இங்கே கட்டாயமாய் அழைக்கப் போகிறார்கள். அப்போது உங்களிடம் பேசுவதற்கு நான் வெட்கப்பட மாட்டேன். நாலு நாட்கள் தங்கி அழைத்துக் கொண்டு திரும்புவது போல் வாருங்கள்.

எனக்கு இதற்குமேல் எழுதத் தெரியாது. தப்பாக இருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள். நாலு கடிதம் எழுதிக் கிழித்துவிட்டு, ஐந்தாவது எழுதித் தபாலில் சேர்க்கிறேன். பதில் அத்தைக்குப் போட்டால் போதும். வீடு பார்த்து விட்டு உடனே எழுதுங்கள். உங்களைப் பார்ப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்."

தணிகாசலம் பெருமையோடு சிரித்துக் கொண்டான். அவள் சிரிக்கக் கூடாது என்று எழுதிய வரிகளைப் படித்து விட்டு உரக்கச் சிரித்தான். அந்த 'இன்னொரு விஷயம்' என்ன என்பது அவனுக்கு விளங்காமல் இல்லை. தனிமையில் தன் புது மனைவியைச் சந்திப்பதற்காகப் பெரியவர்கள் செய்யும் ஏற்பாடு! கௌரி வெளித் தோற்றத்துக்கு அப்பாவியாகக் காட்சி கொடுத்தாலும், எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு, ஆசையின் நிறைகுடமாகத்தான் விளங்கினாள்.

தணிகாசலத்தின் குதூகலமும் சிரிப்பும் குறைந்த நேரமே நீடித்தன. காலையில் ரத்தினம் வந்து சொல்லி விட்டுப் போன செய்தி நினைவுக்கு வந்தவுடன் அவனுடைய ஆனந்தம் தானாக ஒளிந்து கொண்டது. இப்படி ஒரு கடிதம் இந்த வேளையில் வந்ததற்காகத் துக்கப்பட வேண்டாமா? சிரித்துப் பயன் என்ன? அந்தச் சிரிப்பு சாதாரணமான சிரிப்பா? இதய வேதனையை எடுத்துக் காட்டும் வறட்டுச் சிரிப்பல்லவா?

கண்ணபுரம் போலீஸார் தன்னைச் சுற்றிலும் அர்த்தமில்லாமல், காரணமில்லாமல், வலை விரித்து வைத்திருப்பதுபோல் தோன்றியது. முதல் இரவில் மனைவியைச் சந்திப்பதற்காக அவனால் பொன் வயலுக்குப் போக முடியாது. இரும்புக் கதவுக்குப் பின், சுவர்க் கோழிகளின் ரீங்காரத்தில், காவலாளிகளின் நடைச் சத்தமாகிய பின்னணியுடன், சிறைச் சாலையில் அவன் தனி இரவைக் கொண்டாட வேண்டியதுதான்.

இரவு பத்து மணிக்குமேல் படுக்கைக்குச் சென்றான். படுக்கை முள்ளாய்க் குத்தியது. "நாடு எக்கேடு கெட்டால் என்ன? அந்த ஒரு நாள் மாணவர்களைத் தடுக்காமல் இருந்திருக்கலாமே!" என்று கூட நினைத்தான். இப்படியே அடுக்கடுக்காகத் தான் செய்த காரியங்கள் எல்லாவற்றையும் செய்திருக்க வேண்டாம் என்றும், செய்யத் தயங்கிய காரியங்களைச் செய்திருக்கலாம் என்றும் அவனுக்குத் தோன்றியது. எது போனாலும் போகட்டும். வழியில் நின்று வேடிக்கை பார்க்கப் போய்க் கடைக்காரனிடம் முகத்தில் குத்து வாங்கிக் கொண்டிருக்க வேண்டாம்! தனக்குள்ளே ஏதோ ஒரு குறுகுறுப்பு இருந்து கொண்டு தன்னை இப்படி ஆட்டிப் படைப்பதை அவன் உணர்ந்தான். கடைசியில், தானாக விரும்பினாலும் அதன் போக்கிலிருந்து தன்னால் மீள முடியாது என்பதும் அவனுக்கு நிச்சயமாகி விட்டது.

* * *

நடு நிசி ஆயிற்று. சன்னல் வழியே வானத்தைப் பார்த்தான். மீன்களைக் கூட விழுங்கி அது கருமை காட்டியது. ஊருக்குள் நாலைந்து இடங்களில் சாமத்து மணி அடித்தார்கள். சமஸ்தானத்தின் வழக்கம் அது.

விடுதியின் கீழே திடீரென்று அரவம் கேட்டது. விடுதி முதலாளியைத் தட்டி எழுப்பி யாரோ தகவல் கேட்டார்கள். தணிகாசலம் என்ற பெயர் அதில் அடிபடுவதைக் கண்டவுடன் அவனுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது. தடதடவென்று மாடிப்படியேறிச் சிலர் மேலே வந்தார்கள். இனிச் சந்தேகத்துக்கு இடமில்லை. அவர்கள்தான்! போலீஸ்காரர்கள் வந்து விட்டார்கள்...

"டக், டக், டக்" "டக் டக் டக்" மெல்லக் கதவைத் தட்டினார்கள்.

தணிகாசலம் சந்தடியில்லாமல் படுக்கையிலிருந்து எழுந்தான். குப்பென்று உடல் முழுதும் குளித்து வந்தவன்போல் வேர்த்துக் கொட்டியது. இருளில் கௌரியின் கடிதத்தைத் தடவி எடுத்துச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டான்.

இதற்குள் பலமான தட்டல்; தணிகாசலம்!" என்ற அதிகாரக் குரல்......

விடுதி மாணவர்கள் சிலர் விழித்துக் கொண்டு கூடினார்கள். கதவை உடைத்து விடுவார்களோ என்று அஞ்சினான்.

நடுங்கும் கரத்தால் தாழைத் திறந்து விட்ட போது ஐந்தாறு பேர்கள் தாழ்வாரத்து இருளில் நின்று கொண்டிருந்தார்கள். தணிகாசலத்தின் கண்கள் பார்க்கும் சக்தியை இழந்து விட்டன. அறை விளக்கைப் போட வேண்டும் என்கிற நினைவுகூட அவனுக்கு இல்லை. இரண்டு கரங்களையும் முன்னால் நீட்டினான். இரண்டு முரட்டுக் கரங்கள் அவற்றைப் பற்றிக் கொண்டன. (தொடரும்)

"கல்கி" நவம்பர் மாதச் சிறுகதைப் போட்டி

பரிசு ரூபாய் நூறு

மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். போட்டிக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கதைகள் "கல்கி"யில் ஆறு பக்கத்திலிருந்து எட்டு பக்கத்துக்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

முந்திய மாதப் பரிசுக் கதை அடுத்த மாதக் கடைசி வாரத்தில் வெளியாகும். பிரசுரத்துக்குத் தகுதியுள்ள மற்றக் கதைகளும் "கல்கி"யில் பிரசுரமாகும். கதைகள் அந்தந்த மாதம் 20-ம் தேதிக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்துவிட வேண்டும்.

கதைகளைத் திரும்பப்பெற விரும்பும் எழுத்தாளர்கள் கதைகளுடன் போதிய தபால்தலைகள் வைத்து அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும், குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.


அவன் நிமிர்ந்து உட்காரப் பார்க்கிறான்!
வாஸ்தவம்தான்! அவன் பெற்றோர்களுக்கு அவன் வளர்ச்சியில்தான் என்ன பெருமை... அவர்கள் க்ளாக்ஸோவை வாழ்த்துகிறார்கள்! பிறந்த சமயத்தில் எவ்வளவு சிறியவனாயும், சோனியாயும் இருந்தான் என்பதை இப்பொழுது நினைத்துப் பார்த்தால் நீங்கள் நிச்சயம் நம்பமாட்டீர்கள். டாக்டர் அவனுக்கு க்ளாக்ஸோ கொடுக்கச் சொன்னதிலிருந்து, அவன் அபார வளர்ச்சி அடைந்துள்ளான். இப்பொழுது அவன் எடை ஒழுங்காக அதிகரித்து வருகிறது. அவன் சந்தோஷத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் கேட்பானேன்—க்ளாக்ஸோவிற்கு நன்றி.
Glaxo
க்ளாக்ஸோ குழந்தைகளுக்குச்
சிறந்த பால் உணவு

படித்துப் பாருங்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை

சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார் தங்கள் வெளியீடு நிலையத்தின் மூலம் இந்து மதத்துக்குச் செய்துவரும் தொண்டு உலகம் அறிந்தது. நமது சாஸ்திர நூல்களைத் தனித்தனியாய் நல்ல முறையில் மூலத்துடனும் பல்வேறு மொழிபெயர்ப்புக ளுடனும் நம் நாட்டில் பல பகுதியினருக்குப் பயன்பட அச்சிட்டு வெளியிட்டு வருகிறார்கள்: ''ப்ரஸ்தானத்ரயம்'' என்ற நமது தத்துவ நூல்கள் மூன்றில் ஸ்ரீமத் பகவத்கீதை மிகவும் சிறப்புடையது. நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதை அறியாதவர்கள் இடையாது. இதன் விளக்கங்கள் எத்தனை இருந்தாலும் மிகையாகாது. உலகில் நிலவும் எல்லா மொழிகளிலும் இதை மொழிபெயர்த் திருக்கிறார்கள்.

இறைவனின் அருள்வாக்கிலிருந்து வந்த ஈடு இணையில்லாத இந்தத் தத்துவ நூல் பாரத நாட்டுக்கே பெருமையைத் தேடித் தந்திருக்கிறது. ஆத்ம ஞானிகளுக்கு மாத்திர மல்ல, காந்திஜியைப் போன்ற அரசியல் ஞானி களுக்கும் அந்தகாரத்தை அகற்றும் அருள் ஜோதியாகத் திகழ்கிறது பகவத் கீதை.

நமது பார்வைக்கு வந்துள்ள இந்தப் பதிப்பில் மற்றவையிலில்லாத சில சிறப் புக்கள் பொருந்தியிருக்கின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் தலைப்பில் சம்ஸ்கிருத மூலத்தையும் அதன் கீழ் அந்தந்த சுலோகங் களைத் தமிழ் எழுத்திலும் தந்து, அதன் அடியில் பதவுரையுடன் கூடிய பொழிப்புரை யும், இறுதியில் பொருள் விளக்கமும் தரப்பட் டிருக்கின்றன. பல சம்பிரதாயக்காரர்களின் அபிப்பிராய பேதங்களைச் சமரசப்படுத்தி கீதா சுலோகங்களுக்குப் பொருள் கூறுவது எளிதல்ல. ஒரு சம்பிரதாயத்துக்கும் முரண் இல்லாதபடி எல்லோரும் ஒப்புக் கொள்ளும் வகையில் மொழிபெயர்ப்பு அமைந்தது மெச்சத் தகுந்தது. இப்பதிப்பின் மற்றொரு சிறப்பு ஆங்காங்கு கீதையின் பொருளை விளக்க, மற்ற நூல்களிலிருந்து எதிரொலி யைப் போல் உறவு உள்ள தாத்பர்யங்களை எடுத்துத் தந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. உபநிஷத்துகள், மகாபாரதம், ஆழ்வார் நாயன்மார்களின் பாடல்கள், சங்கரரின் நூல்கள், ராமகிருஷ்ண விவேகானந்தரின் உபதேசங்கள் - இவைகள் கையாளப்பட்டிருக் கின்றன. தவிர எல்லோருடைய அனுபவத் திலும் உள்ள உலக நிகழ்ச்சிகளைக் கொண்டு விளக்கம் தந்திருப்பது தத்துவங்களைப் பசு மரத்தாணி போல் மனத்தில் பதியச் செய் கிறது. இப்பதிப்பு இவ்வளவு நன்றாக அமைந் திருப்பது வியக்கத் தக்கதல்ல. ஏனெனில் உரையாசிரியராகிய ''அண்ணா'' அவர்கள் நம் சாஸ்திர நூல்களில் மூழ்கிக் குளித்தவர்; ராமகிருஷ்ண — விவேகானந்த சூழ்நிலையில் வளர்ந்தவர். தெளிந்த அறிவும் முதிர்ந்த அனுபவமும் பூண்டவர். அவர் பெயரே இப் புத்தகத்தின் பெருமைக்கு உரிய சான்றாகும். இது இப்பொழுது நான்காம் பதிப்பாக வெளி வந்திருப்பது ஆஸ்திகத் தமிழர்கள் இதைப் போற்றுவதற்கு ஓர் அறிகுறி.

புத்தகத்தின் பின்பாகத்தில் ஸ்ரீ பகவத் கீதா மஹாத்மியமும், கீதா ஹோமவிதியும் தரப்பட்டிருக்கின்றன. சுலோகங்களின் அக ராதியும் உரையின் அகராதியும் மிகவும் பயன் படும் வகையில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீராம கிருஷ்ண தீபம் என்னும் உரை யுடன் கூடியது. நான்காம் பதிப்பு. உரை ஆசிரியர்: 'அண்ணா' (ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-4); பக்கம்: 413; விலை: சாதாரண பைண்டு ரூ. 3-50, காலிகோ பைண்டு ரூ. 4-50.

ஸ்ரீ லலிதா-த்ரிசதீ ஸ்தோத்திரம்

ஸ்ரீ லலிதா பாக்யோனம், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம், த்ரிசதி இவைகளை யறியாத நம்மவர்கள் இல்லையெனலாம். தேவி பூஜை யில் வழக்கத்திலிருந்து வருவன இச் சிறந்த ஸ்தோத்திரங்கள். இதற்குமுன் ''அண்ணா'' அவர்கள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தை மூலம், மொழி பெயர்ப்பு, விளக்கவுரை இவை களுடன் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் மூலம் உலகத்துக்கு உதவினார். அதே வகையில் ஸ்ரீ லலிதா த்ரிசதி ஸ்தோத்திரத்தை நமக்குப் பயன்படும்படி எழுதி வெளியிட்டது, ''அண்ணா'' அவர்களின் மற்றொரு தொண்டு. முகவுரையில் கூறியுள்ளபடி வேண்டுவன அனைத்தையும் தரக்கூடிய சர்வபூர்த்திகரமான இந்தத் துதியைத் தினந்தோறும் பக்தியுடன் பாராயணம் செய்து அந்த நாமாக்களால் தேவியை உபாசித்தால் எல்லா மங்களங் களும் உண்டாகும். ஸ்தோத்திர சுலோகங் களை ஸம்ஸ்கிருதத்தில் அச்சிட்டு, அவற்றின் கீழ் அவற்றைத் தமிழில் எழுதி, ஒவ்வொரு நாமாவின் ரகசிய அர்த்தத்தைச் சுருக்க மாகவும் தெளிவாகவும் தந்து பொருள் கூறப் பட்டிருக்கிறது. புத்தகத்தின் பின் பகுதியில் சில தேவி ஸ்தோத்திரங்கள் நித்யபாராயணத் துக்கு உதவும்படி தரப்பட்டிருக்கின்றன.

உரையாசிரியர்: 'அண்ணா' (ஸ்ரீராம கிருஷ்ணமடம் மயிலாப்பூர்-4) பக்கம்: 125; விலை: சாதாரண பைண்டு ரூ. 1-25; காலிகோ பைண்டு ரூ. 2-00.

— பேராசிரியர் சங்கரநாராயணன்

பண்டித நேருவைப் பற்றி என்ன எழுதுவது என்று எனக்கு விளங்க வில்லை. காந்திஜிக்கு அடுத்தபடி யாக அவர் ஒருவருடைய பெயர் தான் பாரதத்தில் தலைசிறந்து விளங்குகிறது. நம் நாட்டின்மீது ஆண்டவனின் அருள் அபரிமிதமாக இருக்கிறது. இல்லாவிட்டால், தாதா பாய், திலகர், காந்தி, ஜவாஹர் போன்ற தலைவர்களை ஒருவருக்குப் பின் ஒருவராக நம் நாட்டுக்கு அருள்வாரா? ஆண்டவனது அந்த அருளுக்கு அருகதை யுள்ளவர்க ளாக நாம் ஆகவேண்டும்.—வினோபா



நினைவின் ஒளியில்

பீஷ்மன்

மணி பதினொன் றடித்தது.

தலையை நிமிர்த்தி, கடிகாரத்தைப் பார்த்து விட்டு மறுபடியும் எழுதத் தொடங்கினார் டாக்டர்ராமானுஜம். டாக்டர் என்ற பெயர் அவருக்கு இப்போது பொருத்தமில்லைதான். வைத்தியத் தொழிலிலிருந்து அவராகவே ஓய்வு பெற்று இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. வைத்தியத் துறையில் ஏற்பட்ட அனுபவங்களையும் அறிவு முதிர்ச்சியையும் கொண்டு இப்போது அவர், ஆராய்ச்சி நூலொன்று எழுதிக் கொண்டிருந்தார். பகலில் அவருக்கு ஏனோ எழுத்து ஓடுவதில்லை. ஆகவே, பகல் பொழுதையெல்லாம் படிப்பிலும் சிந்தனைகளிலும் கழித்து விட்டு இரவிலே எழுதுவது என்று வழக்கப்படுத்திக் கொண்டார்.

பயனுள்ள நூலாக நல்ல முறையில் தம்மால் எழுத முடியுமோ என்று கூட அவர் சிந்தித்துப் பார்க்கவில்லை. விரக்தியும் வெறுப்பும் ததும்பி நிற்கும் வேதனைப் படுகுழியை நோக்கிப் பாய்ந்தோடத் துடிக்கும் எண்ண வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் அணையாகத்தான் இதை அவர் தொடங்கினார். அவரையும் அறியாமல் அவருள் நிறைந்திருந்த அனுபவ அறிவும் சொல்லாட்சியும் எடுத்த பணியை அழகுறத்தொகுத்துத் தந்தன.

"இன்னும் நீங்கள் படுத்துக் கொள்ளப் போகவில்லையா ?"

திடீரென்று விழித்துக் கொண்ட அவர் மனைவி செல்லம்மாள், கணவரின் அறையில் இன்னும் விளக்கு எரிவதைப் பார்த்து விட்டு எழுந்து வந்திருந்தாள்.

"இல்லை. இதோ போகிறேன் !" என்று தலையை நிமிர்த்தாமலேயே அவளுக்குப் பதில் கூறி விட்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்தார் அவர். மன ஓட்டத்தைப் புலப்படுத்துவது போல் காகிதத்துக்கு உயிரூ வெற்று வெளியில் அவர் பேனாவினால் எதையோ எழுதிக் கொண்டிருந்தார்.

"பாக்கியை நாளைக்கு எழுதிக் கொள்ளலாம் ; போய்த் தூங்குங்கள் !" என்று சொல்லி விட்டு உள்ளே போய்ப் படுத்துக் கொண்டாள் செல்லம்மாள்.

பாதித் தூக்கத்தில் விழித்துக் கொண்டதாலோ என்னவோ அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

தலையணையில் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு, தலையை நிமிர்த்தி ஏதோ லட்சிய வெறியுடன் எழுதிக் கொண்டிருந்த தன் கணவரைப் பார்த்தாள்.

வழுக்கைத் தலை மின்சார விளக்கொளியில் பளபளத்தது. சதைப் பிடிப்புள்ள அவர் கன்னத்தில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. நாற்பது வயதிலேயே இவருக்கு எப்படி இந்தக் கிழ உரு வந்தது என்று யோசனை செய்தாள் செல்லம்.

அவள் கண்கள் கலங்கின.

ஏதோ நினைவு அவளுள் திடீரென்று புகுந்து அவள் இதயத்தைப் பிசைந்தது. சிந்தனைகள் எங்கெங்கோ ஓடி அலைந்து தூக்கத்தை விரட்டி விட்டன.

திடீரென்று கனத்த தலையைத் தலையணையில் புதைத்துக் கொண்டாள் அவள்.

'டாங்... !'—மணி பதினொன்றரை !

அவர் இன்னும் எழுதிக் கொண்டுதான் இருந்தார்.

"இப்படித் தூக்கம் விழித்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும் ?"

"சேச்சே ! உன் தொந்தரவு பொறுக்க முடியவில்லையே...... !" என்று வெறுப்புடன் கூறிக் கொண்டே பேனாவை மூடி வைத்து விட்டு எழுந்தார் ராமானுஜம்.

எழுதிய தாள்களைச்சேர்த்து அடுக்கி மேஜை டிராயருக்குள் வைத்துச் சாத்தினார். விளக்கை அணைத்துவிட்டு டார்ச் விளக்கின் ஒளியில் கட்டிலை நோக்கி அவர் நடந்து கொண்டிருக்கும்போது வாசற் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

'இந்த நேரத்தில் வந்து யார் கதவைத் தட்டுகிறார்கள் ?'

"யாரு......?" என்று கேட்டுக் கொண்டே திரும்பி வாசற்புறம் நோக்கி நடந்தார்.

இவர் குரல் வெளியே கேட்டிருக்க முடியாது. வெளியே கதவு தொடர்ந்து தட்டப்படும் ஓசை கேட்டது.

நடை விளக்கைப் போட்டு விட்டு, வாசற் கதவின் தாழ்ப்பாளை ... திறந்தார். கதவின் மேலே நிலையோடு இணைக்கப்பட்டிருந்த நாதாங்கியைக் கீழே தள்ளிவிட்டுக் கதவைத் திறந்தார்.

"டாக்டர்ராமானுஜம் இருக்காரா ஸார்?"

கலைந்த கிராப்பும் பொத்தானில்லாத சட்டையுமாய், பரபரக்கும் தோற்றத்துடன் ஒரு இளைஞன் நின்றான்.

"நான்தான். என்ன வேணும்...?"

"உங்களைத்தான் ஸார் பார்க்க வந்தேன். என் மனைவிக்கு ரொம்ப அபாயமா இருக்கு. ஸார், நீங்கதான் வந்து எப்படியும் காப்பாத்தணும். இது அவளுக்கு முதல் பிரசவம். நேற்று ராத்திரியிலிருந்தே வலியெடுத்தது. நர்ஸ் பாப்பம்மான்னு ஒரு கிழவி இருக்காங்களே, அவங்களைத்தான் அழைத்து வந்து உதவிக்கு அமர்த்தியிருந்தேன். 'ரொம்ப ஸீரியஸ்ஸா இருக்கு, டாக்டரைக் கூட்டிண்டு வாங்க'ன்னு அவங்க சொல்லறாங்க. சர்க்கார் ஆஸ்பத்திரி டாக்டர் ஊரிலே இல்லையாம். 'இப்ப என்ன செய்யறதுன்னு நான் கையைப் பிசைஞ்சிண்டு நிக்கறபோது ஆஸ்பத்திரியிலிருந்த ஒரு கிழவர் உங்க விலாசம் சொன்னார். நான் ஊருக்குப் புதுசு. மனசு சங்கடப்படுது. கொஞ்சம் வந்து பாருங்க, டாக்டர்!"

ராமானுஜத்துக்குத் தலையைச் சுற்றியது. அவர் வைத்தியத் தொழிலை நிறுத்தி மூன்றாண்டுகள் ஓடி விட்டன. விஷயமறிந்த உள்ளூர்வாசிகள் அவரிடம் வைத்தியத்துக்கு வருவதில்லை. இவன், பாவம், ஊருக்குப் புதிது போலும்! தவிரவும் அவனுடைய அவசரம் அவனுக்கு!

"மன்னிக்கணும் மிஸ்டர். நான் டாக்டராக இருந்தவன். ஆனால் இப்பொழுது எனக்கும் இந்தத் தொழிலுக்கும் சம்பந்தமேயில்லை. மருந்துப் புட்டியையோ ஸ்டெதாஸ்கோப்பையோ நான் தொட்டு மூன்று வருஷங்கள் ஆகின்றன. நான் வருவதற்கு இல்லை. உங்கள் நிலைக்கு ரொம்ப வருத்தப்படுகிறேன். ஆனாலும்... என்னாலே ஒண்ணும் செய்யறதுக்கு இல்லை!" — வெளியே வானத்தைப் பார்த்துக் கொண்டு பேசினார் அவர்.

"நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது, ஸார். எனக்கு என்னமோ ஒரே பயமாக இருக்கு. நீங்கதான் வந்து எப்படியும் காப்பாத்தணும். கொஞ்சம் தயவுசெய்து சிரமத்தைப் பாராமல்..."

"இல்லையப்பா. இங்கே நீ நிற்கிறதினாலே உனக்கு நேர நஷ்டம்தான். 'இனிமேல் இந்த டாக்டர் தொழில் செய்வதில்லை'ன்னு ஒரு நாள் சபதமே செய்திருக்கேன். என்னை வற்புறுத்தாதே! கடவுளை நம்பு. போய் வா!"

"ஸார்...நீங்க கேட்ட பீஸ் தரேன் ஸார். அதைப் பற்றி ஒண்ணும் யோசிக்காதீங்க. தயவு பண்ணி..." — இளைஞன் துடித்துக் கொண்டிருந்தான்.

ராமானுஜத்தின் இதயத்தில் யாரோ 'பளீர் பளீர்' என்று அறைந்தார்கள். அவரால் அந்த வேதனையைத் தாங்க முடியவில்லை.

"உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன், அப்பா. என்னைத் தொந்தரவு செய்யாதே! தெய்வத்தின் மீது பாரத்தைப் போட்டு விட்டுப் போய்ச் சேர்!"


இளைஞன் கையைப் பிசைந்து கொண்டு நின்றான்.

அப்புறம் குனிந்தவாறே இருளிலே தெருவில் இறங்கி நடந்தான். அவன் நிராசையுடன் திரும்பிச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த ராமானுஜத்தின் கண்கள் கலங்கின. கதவைச் சாத்தித் தாள் மட்டும் போட்டு விட்டுக் கட்டிலில் வந்து படுத்தார். சிந்தனைகள் கர்ஜனையிட்டுக் கொண்டு அவர் நெஞ்சிலே வந்து மோதின.

"வாசலிலே யார் வந்திருந்தா...?" என்று கேட்டாள் செல்லம் தூக்கக் கலக்கத்துடன்.

"ஏதோ பிரசவ கேஸாம்...! டாக்டரைத் தேடி வந்திருந்தார்...!"

செல்லத்துக்கு அவர் பேச்சு கேட்டதோ இல்லையோ, அல்லது அவள் தூங்கிப் போய் விட்டாளோ; அதற்கப்புறம் அவளிடமிருந்து வேறு பேச்சு எழும்பவில்லை.



> சீன மக்கள் பண்டைய பாரதத்தின் பெருமக்களான மகாத்மா புத்தரையும் போதி ஸத்வரையும் நன்கு அறிவார்கள். அதே போல இன்றைய பாரதத்தின் மகாத்மா காந்தி, குருதேவ் ரவீந்திர நாத டாகூர், பண்டித ஜவாஹர்லால் நேரு ஆகியவர்களையும் அறிவார்கள்.
>
> காந்திஜி அவர்களது அரும் பெரும் சிரத்தைக்குப் பாத்திரமானவர். குருதேவ் டாகூர் அவர்களது பக்திக்குகந்தவர். ஜவாஹர் அவர்களது அபரிமிதமான அன்புக்குரியவர். சீனா காந்திஜியைப் பரம ஞானியாக மதித்துச் சிரத்தை செலுத்துகிறது. ரவீந்திர நாதரைக் குருவாக மதித்துப் பக்தி செலுத்துகிறது. ஆனால் பண்டித ஜவாஹர்லால் நேருவைத் தனக்கு மிகவும் நெருங்கிய உறவினராகவும், வேண்டியவராகவும் மதிக்கிறது.
>
> காந்திஜியைத் தந்தையாகவும், குருதேவ் டாகூரைத் தாயாராகவும் ஜவாஹரைத் தனது அருஞ் செல்வப் புதல்வராகவும் மதிக்கிறது என்று கூறினால் தவறாகாது. —தான் யுன் ஷான்

எதிர் வீட்டிலோ பக்கத்து வீட்டிலோ பாதித் தூக்கத்தில் கண் விழித்துக் கொண்ட குழந்தை வீறிட்டு அழுதது.

''என்னைக்கொன்னுட்டீங்களே அப்பா!...''

யார்...?

ராமானுஜம் ஈரக் கசிவுடன் இருந்த தம் கண்களை இறுக மூடிக்கொண்டார். அவர் அகக் கண்முன் மைதிலியின் அழகு முகம் தோன்றியது.

''என்னைக் கொன்னுட்டீங்களே அப்பா!''

மைதிலி தான் பேசினாள்.

''ஐயோ மைதிலீ...!''...ராமானுஜத்துக்கு இரைந்து கதற வேண்டும்போல் இருந்தது. ஆனால் அவர் எவ்வளவுதான் கதறி அழுதாலும் அவருடைய அருமை மைதிலி இனிமேல் வரப் போகிறாளா...?

'மைதிலீ...! கருவேப்பிலைக் கொழுந்து போல உன்னை வளர்த்துப் பெரியவளாக்கி...' அவர் சிந்தனையில் மைதிலி சுற்றிச் சுற்றி வளைய வந்தாள்.

மைதிலி பிறந்தபோதுதான் அவர் வைத்தியத் தொழிலையே ஆரம்பித்தார். அந்த வேளையின் முகூர்த்தமோ என்னவோ, ஊரிலே பெரிய சர்க்கார் ஆஸ்பத்திரி இருந்தும்கூட புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அவருடைய வைத்திய சாலைக்குக் கூட்டம் வந்து குவிந்தது. பூர்வீகமாய் இருந்த நிலத்தை விற்றுவிட்டு அந்தப் பணத்தின் உதவியினாலும் தன்னம்பிக்கையினாலும்தான் அவர் அந்த ஊரில் தம் டிஸ்பென்ஸரியைத் திறந்தார். அவரது தன்னம்பிக்கை வீண் போகவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே நிலத்தை விற்ற பணம் கைதேறி விட்டது. மைதிலியின் அதிர்ஷ்டமோ அல்லது ராமானுஜத்தின் துரதிர்ஷ்டமோ அவளுக்குப் பிறகு வேறு குழந்தை பிறக்கவில்லை. ஆகவே மைதிலி அவர்களின் செல்லக் குமாரியாகவும் செல்வக் குமரியாகவும் வளர்ந்தாள். அதிலும் ராமானுஜத்துக்கு மைதிலி தான் உயிர்.

மைதிலி வளர்ந்தாள். அவளுடன் அழகும் இளமைப் பூரிப்பும் வளர்ந்தன. ராமானுஜத்தின் அந்தஸ்தும்செல்வாக்கும்கூட வளர்ந்தன.

'இவளுக்குத் தகுந்த கணவன் கிடைக்க வேண்டுமே!' என்ற கவலை ராமானுஜத்தின் மனத்தில் அரும்பு முன்னரேயே மைதிலிக்கு நல்ல வரன் ஒன்று வலுவிலே வந்து சேர்ந்தது.

மகளின் அதிர்ஷ்டத்தை நினைத்து நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டார் ராமானுஜம்.

ஒரு நல்ல நாளில் மைதிலியின் கல்யாணத்தை ஜாம் ஜாமென்று நடத்திவைத்தார். மாப்பிள்ளை சம்பத்துக்கு உதகமண்டலத்தில் உத்தியோகம். பெண்ணை அழைத்துக்கொண்டு அவன் புறப்பட்டபோது முதன்முதலாகத் துயரம் என்னவென்பது ராமானுஜத்துக்குத் தெரிந்தது. செல்லம்கூட 'இது உலக நியதி தானே!' என்று தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டு விட்டாள். அவரால் தான் அப்படியிருக்க முடியவில்லை.

மைதிலியின் கல்யாணத்தின் போது இப்படி ஒரு பிரிவு நேரும் என்பதை எண்ணியே பார்க்காமல் ஒரே மகிழ்ச்சிப் பெருக்கில் தம்மை மறந்திருந்தார் அவர். ஆகவே மைதிலி புக்ககம் போனபோது சிறு குழந்தை மாதிரி தேம்பித் தேம்பி அழுதார் அவர்.

''சே, அபசகுனம் மாதிரி என்ன இது?'' என்று செல்லம் கடிந்துகொண்ட பிறகு தான் தம்மை மீறி வந்த துயரத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடிந்தது அவரால்.

வாரந் தவறாமல் மைதிலியிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது. அப்படி வந்த கடிதங்களுள் ஒன்று அவர் தாத்தாவாகப் போகும் சந்தோஷ சமாசாரத்தைத் தாங்கி வந்தது.

''மைதிலியை அழைத்துவர ஒரு நல்ல நாள் பார்க்கணும், செல்லம்!''—என்று சொல்லிக் கொண்டே கடிதத்தை மனைவியிடம் தந்தார்.

''என்ன எழுதியிருக்கா......?''

''நீ பாட்டியாகப் போகிறாயாம்!......''

செல்லம் மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

''குழந்தையை அழைத்துக் கொண்டு வரச் சீக்கிரமா நல்ல நாள் பாருங்கோ!''

மைதிலி வந்தாள். வீட்டிலே மறுபடியும் புதியதொரு ஜோதி வீசுவதாக ராமானுஜம் நினைத்துக் கொண்டார்.

வளைகாப்பு......சீமந்தம்......

பிள்ளை வீட்டாரை எப்படியோ சம்மதிக்க வைத்து எல்லா விசேஷங்களையும் தம் வீட்டிலேயே நடத்தினார்.

நாட்களும் ஓடி மைதிலிக்கு நிறை மாசம் ஆயிற்று.

இப்படித்தான் ஒரு நாள் இரவு மணி பதினொன்று இருக்கும்.

ராமானுஜம் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். யாரோ தட்டி எழுப்புவதை உணர்ந்து கண் விழித்துப் பார்க்கையில் பக்கத்தில் செல்லம் நின்று கொண்டிருந்தாள்.

''என்ன செல்லம்......?''


இருமலின்
மூலகாரணத்தை
அகற்றுங்கள்
SIROLIN
'ROCHE'
COUGHS COLDS
ஸிரோலின்
சாப்பிடுங்கள்
குடும்பத்தினர்
யாவருக்கும்
ஏற்ற
ஔஷதம்
ஸிரோலின் இருமலை நிறுத்து
வதோடு இருமலுக்குக் காரண
மான தீங்கிழைக்கும் கிருமி
களைக் கொல்லவும் செய்கிறது.
வால்டாஸ் லிமிடெட்

"குழந்தைக்கு உடம்பு சரியில்லே. ரொம்ப வேதனைப் படுகிறாள்! கொஞ்சம் வந்து பாருங்கள். நர்சுக்கும் ஆள் அனுப்புங்கோ......!"

உள்ளிருந்து மைதிலியின் வேதனைக் குரல் இருளைத் துளைத்துக்கொண்டு கேட்டது.

"அ...ம்...மா...!"

பதறியடித்துக் கொண்டு எழுந்திருந்தார் ராமானுஜம்.

"ஆறுமுகம்...! ஆறுமுகம்...!"

வெளித் திண்ணையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த ஆறுமுகம் எழுந்து வேகமாக ஓடி வந்தான்.

"போய் நர்ஸ் பாப்பம்மாளை அழைத்துக் கொண்டு வா...!"

அவனை அனுப்பிவிட்டு உள்ளே போய்ப் படுக்கையில் உட்கார்ந்தார்.

"அ...ம்...மா!"

அவருக்கு உடம்பெல்லாமே யாரோ ஊசி யினால் குத்துவதுபோல் ஒலித்தது. இம்மாதிரி எத்தனை எத்தனையோ அலறல்களைக் கேட்டு மரத்துப் போயிருந்த அவரது காதுகளுக்கு இந்த வேதனைக் குரலைச் சகித்துக் கொள்ளும்



திறமையில்லாது போவதை நினைத்தபோது அவருக்கு வேடிக்கையாக இருந்தது.

எழுந்து உள்ளே போனார்.

மைதிலி துடித்துக் கொண்டிருந்தாள்.

அடிவயிற்றிலிருந்து சீறிக் கிளம்பிய அவளுடைய வேதனைக் குரல் அவர் நெஞ்சின் அடித்தளத்தையே பெயர்த்தது.

சொல்ல முடியாத வேதனையுடன் அவள் கையைத் தூக்கி நாடி பிடித்துப் பார்த்தார்.

"ஒன்றும் பயமில்லேயம்மா! நர்ஸ் வந்து விடுவாள்......கொஞ்சம் பொறுமையாயிரு!" என்று சொல்லி விட்டுத் தம் அறைக்கு வந்து கட்டிலில் சாய்ந்தார். உள்ளேயிருந்து மைதிலியின் வேதனைக் குரல் விடாது கேட்டுக் கொண்டிருந்தது.

கடிகாரத்தின் 'டிக்...டிக்' என்ற ஓசையையும் இடையிடையே எழுந்த மைதிலியின் கதறலையும் தவிர வேறு சத்தமேயில்லே.

அவளுக்கு ஏனோ அன்று வேதனை மட்டுமல்லாமல் பயமாகவும் இருந்தது.

'ஆறுமுகம் ஏன் இன்னும் வரவில்லே?'— அவருக்கு இருந்த பரபரப்பில் ஆறுமுகம் போய் வெகு நேரமாகி விட்டாற் போலத் தோன்றியது.

வாசற் கதவைத் திறந்து அவர் வெளியே பார்த்தார்.

நீண்டுகிடந்த தெருவில் இருளும் முனிஸிபல் விளக்குகளின் மங்கல் ஒளியும் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தன. எங்கோ தெரு மூலையில் பரிதாபமாக ஒரு நாய் ஊளை யிட்டது. ராமானுஜம் காதைப் பொத்திக் கொண்டார்.

தெரு மூலையில் இரண்டு உருவங்கள் தெரிந்தன. பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டார். ஆறுமுகமும் நர்ஸம்மும்தான்!

"அ...ம்...மா!"

'ஒரு அவசரக் காரியமென்றால் கூடவா இப்படி அன்ன நடை போடணும்!' என்று மனத்துக்குள் அவர்களைச் சபித்தார் அவர்.

"ஏண்டா இவ்வளவு நேரம்...?"

"நேரம் ஆகலிங்களே. போன கையோடு கூட்டி வந்திட்டேனுங்களே!"

"சரி...போ!"

"வாங்க அம்மா!"

கை கூப்பி அவருக்கு வணக்கம் செலுத்தி விட்டுப் பாப்பம்மாள் உள்ளே நுழைந்தாள்.

அவர் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டார். தூக்கம் வரவில்லே. மனத்தில் இனம் தெரியாத கலவரம் அலேபாய்ந்து கொண்டிருந்தது. அடிக்கொரு முறை உள்ளேயிருந்து மைதிலியின் குரல் வீறிட்டு எழுந்தது.

கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டே படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அவர், கடிகாரம் இரண்டு அடிக்கும் போது தம்மையும் மறந்து தூங்கியிருந்தார்.

"ஸார்...ஸார்...!"

"ஏனம்மா?" — கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார்.

"கேஸ் ரொம்ப ஸீரியஸ், டாக்டர். டாக்டர் வந்துதான் ஆகணும்! டாக்டர் வாசுதேவனை அழைக்கவர அனுப்புங்கோ...!" என்று பரபரப்புடன் கூறினள் நர்ஸ்.

டாக்டர் ராமானுஜத்துக்கு உடலெல்லாம் ஏனோ வியர்த்துக் கொட்டியது.

"வாசுதேவனையா...? இரண்டு வருஷமாக டாக்டரா இருக்கான். அவன் என்னத்தை யாவது எக்கச் சக்கமா...சேச்சே...!"

"ஏன்? நானேவரேன், நர்ஸ்!" என்று எழுந்தார் அவர். அறையின் மூலே மேஜைமீதிருந்த மருத்துப் பையை எடுத்துக் கொண்டார்.

"அதற்கில்லே டாக்டர். என்ன இருந்தாலும்......!"

"நீங்க போங்க, நர்ஸ்! நான் வரேன்!" நர்ஸ் மேலே ஒன்றும் பேசவில்லே.

கைப்பையைத் தூக்கிக் கொண்டு ராமானுஜம் மைதிலி இருந்த அறை வாசற்படியருகே வரும்போது "அய்யய்யோ! நீ இங்கே வராதே, அப்பா!" என்று மைதிலி அலறுவதை அவர் கேட்டார்.

அவர் கால்கள் ஒரு கணம் தயங்கின.

'குழந்தை! அவளுக்கு என்ன தெரியும்?' என்று நினைத்துக் கொண்டே அறைக்குள் காலே வைத்தார் டாக்டர் ராமானுஜம்.

"அ...ம்...மா...?"—அண்டம் அதிரும்படி கத்தினுள் மைதிலி. ராமானுஜம் அரண்டு போய் விட்டார்.

மைதிலிக்கு மூர்ச்சை போட்டு விட்டது.

கையும் காலும் அவருக்கு நடுங்கத்தான் செய்தன. என்ருலும் வாசுதேவனைக் கூப்பிடு வதில் அவருக்கு விருப்பமில்லை.

"டாக்டர் வாசுதேவனை வேண்டுமானல் கூப்பிடச் சொல்லட்டுமா?" என்ருள் செல்லம்.

"போமட, அசடு! என்னைவிட அவன் ரொம்ப அனுபவசாலி! வாசுதேவனும் வேண்டாம், வேறு யாரும் வேண்டாம்!"

அசட்டுத் துணிச்சல்தான்.

நிமிஷங்கள் ஓடின.

தாயும் பிள்ளையும் வேருனர்கள். ஆனல் தாய்க்கும் மூச்சில்லை! தங்க விக்ரிரகமாகப் பூமிக்கு வந்த குழந்தைக்கும் உயிர் இல்லை!

மைதிலி கதறியதை விடக் கோரமாகக் கதறிக் கொண்டு நிலைப்படியில் சாய்ந்தார் ராமானுஜம்...! அன்று வைத்தியத் தொழிலி லிருந்து விலகிக் கொண்டவர்தான்.

நினைவின் வெம்மையில் அவர் இதயம் கரைந்து கண்வழி பெருகிக் கொண்டிருந்தது.

அருகிலே இன்னும் யாரோ அழும் ஒலி கேட்டது.

கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த் தார். யாரும் இல்லை. டார்ச்சை அடித்துப் பார்த்தார். கூடத்தில் செல்லம் குறட்டை விட்டுக் கொண்டிருந்தாள். கடிகாரம் 'டிக்... டிக்...' என்று முனகிக் கொண்டிருந்தது.

கண்ணை மூடிக் கொண்டார்.

"அப்பா!"—

'யார்...?'—மூடிய கண்களுக்குள் மைதிலி தெரிந்தாள்.

"வராதீங்கன்னு நான் சொன்ன போது கேட்காமல் வந்து என்னைக் கொன்னுட்டீங்க! இப்ப அங்கே ஒரு பெண் துடிச்சிண்டிருக்கா... நீங்க போனல் ஒரு வேளை பிழைக்கலாம். அங்கே போகாமல் அவளையும் கொல்லப் போறீங்களா, அப்பா!"

வாசலில் வந்து சற்று முன் அழைத்த இளைஞன் தலையில் அடித்துக்கொண்டு கோர மாய் அவர் முன் அழுவது போன்ற பிரமை!

'சே! ஆஸ்பத்திரியிலும் டாக்டர் இல்லை யாமே! ஒருவேளை அந்தப் பெண்...!' அவர் முன் மைதிலி ஏனே கோரமாகச் சிரிப்பது அவருக்குக் கேட்டது.

கையைப் பிசைந்து கொண்டு கட்டிலில் அவர் உட்கார்ந்திருக்கையில் வாசற் கதவை மறுபடியும் யாரோ தட்டினர்கள்?

எழுந்து போய்க் கதவைத் திறந்தார்.


நர்ஸ் பாப்பம்மாள்!

"கொஞ்ச நேரத்துக்கு முன்னலே ஒரு பையன் வந்து கூப்பிட்டான். அந்தக் கேஸ் விஷயமாகத் தானே...?"

"ஆமாம். கொஞ்சம் தயவு பண்ணி...!"

"ஒரு நிமிஷம். இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடி ஞர் ராமானுஜம்.

'விஷயத்தைச் சொல்வதற்குள் எப்படி அவர் சம்மதித்து விட்டார்!' என்ற விந்தை புரியாமல் ஆச்சரியத்தில் ஸ்தம்பித்துப் போய் நின்ருள், நர்ஸ் பாப்பம்மாள்.


நான்
ஒருபொழுதும் அவை
இல்லாமல் இருப்பதில்லை
WILLS'S
Berkeley

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

38. சிரங்கு, சொறி, கரப்பான், புண்

"ஏன்டா? கிடந்து தவிக்கிறாயே? அந்த மோதிரத்தைக் கழற்ற முடியவில்லையா?"

"உம்......"

"கழற்ற வராவிட்டால் விரலோடு இருந்து விட்டுப் போகட்டுமே!"

"உம்...."

"அடே! ஊமைக் கோட்டானே! கழற்றித்தான் ஆக வேண்டுமென்றால் தட்டானிடம் போய் வெட்டி எடுத்து விடலாமே! இந்தத் தவிப்பு எதற்கு..?"

இது கேலியாய்ப் போன ஒரு ஹாஸ்யம். விரலிடுக்கிலுள்ள நமட்டுச் சிரங்கு. அதைத் திருகித் திருகிச் சொறியும் அழகு. அடடா! அப்படிச் சொறியும் போது என்ன ஆனந்தானுபூதி! தன்னை மறந்து, கண்களை இறுக மூடி, வாயைக் கோணலாக வைத்துக் கொண்டு, மேலே 'சொள்ளு' ஒழுகுவதையும் உறிஞ்ச மறந்து....கையை வளைத்து வளைத்து விரலைத் திருகும் காட்சியைப் பார்ப்பவர் நமட்டுச் சிரங்குக்காரரை இப்படிக் கேலி செய்வார்.

உடம்பில் வேறு இடங்களிலும் இவ்வித நமட்டுச் சிரங்கு இருந்து விட்டால்......... சொறிவது வேறுவிதம். "பிள்ளையாண்டான் பிடில் வாசிப்பதைத் தூக்கத்திலும் நிறுத்த மாட்டான்!" என்று பிறர் விமர்சனம் செய்யும்படியான அனுபவம் ஏற்படும்.

சிரங்கு, சொறி, நமட்டுச் சிரங்கு என்று இப்படிப் பல நாமங்கள் பூண்டுள்ள இந்த வியாதியின் விளைவாகச் சொறிந்த இடங்களில் பெரிய விரணங்கள் ஏற்படுவதையும் அல்லது கருமையான நிறம் - திட்டுத் திட்டாகவும் - புள்ளி புள்ளியாகவும் ஏற்படுவதையும் காண்கிறோம்.

"ஆமாமய்யா! இதற்குச் சிகிச்சையாக, மேற்பூச அருகம் புல்லில் தயாரிக்கும் தூர்வாதைலம் என்னும் எண்ணெய் அல்லது நால் பால்மரப் பட்டைகளின் கஷாயத்தில் எள்ளெண்ணெயோ தேங்காய்எண்ணெயோ கலந்து ஏலாதிகணத்தின் மருந்துகளைக் கல்க்கமாய்க் கூட்டிக் காய்ச்சும் எண்ணெய், கந்தக தைலம் என்று இப்படிச் சில தைலங்களை மேலுக்குத் தடவி ஊற வேணும். அல்லது ஊறிக் குளிக்க வேணும். உள்ளுக்கு அரியாறு கஷாயம்; மஞ்ஜிஷ்டாதி கஷாயம்; திக்தக கிருதம்; மஹாதிக்தக கிருதம் ; மாணிபத்ரகுடம் என்பவை போன்ற மருந்துகளைச் சாப்பிடவேணும் என்ற பல்லவியைத்தானே பாடப் போகிறீர்?" என்று கேட்கிறீர்களா?

"ஆமாம், இல்லை."

"இதென்னய்யா? ஆமாம், இல்லை என்று இரண்டையும் சொன்னால்?"

"கோபிக்கக்கூடாது. தெரிந்த விஷயத்தைத் திரும்பவும் சொன்னாலென்ன? மறதியைப் போக்க வழிகோலும். அது நல்லதுதானே? ஆகவே பழைய பல்லவியைப் பாடப் போகிறேன் என் பதில் குற்றம் இல்லை. புதிய மருந்துகளையும் சொல்லத்தான் போகிறேன். தமிழ் மொழியிலுள்ள, சித்தர் வகுத்த நூல்களிலிருந்து தெரிந்தெடுக்கும் எளிய முறைகளையும் எழுதுகிறேன் என்று ஏற்கெனவே வாசகர்களுக்கு வாக்களித்துள்ளேன். அதையொட்டிப் புதிய முறைகளையும் சொல்லத் தான் போகிறேன். ஆகவேதான் 'ஆமாம், இல்லை!' என்று இரண்டு பதிலையும் சேர்த்துச் சொன்னேன். இதில் தப்பென்ன இருக்கிறது?"

1. அம்மாம்பச்சரிசி என்று ஒரு பூண்டு. அருகம் புல் எவ்வளவு சாதாரணமானதோ, அவ்வளவு சாதாரணமானது - அனைவருக்கும் தெரிந்தது. இதன் இலையை அரைத்துப் பூசினால் சிரங்கு, சொறி முதலியவை உதிர்ந்து விடும். இங்கொன்றும் அங்கொன்றுமாயுள்ள சிரங்குகளில் இதன் பாலையும் தடவி விட்டு விடலாம். விழுதாக இதன் இலையை அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து ஐந்து பலம் தேங்காய் எண்ணெயில் இட்டுக் கருகக் காய்ச்சி வடிகட்டிய தைலத்தைச் சிரங்கு சொறிகளுள்ள இடங்களில் தடவலாம்...உடம்பு முழுவதுமானாலும் தடவி, ஊறி இலுப்பைப் பிண்ணாக்கினால் எண்ணெயைப் போக்கி வெந்நீரில் குளிக்கலாம்.

2. அரச மரத்தின் பட்டையில் கால்-அரைப்பலத்தை எடுத்துக் குடிநீர் வைத்துக் காலை மாலை குடித்து வர, சொறி சிரங்குகள் குணமாகும், வெப்பமும் அகலும்.

நமது தேச வரலாற்றில், காந்திஜிக்கும் நேருவுக்கும் உள்ள தொடர்பு, ஸ்ரீ ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் உள்ள தொடர்பைப் போன்றதாகும். நம் நாட்டு மக்களுக்கு இவ் விஷயத்தை விளக்க இதைக் காட்டிலும் தெளிவாகச் சொல்ல வேண்டியதில்லை. மற்ற நாட்டு அரசியல் வாதிகளின் உள்ளத்திலும் ஜவாஹர்லால் அசைக்க முடியாத இடம் பெற்றுவிட்டார். பாரதத்திற்கு அதைக் கண்டு ஒரு பொறாமையேகூட ஏற்படலாம். ஏனென்றால் ஜவாஹருக்கும் பாரதத்துக்கும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாத காதலர்களைப் போன்றது.

நமது கீர்த்தி மிகுந்த பிரதம மந்திரி அறுபதைத் தாண்டி விட்டார் என்பதை நினைக்கும் பொழுது நமக்கு நம்பிக்கையே உண்டாகவில்லை. நமக்கு அவர் எப்பொழுதுமே சிரஞ்சீவித்வம் பெற்ற வாலிபர்தாம்.

— ராஜாஜி

இப்பட்டையின் நுண்ணிய சூர்ணத்தைப் புண்களின்மேல் தூவிவரப் புண்கள் ஆறி விடும்.

3. அவரை என்று கறிசெய்யும் காயை ஒரு சிலர்தான் கண்டிருப்பார்கள். 'பீன்ஸ்' என்னும் 'வந்தேறி'யைத்தான் யாவருமறிவர். அவரை நம் நாட்டுத் 'த்விதளங்கள்' என்னும் 'சிம்பி தான்ய' இனத்தைச் சேர்ந்தது. அவரை, புடல், பாகல் ஆகியவற்றை வீடுகளின் பின்புறத்தில் பயிராக்காத தமிழர் இல்லையே இராதெனலாம். இந்த அவரையின் இலையைக் கசக்கிப் பிழிந்த சாறு ஒரு அவுன்ஸ்; ஆமணக்கின் எண்ணெய் ஒரு அவுன்ஸ். இவற்றுடன் கற்சுண்ணாம்பு ஒரு அவரைப் பருப்பினளவு. இவற்றைக் கூட்டிக் குழைத்தால் ஒரு களிம்பு போல் வரும். இதைப் பூசினால் சிரங்குகள் சொறி,புண்-யானைச் சிரங்கு ஆகியவை ஆறி விடும்.

4. அருகம் புல் லுடன் சிறிது மஞ்சள் சேர்த்து அரைத்தெடுத்துத் தடவி வந்தால் சொறி சிரங்குகள் மட்டுமல்ல—படர்தாமரையும் பறந்து போகும்.

5. அருகம்புல், கடுக்காய்த் தோல், இந்துப்பு, கிரந்தி தகரம், காஞ்சாங்கோரை இவற்றை அல்லது இவற்றில் கிடைத்தவற்றைச் சமன் எடையில் மோர் விட்டு அரைத்துப் பூசினால், சொறி சிரங்கு, படர்தாமரை ஆகியவை குணமாகும்.

6. ஆடுதீண்டாப்பாளை என்னும் பூண்டொன்று. இதன் சமூலத்தை [முழுப் பூண்டை] வெண்ணெய்போல் அரைத்து ஒரு தேங்காயளவில் உருட்டி எடுத்து, அதை ஒருபடி நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சி வடிகட்டிப் பூசலாம். பெருநோயிலும் இதை உள்ளுக்குக் கொடுக்கலாமென்றும்-சாப்பிடும்போது உப்பும் புளியும் நீக்குவது அவசியமென்றும் சாஸ்திரம்.

7. ஆலம் பழுப்பைச் சுட்டுச் சாம்பலாக்கி நல்லெண்ணெயில் கலந்து சிரங்கு சொறிகளுக்குப் பூசலாம். கரப்பானும் இதனால் குணமாகுமென்று சித்தர் நூல்கள் தெரிவிக்கின்றன.

8. ஆவாரம் பூவைப் பச்சைப் பயற்றுடன் சேர்த்து அரைத்துத் தேய்த்துக் குளித்து வர நமைச்சல் குணமாகும்.

9. இலுப்பைப் பிண்ணாக்கைச் சுட்டெடுத்துத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து பூசக் கடுவன், புண், கரப்பான் ஆகியவை குணமாகும்.

10. இலுப்பப் பட்டை இட்டுக் காய்ச்சி - எண்ணெயைப் பூசினால் கால் கடுவன் போகும். இப்பட்டை இட்டுக் காய்ச்சிய கஷாயத்தை விட்டுக் கடுவன் முதலானவற்றைக் கழுவினால் நல்லது.

11. இலைக்கள்ளியின் இலையை வரகு வைக்கோல் தீயில் வதக்கிப் பிழிந்தெடுத்த சாறு எல்லாவித கரப்பான்களுக்கும் நல்லது. இதில் ஒரு காசளவு உள்ளுக்கும் கொடுக்கலாமென்று சித்த வைத்திய நூல்கள் தெரிவிக்கின்றன.

12. ஊமத்தையின் இளங் காயைக் குடைந்து, அதற்குள் கந்தகத் துண்டை வைத்து, அக்காயினுலேயே குடையப்பட்ட வாயை மூடி, பசுவின் சாணத்துக்குள் வைத்துக் காய் வேகும்படி புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதன்மேல் உள்ள சாணத்தைப் போக்கி, வெந்த காயுடன் துளசி இலை சேர்த்து அரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு, பொடித்துச் சிரங்கின்மீது தூவச் சிரங்கு ஆறும். எண்ணெயுடன் குழைத்துப் பூசக் கரப்பான் போகும்.

போதுமா?...இவை யாவும் சித்தர்கள் தமிழ் நூல்களிலிருந்து தொகுத்தெடுக்கப்பட்டவை. யாவும் புதிய முறைகள். இதற்கு முன் இவற்றில் எதையும் நான் தெரிவித்ததில்லை. போதாதா...? இன்னும் சில தேவையா? சரி இதோ சொல்கிறேன்......

கோழி முட்டையின் மஞ்சள் கருவை மட்டும் பிரித்தெடுத்து எள்ளெண்ணெயுடன் குழைத்துப் பூசினால் தீப்புண், சுண்ணாம்பு வேக்காட்டுப் புண், தினவு, சொறி ஆகியவை நீங்கும். (தொடரும்)

ஏஸிஸி நியதியை அனுசரிக்கிறது

2

"விநயத்துடன், துரிதமான சிறந்த சேவையை எதிர்பார்க்க வாடிக்கையாளர்களுக்கு உரிமை உண்டு. இந்தகைய சேவையை அவர்களுக்கு அளிக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ள வேண்டும்."

நியதித் தொகுதியிலிருந்து —
போரம் ஆப் ப்ரீ என்டர்பிரைஸ்
(சுயமுயற்சி அரங்கம்)

ஏஸிஸி ஒரு மாபெரும் ஸ்தாபனத்தின் மூலம் சர்க்காரின் பங்கீட்டின்படி சிமெண்டை, சிறு அளவில் உபயோகிப்பவர்களுக்குக்கூட கிடைக்கும்படி நிரம்பட விநியோகிக்கிறது. வாடிக்கையாளர்களுக்குத் துரிதமாகவும், விநயத்துடனும், சிமெண்ட் கிடைக்கச் செய்ய ரயில், ரஸ்தா, ஆறு, வாய்க்கால், கடல் முதலிய எல்லா வித போக்குவரத்து வழிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இது மட்டுமல்ல. ஏஸிஸி அதன் வாடிக்கையாளர்களுக்குத் திருப்திகரமான சிறந்த உயர்தர சிமெண்ட் வழங்குவதோடு மட்டும் நிற்பதில்லை. அதன் தொழில் நுட்ப இலாகாவான கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா மூலம், கிடைக்கும் சிமெண்ட் உபயோகிப்போருக்கு இலவச தொழில் நுட்ப சேவையும் ஆலோசனையும்கூட ஏஸிஸி வழங்கி வருகிறது.

வாக்கிலும், கருத்திலும் நியதியை அனுசரிக்கும் சுயமுயற்சியின் மேன்மைக்கு இதுவே ஒரு எடுத்துக்காட்டு

தி அஸோஸியேடட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்

தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கோ. ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்.

ஜப்பானில் ஜவாஹர்



1



2

சமீபத்தில் பாரதத்தின் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள் பத்து தினங்கள் ஜப்பானில் சமாதான யாத்திரை செய்து விட்டு வந்தார் அல்லவா? அந்த யாத்திரைக் காட்சிகள் சிலவற்றை இந்தப் பக்கங்களில் காணலாம்.

1. பிரபல ஜப்பானிய நடிகர் ஹாலோ ஹாலோக்வா ஜப்பானில் நீண்ட நெடுங்காலமாக வழங்கும் சமூகச் சம்பிரதாயத்தை விளக்கிக் கூறி ஒரு ஜப்பானிய வாளைப் பிரதமர் நேருவுக்கு வழங்குகிறார்.

2. ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி அளித்த விருந்தில் ஜப்பான் பிரதம மந்திரியுடன் பாரதத்தின் பிரதமர் ஜவாஹர்லால் நேரு.

3. பிரதமர் ஜவாஹர்லால் நேருவுடன் சென்றிருந்த திருமதி இந்திரா காந்திக்கு இரண்டு ஜப்பானியப் பொம்மைகளை வழங்கிக் கௌரவித்தனர் டோக்கியோ நகரிலுள்ள ஜப்பானியப் பெண்மணிகள்.








1. ஜப்பானிலுள்ள இந்திய ஸ்தானிகர் திரு சி. எஸ். ஜா அளித்த விருந்தில் ஜப்பான் அரசியல் தலைவர்களும் பிரமுகர்களும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். அவர்களுடன் நேருஜி குதூகலமாகப் பேசி மகிழ்ந்தார். ஜப்பானிய இளவரசி சிக்கிபூவுடன் பிரதமர் ஜவாஹர்லால் நேரு சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்.

2. முதன்முதலாக உலகில் அணுகுண்டு விபத்துக்கு உள்ளான ஹிரோஷிமாவுக்கும் பிரதமர் நேரு விஜயம் செய்தார். அந்த நகரில் அணுகுண்டு விபத்துக்கு உள்ளானவர்களுக்காக வைத்துள்ள நினைவுச் சின்னத்துக்குச் சென்று மலர் வளையங்களை வைத்து வணங்குகிறார்.

3. ஜப்பானியப் பிரதம மந்திரி நோபஸ்கிஷி அளித்த தேநீர் விருந்தில் பிரதமர் நேருஜியும் இந்திரா காந்தியும். நேருவுக்கு இடது புறத்தில் அமர்ந்திருப்பவர்தான் நமது ஜப்பானியத் தூதர் திரு சி. எஸ். ஜா.







4. டோக்கியோவில் உள்ள மன்னர் அரண்மனையில் ஜப்பானிய மன்னர் ஹிரோஹிடோ, ராணி நாகாகோ. இளவரசர் அகிடோ ஆகியோர்களுடன் ஜவஹர்லால் நேருவும் இந்திரா காந்தியும்.

5. கல்கத்தா கலைக் கழகத்தினர் அன்புடன் அளித்த மகாகவி ரவீந்திரரின் படத்தை நேருஜி ஜப்பானியப் பிரதம மந்திரிக்கு வழங்கினார்.

6. கியோட்டோ நகருக்கு அருகில் உள்ள கிராமத்தில் நேருஜி தமக்கு வரவேற்பளித்த ஜப்பானியக் குழந்தைகளுடன் கைகுலுக்கி மகிழ்ந்தார்.

7. ஜப்பான் வாசேடா சர்வகலாசாலை ஜவஹருக்கு டாக்டர் பட்டம் அளித்துக் கௌரவித்தது. பட்டம் பெற்ற பிரதமர் மிகுந்த உற்சாகத்துடன் சர்வகலாசாலை மாணவர்களுக்குச் சொற்பொழிவு ஆற்றினர்.









1. இரண்டாவது உலக யுத்தம் முடிந்தவுடன் பல நாடுகள் ஜப்பானுக்குப் பரிசளித்தன. முதலில் பரிசளித்த நாடு இந்தியாதான். இந்தியாவின் சார்பில் ஜப்பானியக் குழந்தைகளுக்கு ஜவாஹர்லால்நேரு அளித்த இந்திரா என்னும் யானைக் குட்டியைப் பற்றி நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த யானைக் குட்டியைப் பார்த்து மகிழ்கிறார் நேருஜி.

2. நாரா தேசிய தோட்டத்தில் உள்ள மான்களும் நேருஜியை வரவேற்றன.

3. ஜப்பானில் உள்ள அழகு மிக்க அக்கென்னோ தோட்டத்தில் இருக்கும் அன்னங்களுக்கு ஆகாரம் அளிக்கிறார் நேருஜி.




நல்ல தேநீர் தயாரிக்க நீரை
அதிகமாக கொதிக்க வைக்காதீர்கள்
நீர் அதிகமாக (அல்லது அளவுக்குக் குறைவாக) கொதிக்க வைக்கப்பட்டால் உங்கள் தேநீர் அவ்வளவு நன்றாக சுவைக்காது.
ஐந்து முக்கிய விதிகளை பின்பற்றுங்கள்



கூந்தல் மற்றும் மூளை
அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபக சக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில்	ரூ. 4/-
சிறிய பாட்டில்	ரூ. 2/-

எங்கும் கிடைக்கும்



ராம்தீர்த் யோகாஷ்ரமம்
பம்பாய்-14. (C. RLY.)

ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க யோகாசனங்களை விவரிக்கும் எங்கள் அழகான ஆசனப் படத்திற்கு எழுதுங்கள். தபால் செலவு உள்பட ரூ. 2. மணியார்டரில் தொகை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். வீட்டிலேயே ஆசனங்களைச் சுலபமாகப் பழகலாம்.

சென்னை டெப்போ:
4/441, தங்கசாலைத் தெரு, சென்னை



Sole Distributors:
PENMEN'S INDUSTRIAL SERVICES
Kandivli, Bombay (S. D.)



இந்தியாவிலேயே மிக்க
அனுபவம் வாய்ந்த டூத் பிரஷ்
தயாரிப்பவர்கள்



பார்புகழும் நேரு



ஊரிலுள்ள சிறுவரெல்லாம்
ஒற்றுமையாய்க் கூடுவோம்
உலகம் போற்றும் ஜவகருக்கு
வாழ்த்து கீதம் பாடுவோம்

பார்புகழும் பண்டித நேரு
பன்னெடு நாள் வாழ்கவே!
பாரதநா டுயர் வதற்குப்
பல விதத்தில் ஆழ்கவே

அமாவாசை இருட்டைப் போல
அணுவின் குண்டு மிரட்டுது
ஆசியாவின் ஜோதி பாய்ந்து
அதனை உடன் விரட்டுது

சமாதானப் புறுவாக
சகல நாட்டில் பறக்கிறார்
சங்கடங்கள் இல்லாதிருக்க
சிறந்த மார்க்கம் உரைக்கிறார்!


மக்கள் நெஞ்சில் மலரும் அன்பை
மாலையாக ஆக்குவோம்
மழையில் களிக்கும் பயிரைப் போல
மகிழ்ச்சித் தேனில் தேக்குவோம்


பொக்கை வாயன் வாரிகவாம்
பொன் குணத்தான் நெஞ்சமே
புதுமையென்னும் பொலிவு காண
பாரதத்தைக் கொஞ்சவே.





கோ. கந்தசாமி


சித்திரத் தொடர் கதை
8
சோதிடப்புலி
அகுடயம்
(1) ஆண்டவனே! உன் திருவிளையாடலே திருவிளையாடல்! எலி, பொறியில் வந்து மாட்டிக் கொள்வது போலத் திருடியவள் என்னிடம் வந்து மாட்டிக் கொண்டாளே. அது எப்படி? யோசிக்க யோசிக்க விளங்க வில்லையே!
(2) உம்; அப்படித்தான் இருக்க வேண்டும்!
(3) சாமி! நீங்கள் சொன்னபடியே செய்து விட்டேன். ஆமாம்! உங்களுக்கு என் பெயர் எப்படித் தெரிந்தது?
(4) அதுவா? சோதிடனுக்குத் தெரியாதது ஒன்று உண்டா? உன் உண்மைப் பெயர் நாகு. உன் புருசன் செல்லமாகக் கூப்பிடும் பெயர் நாக்கு. என்ன நான் சொல்வது?
(5) நீங்க சொல்வது அவ்வளவும் நூத்துக்கு நூறு உண்மைங்க.
(6) சரி, ஜமீன்தார் வருகிற நேரமாச்சு! நீ போ.
(7) இந்த ஏழையைக் காட்டிக் கொடுத் திடாதீங்க!


8 அதெல்லாம் சொல்ல மாட்டேன். கவலைப்படாமல் நீ போ!
9 சோதிடம் சொல்வதற்குக் கொஞ்சம் மூளை வேண்டும். ஆனால் அதுதான் நம்மிடம் மருந்துக்குக் கூட இல்லை!
10 என்ன செல்வம்! ஏதாவது துப்பு கிடைத்ததா?
11 இத்தனை பூசை பண்ணின பிறகும் கிடைக்காமல் இருக்குமா? உங்கள் பொருள் பத்திரமாயிருக்கிறது, உக்கிராண அறை மாடத்தில்.
12 அப்படியா?
13 இதோ நான் போய்ப் பார்க்கிறேன்!
தொடரும்



33. சீடர்களின் ஏமாற்றம்!

பிரதம சீடனுக்கும், கார்குருவுக்கும் நடந்த சம்பாஷணைகளைக் கவனித்துக் கொண்டிருந்தஇரண்டாவது சீடனுக்குக் கார்குரு தன்னையும் அந்தச் சம்பாஷணைகளில் சேர்த்துக் கொள்ளாதது கோபத்தை உண்டாக்கியது. கோபத்தினால் சற்று வெளியே போய் விட்டுத் திரும்பி வந்தான்.

சீடன் கலா படுத்துக் கொண்டிருக்கும் அறைக்குச் சென்றான். மந்திர ஜமக்காளம் வைத்திருக்கும் பையை எடுத்தான். அதில் இருக்கும் ஜமக்காளத்தையும் முத்து மாலையையும் கையில் எடுத்தான். 'பாவம், இது ஒரு சாதாரண முத்து மாலை. கலா வெளியில் போகும் பொழுது அணிந்து கொள்வதற்காக வைத்திருக்கிறாள்போலிருக்கிறது. நாம் அதைக் கார்குருவுக்குச் சொல்லாமல் எதற்காக எடுக்க வேண்டும்?' என்று முத்து மாலையைப் பையிலேயே போட்டுவிட்டான். பிறகு ஜமக்காளத்தை எடுத்துக் கார்குருவின் இரகசிய அறையில் உள்ள ஒரு பீரோவின் மீது வைத்தான். பையில் இருந்த ஜமக்காளத்தைப் போலவே வேறொரு ஜமக்காளத்தை எடுத்துப் பையில் வைத்தான். பையைக் கலா படுத்திருக்கும் கட்டிலுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு மேஜையின் மீது வைத்து விட்டு வெளியே வந்து விட்டான்.

தான் எடுத்துக் கொண்ட முயற்சி பலித்து விட்டதைப் பற்றிச் சந்தோஷம் அடைந்தான் கார்குரு. "சீடா! வா. நாம் நம் அறையில் படுத்துத் தூங்கலாம். நாளைக் காலையில் கலா நம் மீது சந்தேகம் கொள்ளாதபடி அவளை நம் வீட்டை விட்டு அனுப்புவது தான் நம்முடைய சாமர்த்தியம்" என்றான் கார்குரு.

தனிமையாகக் கார்குருவின் வீட்டு அறையில் படுத்துக் கொண்டிருந்த கலா மயக்கத்திலிருந்து வெகு நேரம் வரையில் இரவில் எழுந்திருக்கவில்லை. பொழுது விடியும் சமயத்தில் தான் கண்ணை விழித்துக் கொண்டாள். தான் கார்குருவின் வீட்டில் இருப்பதைத் தெரிந்து தனக்கு என்ன ஆபத்து வரப் போகிறதோ என்று பயந்தாள். உடனே தன் பையில் உள்ள ஜமக்காளமும், முத்து மாலையும் ஜாக்கிரதையாக இருக்கின்றனவா என்று படுக்கையை விட்டு எழுந்திருந்து அவசரம் அவசரமாகப் பையைத் தேடினாள். தனக்குப் பக்கத்தில் இருந்த மேஜையின் மீது பை இருக்கிறதைப் பார்த்து மிகவும் பயத்துடன் பையைப் பிரித்துப் பார்த்தாள்.

ஜமக்காளம் அப்படியே இருக்கிறதைப் பார்த்து அளவிலா ஆனந்தம் கொண்டாள். முத்துமாலை இருக்கிறதா என்று பைக்குள் கையை விட்டுப் பார்த்தாள். முத்து மாலையும் ஜாக்கிரதையாக இருந்தது. 'ஏன் என் பையிலிருந்து ஜமக்காளத்தை நான் மயக்கமுற்று இருக்கும் பொழுது கார்குரு எடுத்துக் கொள்ளவில்லை? ஜமக்காளத்துக்காகத்தானே அவன் என்னையும் என் அண்ணனையும் பிரித்தான்? அதனால் எனக்கு வேறு ஏதோ ஒரு பெரிய ஆபத்தைச் செய்யவே இங்கே அழைத்து வந்திருக்கிறான் என்று தெரிகிறது. என்னை இங்கே அழைத்து



வந்தவனுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து அல்லவா ஏமாந்து போனேன்? இப்பொழுதுதானே அவன் கார்குருவைச் சேர்ந்தவன் என்று தெரிகிறது? விரைவில் இந்த இடத்திலிருந்து தப்பி ஓட வேண்டியது தான். பொழுதும் விடிந்து விட்டது' என்று எழுந்திருந்து பையை எடுத்துக் கொண்டாள். தான் படுத்துக் கொண்டிருந்த அறையை விட்டு வெளியே வந்தாள். அப்பொழுது கார்குரு அங்கே வந்தான்.

"என்ன கலா! என் வீட்டை விட்டுப் போகும்போது என்னிடம் சொல்லிக்கொள்ளாமல் போகலாமா?" என்று கேட்டான்.

"உன்னிடம் எதற்காகச் சொல்லிக் கொள்ள வேண்டும்? என்னை ஏமாற்றி அல்லவா இங்கு அழைத்து வந்திருக்கிறாய்? இல்லா விட்டால் உன் வீட்டுக்கா நான் வருபவள்?" என்றாள் கலா.

"ஏன் கோபமாகப் பேசுகிறாய்? நீ இங்கு வந்ததற்கு உனக்கு என்ன தீங்கு இழைத்தேன்? உன் பொருள்களெல்லாம் உன்னிடத்தில் தானே இருக்கின்றன? மால்கோஷைப் பற்றிய செய்திகளைச் சொல்லவே உன்னை இங்கு அழைத்து வந்தேன். மால்கோஷ் சௌக்கியமாகத் தான் இருக்கிறான். ஆனால் இப்பொழுது இங்கு இல்லை. இந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டான்" என்று கார்குரு சொன்ன உடனே, "உன் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை இல்லை. என் அண்ணா எங்கே இருக்கிறான் என்று நானே கண்டு பிடித்துக் கொள்ளுகிறேன்" என்று பதில் சொன்னாள் கலா.

"அப்படியானால் உன் விருப்பப்படி செய். ஆனால் இப்பொழுதே என்னுடைய உதவியை நாடி வருவாய்" என்றான் கார்குரு.


"உன் உதவி எனக்குத் தேவையில்லை" என்று கூறி விட்டுக் கலா வெகு வேகமாக வாசல் பக்கம் போனாள். எப்படியாவது அவ்விடத்தை விட்டுப் போக வேண்டுமென்பதே அவளது நோக்கம். வெகு வேகமாக வாசற்பக்கம் வந்து தனது மந்திர ஜமக்காளத்தை அவசரம் அவசரமாக விரித்து முத்து மாலையைக் கழுத்தில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

"கார்குரு அவர்களே! நீங்கள் பயப்பட வேண்டாம். நான் நீங்கள் சொல்லியபடி ஜமக்காளத்தை மாற்றி வைத்து விட்டேன். கலா உட்கார்ந்திருப்பது நீங்கள் உபயோகிக்கும் சாதாரண ஜமக்காளமே. அதைப் பார்த்தால் கலாவின் மந்திர ஜமக்காளத்தைப் போலவே தோற்றமளிக்கும்" என்றான் பிரதம சீடன்.

உடனே இரண்டாவது சீடன், "என்ன அப்பா சொல்லுகிறாய்?" என்றான்.

"உனக்குத் தெரியாவிட்டால் பேசாமல் இரு. குரு சொன்னவுடன் ஜமக்காளத்தை மாற்றி வைத்து விட்டேன். அப்பொழுது நீ இங்கு இல்லை. நான் ஒருவருக்கும் தெரியாமல் இரகசிய அறையில் வைத்திருந்தேன்" என்று பதில் சொன்னான் பிரதம சீடன்.

உடனே இரண்டாவது சீடன், "நீ படுத்துக் கொள்ளும்பொழுது, 'குரு ஜமக்காளத்தை மாற்றச் சொன்னாரே. அது முக்கிய விஷயமாயிற்றே. மாற்றி விட்டாயா?' என்று நான் கேட்டதற்கு 'இப்பொழுது அதற்கு என்ன அவசரம்?' என்று சொல்லி விட்டுப் படுத்துத் தூங்கி விட்டாயே. நீ தூங்குகிறாயே என்று நான் குரு சொன்னபடி கலாவின் பையிலிருந்த ஜமக்காளத்தை இரகசிய அறையில் வைத்துவிட்டு, அங்கே இருந்த ஜமக்காளத்தைக் கலாவின் பையில் வைத்



தேன்!'' என்றான். அவ்வளவுதான்; பிரதம சீடனுக்குப் பிரமாதமான கோபம் வந்து விட்டது. ''நீ கேட்டதற்கு ஏதோ விளையாட்டாகச் சொன்னதை உண்மை என்று நம்பி எனக்குத் தெரியாமல் நான் மாற்றி வைத்ததை மறுபடியும் நீ மாற்றி விட்டாயே!'' என்றான் கலவரத்துடன்.

அந்தச் சமயத்தில் கலா 'விர்' என்று ஜமக்காளத்தில் பறந்து சென்றாள்.

''என் திட்டங்கள் உங்கள் இருவருடைய மூடத்தனத்தினாலும் வீணாக அல்லவா போய் விட்டன. எங்கே நீங்கள் ரகசிய அறையில் வைத்ததாகச் சொல்லும் ஜமக்காளத்தை எடுத்துக்கொண்டு வாருங்கள்'' என்றான் கார்குரு.

இரண்டாவது சீடன் ஓடிப் போய் ஜமக்காளத்தைக் கொண்டு வரவே அதை வாங்கிப் பார்த்த கார்குரு, ''சீ, இது நான் உபயோகிக்கும் ஜமக்காளம்அல்லவா? இரண்டு பேருமாகச் சேர்ந்து எனது காரியத்தைக் கெடுத்து விட்டீர்கள்'' என்று கோபத்துடன் ஜமக்காளத்தை இரண்டாவது சீடன் முகத்தில் விட்டெறிந்தான்.

* * *

கார்குருவின் வீட்டுக்கு வந்து விட்டுத் தோட்டப் பக்கமாகப் போன மந்திரக் கிழவி கார்குருவின் ஊரை விட்டுப் போக வில்லை. தலைமறைவாகவே இருந்து கலாவுக்குக் கார்குரு ஏதாவது கெடுதி செய்கிறானா என்று பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் மறுநாள் காலையில் மந்திர ஜமக்காளத்தில் கலா பறந்து சென்றதைப் பார்த்துச் சந்தோஷம் கொண்டு அவ்வூரை விட்டுப் புறப்பட்டுப் போனாள்.


கலா தான் கார்குருவிடமிருந்து தப்பித்தது தனது அதிர்ஷ்டமே என்று கருதினாள். அவளது அதிர்ஷ்டத்துக்குக் கார்குருவின் இரண்டாவது சீடன்தான் காரணம் என்று அவளுக்கு எப்படித் தெரியும்? ஒவ்வொரு இடமாகக் கேட்டுக் கொண்டே மால்கோஷைக் கண்டுபிடிப்பதில் முயற்சி செய்தாள். அவளுடைய முயற்சி வீணாக வில்லை. மால்கோஷ் எந்த ஊரில் இருந்தானோ, அந்த ஊருக்கே வந்துசேர்ந்தாள். சிலபேர்கள் சொல்லிய அடையாளத்திலிருந்து மால்கோஷ் அங்குதான் இருக்கிறான் என்று நிச்சயப்படுத்திக் கொண்டாள். மெதுவாக ஒவ்வொரு இடமாகத் தேடி அலையும்போழுது ஒரு வீதியில் மால்கோஷ் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தாள் கலா.

'அதோ போவது மால்கோஷ்தான். கண்டு பிடித்து விட்டேன்' என்று சந்தோஷமடைந்து அவனை நெருங்கினாள். கைதட்டிக் கூப்பிட்டாள். கைதட்டியவுடன் திரும்பிப் பார்த்தான் மால்கோஷ். 'ஆமாம் மால்கோஷ்தான். சந்தேகமில்லை' என்று அவன் அருகில் சென்று, ''அண்ணா! மால்கோஷ்!'' என்று கூப்பிட்டாள். அவன் பதில் சொல்லாமல் போய்க் கொண்டிருந்தான். கலாவும் அவனைக் கூப்பிட்டுக் கொண்டே பின்தொடர்ந்தாள். அவளைப் பார்த்த சில பேர்கள், ''என்ன அம்மா! அவனைப் போய் அண்ணா, அண்ணாவென்று கூப்பிடுகிறாய்? அவன் உன் அண்ணாவாக இருந்தால்தானே அவன் உனக்குப் பதில் சொல்லுவான்? அவன் புத்தி சுவாதீனமில்லாமல் இருக்கும் ஒரு பைத்தியக்காரன்'' என்றார்கள்.

'ஆமாம்! இவர்கள் சொல்வது உண்மைதான். இவன் அணிந்து கொண்டிருக்கும் உடுப்புகளிலே இருந்து இவன் மால்கோஷ் இல்லை என்று தெரிகிறது. இவன் முகத்தைப் பார்த்தாலே பயமாக அல்லவா இருக்கிறது? இவனது ஜேபியிலே பந்து இருப்பதாகவும் தெரியவில்லை. என் அண்ணாவாக இருந்தால் என்னைக் கண்டதும் அன்போடு ஓடி வராமலா இருப்பான்? பார்ப்பதற்குக் கொஞ்சம் மால்கோஷைப் போல் தோற்றமளிக்கிறானே தவிர இவன் மால்கோஷ் இல்லை' என்று மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டாள் கலா. (தொடரும்)



உங்களுடைய ஆடைகளுக்கும்
டினேபால் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் கவனிக்கிறேன்
வெண்மையாக்க வேண்டிய வெள்ளை துணிகளுக்கு டினேபால்தான் மறுமொழி. சிறிது அளவு டினேபால் நீண்டநாள் தாங்கும். மூன்று, நான்கு சலவைகளுக்கு ஒரு தடவை டினேபால் உபயோகித்தால் போதும்.
டினேபால்
ஸுஹ்ருட் கெய்கி ட்ரேடிங் பிரைவேட் லிமிடெட்
பி. ஓ. பாக்ஸ் 965 - பம்பாய்



சாவித்திரி கூறுகிறார்:

"நறுமணத்திற்கும் மென்மைக்கும் நான் தேர்ந்தெடுப்பது லக்ஸ் டாய்லெட் சோப்"

பிரபல சினிமா நட்சத்திரமாகிய சாவித்திரி அன்றாடம் தமது பொலிவான மேனிக்கு மணங் கமழும், தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்பையே உபயோகித்து வருகிறார். நீங்களும் அதை ஏன் உபயோகிக்கக்கூடாது?

லக்ஸ்
டாய்லெட் சோப்

சினிமா நட்சத்திரங்களின்
அழகுசாதன சோப்

LTS-553-50 TM பம்பாயிலுள்ள ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் கம்பெனியின் தயாரிப்பு



மாலவல்லியின் தியாகம்

அத்தியாயம் 20

பிருதிவீபதியின் குழப்பம்

தன் எதிரே குதிரையிலிருந்து கம்பீரமாக இறங்கிய வீர புருஷனைப் பார்த்ததும் சுகேசியின் உடம்பு புளகமுற்றுச் சிலிர்த்தது. உருக்கி வார்த்த தங்கச் சிலையைப் போலிருந்த அவள் மேனி இலேசாக நடுங்கியது.

அவள் செவிகளில் வித்தியாதர உலகத்து இன்னிசை வாத்தியங்கள் அழகாக ஒலித்து இன்பத்தை நிரப்பின. அவள் மனக்கண் முன்னால் கந்தர்வ அணங்கு ஒருத்தி தோன்றி, அமரர் உலகத்தின் அற்புத இசைக்கு ஏற்ப அழகாக ஆடினாள். கின்னரர்களும், கிம்புருடர்களும் மங்கல வாத்தியங்களின் இழும் எனும் ஓசையினால், அந்தச் சுனைக் கரையை ஆனந்த உலகமாக மாற்றி விட்டனர். வானத்திலிருந்து மலர் மாரி பொழிந்தது. 'கம்'மென்ற நறுமணம் அந்தப் பிரதேசம் முழுவதையும் ஆட்கொண்டது.

"அன்பே! என்ன ஒரேயடியாகத் திகைத்து விட்டாய்?" என்று கேட்டுக் கொண்டே பிருதிவீபதி அவளை நெருங்கி வந்தான்.

சுகேசிக்கு இப்போது தான் காண்பது கனவோ என்று சிறிது ஐயம் தோன்றியது. கண்களை மூடி மூடித் திறந்தாள்; ஒருமுறை கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தாள். அவள் ஐயம் நீங்கி விட்டது.

பிருதிவீபதி 'அன்பே!' என்று அவளை அழைத்த சொல் அவளை 'வான வீதிக்கு அழைத்துச் சென்றது. தேகம் முழுவதும் திடீரென்று பரவிய இன்பவுணர்ச்சி கொஞ்சமும் எதிர்பாராததாயும், எல்லையற்ற இன்பசாகரத்தில் அவளைத் தள்ளுவதாயும் இருந்தது.

"மயிலரசி! நெடுநாட்களாக என்னைக் காணாமல் இருந்ததில் உனக்கு உண்மையில் கோபமாகத்தான் இருக்கும். மன்னித்து விடு. இத்தனை நாட்களிலும் உன்னை ஒரு நாள் கூட நான் மறக்கவில்லை...!"

சுகேசியின் உள்ளத்தில் வியப்பும் ஆனந்தமும் பெருகி அவளை நிலைதடுமாறச் செய்தன.

'என்ன ஆச்சரியம்! தன் உள்ளம் அவருக்கு எப்படித் தெரிந்தது? தன்னைப் பற்றியே இத்தனை நாட்களும் நினைத்து அவர் உருகியிருக்கிறார். தான் மட்டும் என்ன? இரவும் பகலும் அவரைப் பற்றிய கனவிலும் நனவிலும்தானே கழித்து வந்திருக்கிறாள்! ரொம்பப் பொல்லாதவரா யிருக்கிறாரே! அன்று ஒரு நாள் கொஞ்ச நேரம் கள்ளப் பார்வை பார்த்து விட்டு, இத்தனை தூரம் நெருங்கிப்பேச வந்து விட்டாரே. அம்மம்மா! இவருக்குத்தான் எத்தனை தைரியம்! நான் மிகவும் பாக்கியசாலி. இத்தனை சீக்கிரத்தில் என் அன்புக்குரியவரைச் சந்திப்பேன் என்று நான் நினைக்கவேயில்லை. ஆனால் என் உள்ளம் தேடியலைந்த தெய்வம் என்னை நாடி வந்து விட்டது. ஆமாம், இவருடன் என்ன பேசுவது; ஆசிரமத்துக்கு வந்தால் ஒன்றும் பேச முடியாது என்று கருதித்தான் சுனைக்கரையைத் தேடி வந்திருக்கிறார். கெட்டிக்காரர்......!'

சுகேசி மிகவும் நாணத்துடன் தலை நிமிர்ந்து பிருதிவீபதியைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான். கண்களும் கண்களும் ஒரு கண நேரம் உறவாடிக் கொண்டன.

"தேவியின் கோபம் இன்னும் தணியவில்லையா? மலரினும் மென்மையானது மங்கையர் இதயம் என்பார்களே! ஆனால் உன் மனம்...! இருக்கட்டும். உன்னைப் பிரிந்து வெகு நாட்களாகி விட்டன. இல்லையா? காவிரிப் பூம்பட்டினத்தில் சம்பாதி வனத்துக்கு அருகில் உன்னைக் கடைசியாகப் பிரிந்து சென்றேன். அதற்குள் என்னவெல்லாமோ கஷ்டங்கள் உன்னுடைய வாழ்வில் நேர்ந்து விட்டன. ஆனால் எல்லாவற்றுக்கும் நான் தான் காரணம். நான் அப்பொழுதே உன்னை என்

கி. ரா. கோபாலன்

னுடன் அழைத்துச் சென்றிருக்க வேண்டும். நான் அதில்தான் தவறு செய்து விட்டேன். மாலவல்லி! என்னுடன் பேச மாட்டாயா?'' என்றான் பிருதிவீபதி.

இதைக் கேட்ட சுகேசி துணுக்குற்று, சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவனும் அவளைக் கவனித்துப் பார்த்தான்.

இருவருடைய நயனங்களும் சிறிது நேரம் அசையாமல் விழித்தது விழித்த படியே நின்றன.

முதலில் பிருதிவீபதியே பேசினான்: ''நீ ஜைன முனிவர் அரிஷ்டநேமியின் ஆசிரமத்தில் இருப்பவளல்லவா?''

''..ஆமாம்..அந்தத் துர்ப்பாக்கியவதி நான்தான். நான் பிறந்த சில ஆண்டுகளுக்குள் பெற்றோரைத் தவிக்கச் செய்து கள்வர் கூட்டத்தினரால் அபகரிக்கப்பட்டேன். என்னைக் கொடிய நரபலிக்காரர்களிடமிருந்து மீட்டு வந்து தாயும் தந்தையுமாயிருந்து காப்பாற்றி வரும் ஜைன முனிவருக்கும் என்னால் சதாதொந்தரவுதான்; அவருடைய தவ வாழ்வுக்கு இடையூறுதான். என்னைச் சந்தித்து, அடைக்கலப் பொருளாக ஏற்றுக் கொள்வதாக என் தந்தை அரிஷ்டநேமி முனிவரிடம் வாக்குக் கொடுத்த தங்களுக்கும் இப்பொழுது என்னால் துன்பம் நேர்ந்து விட்டது. தங்கள் அன்புக்குரிய மாலவல்லியின் சாயலை என்னிடம் காண நேர்ந்ததால், பாவம் நீங்கள் தடுமாற்றம் அடைந்து விட்டீர்கள். அறியாமையினால் நேர்ந்த இந்தக் குழப்பத்துக்கு மன்னிக்க வேண்டுகிறேன்...'' என்று கூறும்போது சுகேசியின் குரல் தழதழத்தது. பொலபொல வென்று கண்ணீர் வடிந்தது. சற்று முன் மலர்ச்சியோடு காணப்பட்ட அவளுடைய அழகான வதனம் வாடி விட்டது.

பிருதிவீபதிக்குத் தலை சுழன்றது. அவன் கொஞ்சமும் எதிர்பாராதது நடந்து விட்டது. மாலவல்லிக்கும் சுகேசிக்கும் இருந்த உருவ ஒற்றுமை வித்தியாசம் கண்டு பிடிக்கக் கூடாததாக இருந்தது. மேலும் பிருதிவீபதியின் உள்ளத்தில் சுகேசி நிலைபெற்றிருக்கவில்லை. அவளிடம் தான் என்னென்னவோ பேசிவிட்டது, அவனுக்கே சிறிது வெட்கமாகப் போய்விட்டது. அவளுக்கு எவ்விதம் சமாதானம் கூறுவது என்று அவனுக்குத் தெரியவில்லை.

சுகேசியும் ஒருவிதமான குழப்பத்தையே அடைந்திருந்தாள். முதலில் பிருதிவீபதியைக் கண்டதும், தன் மனத்துக்குகந்த காதலனைப் பார்ப்பதாக எண்ணிக் கொண்டிருந்தவரையில் அவளது உணர்ச்சி கட்டிப் பிடிக்கக் கூடாததாக இருந்தது. அவன் மாலவல்லியென்று நினைத்துக் கொண்டு தன்னுடன் பேசினான் என்ற உண்மை தெரிய வந்ததும், அவளுக்கு ஏற்பட்ட மன வேதனையைச் சொல்லி முடியாது. அவள் உடம்பெல்லாம் குப்பென்று வியர்த்து விட்டது.

ஒரு பெரிய மலையின் மேலிருந்து கட கட வென்று தன்னை யாரோ உருட்டி விட்டது போல் தோன்றியது அவளுக்கு. தனக்கு முன்பின் அறிமுகமில்லாத ஆடவன் ஒருவனுடன் தான் தனித்து நிற்பதாகவே அவளுக்குத் தோன்றியது.



மாலவல்லி தன் தந்தையின் பாதுகாப்பில் இருப்பதை அவனிடம் சொல்லி விடலாமா என்று நினைத்தாள், சுகேசி. ஆனால், மறுகணம் அவள் நா எழும்பவில்லை. அதனால் மாலவல்லிக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால்...!,

பிருதிவீபதி தன் தொண்டையை ஒரு முறை கனைத்துக் கொண்டான்.

''பெண்ணே! வருந்தாதே. உன் தகப்பனார் அரிஷ்டநேமி முனிவரிடம்கூறிய வாக்குறுதியை நான் மீறவில்லை. முன்பு என்னுடன் வந்த நண்பரும் நானும் மேற்கொண்ட காரியம் இன்னும் பூர்த்தியாகவில்லை. அது பூர்த்தியானதும் அவசியம் வந்து நான் உன்னை அழைத்துக் கொண்டு போவேன். நான் இன்னும் சில நாட்களில் மீண்டும் வருவேன். மாலவல்லிக்கு ஏதோ துன்பம் நேர்ந்து விட்டது. அவள் நந்திபுரத்திலிருந்து வெளியேறி விட்டாள். அவளைக் கண்டுபிடித்துக் கொண்டு வரவேண்டியது என் முக்கியமான கடமைகளில் ஒன்று......நான் மீண்டும் உன்னைச் சந்திக்கிறேன். எதிர்பாராதவிதமாக நேர்ந்து விட்ட இந்த மன வருத்தத்துக்கு என்னை மன்னித்து விடு!'' என்று கூறிவிட்டு, சட்டென்று தாவிக் குதிரையின் மேல் பாய்ந்து ஏறினான்.


மறுபடியும் மாலவல்லியைப் பற்றிக் கூறி விடலாமா என்ற எண்ணம் சுகேசியின் தொண்டை வரையில் வந்தது.

ஆனால் அவளால் அதைச் சொல்ல முடியவில்லை. மேலும், பிருதிவிபதி ஏறியிருந்த குதிரை மறுகணம் தாவிப் பாய்ந்தது. குதிரை சென்ற பாதையில் வானளாவப் புழுதி கிளம்பி மறைத்தது.

சுகேசிக்குத் தன் மனத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியவில்லை. எவ்வளவு முயன்றாலும் அவளால் பிருதிவிபதியை மறக்க முடியவில்லை. அவன் மாலவல்லியைத்தான் நேசிக்கிறான் என்பதை யறிந்துகொண்ட பின்பும் அவள் மனம் ஏனோ அவன் நினைப்பில் அலைந்து தவித்தது.

ஆனால் ஒரு பக்கம் அவள் மனத்துக்கு ஆறுதலும் ஏற்பட்டது. அநாதையான மாலவல்லியை அவன் காதலிப்பது அவள் உள்ளத்துக்கு இதமாயிருந்தது.

சுனைக்கரையிலிருந்து ஆசிரமத்துக்கு வந்த பின்பும், சுகேசி எப்போதும்போல் உற்சாகமாயில்லை. மாலவல்லியிடம் சுனைக்கரையில் நிகழ்ந்தது எதையும்



சொல்லவில்லை. மனத்துக்குள்ளேயே வைத்துக் கொண்டு மறுகினாள்.

சுகேசியின் திடீர் மாறுதலைப் புரிந்து கொள்ள முடியாமல் மாலவல்லி தவியாய்த் தவித்தாள்.

ஆகாரம், நித்திரை எதிலும் கவனமின்றி, சுகேசி மனத்தை எங்கேயோ அலைய விட்டு அவதிப்படுவது மாலவல்லிக்கு நன்றாய்த் தெரிந்தது: அவள் போக வேண்டாமென்று தடுத்


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும் பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்தலின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்

னும் கேளாமல் மாலவல்லி இடுப்பில் நீர்க் குடத்துடன், சுனைக்கரையை நோக்கிப் புறப்பட்டாள்.

சுகேசிக்கு மாலவல்லியைச் சுனைக் கரைக்கு அனுப்புவதில் விருப்பம் இல்லை யென்றாலும், ஒருவேளை அவள் காதலன் அவளை அங்கு சந்திக்க வசதி நேரலாம் என்ற எண்ணமும் அவள் உள்ளத்தின் ஒரு மூலையில் இருந்துகொண்டு உறுத்தி யது. ஆகவே, மாலவல்லி சுனைக் கரைக் குத் தண்ணீர் கொண்டுவரப் போவதை அவள் பாதி மனத்துடன் ஆதரித்தாள்.

சுகேசியின் மனப் புழுக்கத்துக்குக் காரணம் அறிந்துகொள்ள முடியாமல் மாலவல்லி வேதனைக்கு ஆளானாள்.

அந்தி வேளையின் அழகு அந்த மலைப் பிரதேசம் முழுவதும் நிரம்பி வழிந்தது. மனித சஞ்சாரமற்ற அந்த வனப் பிர தேசத்தில், மாலவல்லி ஒரு வனதேவதை யைப் போல் சென்றுகொண்டிருந்தாள். அவள் கவனம் முழுவதும் சுகேசியைப் பற்றிய நினைவுகளிலேயே தங்கியிருந்தது.

'மனித உள்ளத்தை மாற்றியமைக் கும் சக்தி காதல் ஒன்றினால்தான் சாத் தியமாகும். தெள்ளிய நீர் நிலையில் ஒரு கல் விழுந்து சலனம் ஏற்படுத்துவது போல் சுகேசியின் உள்ளத்தைக் கலக்க முறச் செய்வதற்கு வேறு என்ன இந்த வனப் பிரதேசத்தில் நிகழ்ந்திருக்கக் கூடும்?...... ஆமாம்! ஒருவேளை அவ ளுடைய காதலன் அவளைச் சந்தித்திருக் கக் கூடுமோ......!'

இந்த எண்ணங்களின் ஓட்டத்தில் தன்னை மறந்தவண்ணம் சென்றுகொண் டிருந்த மாலவல்லியின் நடையை 'டக் டக்! டக் டக்!' என்ற குதிரைக் குளம் பொலி சற்று நிறுத்தியது.

அவள் நாலாபுறமும் பார்த்தாள். அந்தச் சமயம், குன்றுகளின் சூழலி லிருந்து ஒரு குதிரை வீரன் அவளெதிரே வந்து 'டக்' என்று குதிரையை நிறுத் திக் கீழே இறங்கினான்.

அவனைக் கண்டதும் மாலவல்லி ஒரே வியப்பில் ஆழ்ந்தாள்.

''......சுகேசி! அன்றைக்கு உன் மனம் மிகவும் குழம்பிப் போயிருக்கும். உன் னைச் சஞ்சலத்திலாழ்த்திய நான் உன் உறைவிடம் வரையில் வந்து உன்னைத் தந்தையாரிடம் ஒப்புவித்துவிட்டுச் சென் றிருக்க வேண்டும். ஆனால் அவசர அலு வலை மேற்கொண்டிருந்தபடியினால் அவ் வாறு செய்ய இயலவில்லை. நீ வெளியே தனியாக வருவது மிகவும் ஆபத்து. உன்னை அபகரித்துச் செல்ல, நந்திபுர நகரத்து வீரர்களும், பழையாறை வீரர் களும் சதா கண்ணுங் கருத்துமா யிருக் கிறார்கள் என்னும் உண்மை என் ஒற் றர்கள் மூலம் தெரிய வந்தது.... சுகேசி...!'' என்று கூறிப் பிருதிவிபதி குனிந்திருந்த மாலவல்லியின் முகத்தை நெருங்கிப் பார்த்தான்.

மாலவல்லியும் அவனை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஆ...! மாலவல்லியா? நீ எப்படி இங்கே வந்தாய்?...'' என்று கேட்டுத் திகைத்தான் பிருதிவிபதி.

எதிர்பாராமல் சந்தித்ததனாலும், வெகு நாட்களுக்குப் பிறகு நேர்ந்த சந்திப்பாதலாலும் பிருதிவிபதியின் திகைப்பு நீங்கவே இல்லை.

''தங்களிடம் இத்தகைய மாறுதலையே நான் எதிர்பார்த்தேன்......சுகேசி...... சூதுவாது தெரியாத இளம் பெண். அவள் தங்களையே பரிபூரணமாக நம்பி யிருக்கிறாள். அவளுக்கு வாழ்வளிக்க வேண்டியது உங்கள் கடமையாகும். புத்தர்பிரான் அருள்தான் என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்து, சுகேசியி டம் நட்புப் பூணவும், அவளுடைய இதயத்தை அறியவும் நல்ல வாய்ப்பை அளித்தது. தாங்கள் ஏற்கெனவே ஜைன முனிவர் அரிஷ்டநேமியின் ஆசிரமத்தில் சந்தித்து அவளை அடைக்கலப் பொரு ளாக ஏற்றுக் கொள்ளுவதாக அவள் தந்தையிடம் சம்மதம் தெரிவித்ததை அவளே சொன்னாள். அவள் குறிப் பிட்ட இளங்குதிரை வீரர் யாராயிருக் கும் என்று என்னால் ஊகிக்க முடிய வில்லை. இப்பொழுதுதான் என் உள்ளம் அமைதி பெற்றது. யாருமற்ற அனாதை யாகிய அவளது சோக வரலாற்றைக் கேட்டதிலிருந்து அவள் வாழ்வை வள முள்ளதாக்க வேண்டும் என்ற ஆசை என் மனத்தில் இடமாக இடம் பெற்று விட்டது...!''

மாலவல்லி பேச்சை நிறுத்திப் பிருதிவி பதியின் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

''ஏன் நீங்கள் மௌனமா யிருக் கிறீர்கள்? வாய் திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டீர்களா?'' என்று கேட்டாள்.

''மாலவல்லி! நீதான் பேசுவதற்கு ஒன்றும் வைக்கவில்லையே! இவ்வளவு அறபோதனை செய்ய, உங்கள் பௌத்த சங்கத்திலிடமிருந்து நீ எப்பொழுது கற்றுக் கொண்டாய்? அது இருக்கட்டும். வெகு நாட்களுக்குப் பிறகு சந்திக்கும் உன் அன்புக்கு உரியவனை இப்படித் தான் வரவேற்பதா? நீ எங்கே போயிருந் தாய்? விவரமாகச் சொல்!'' என்று கூறிக் கொண்டே பிருதிவிபதி அருகில் இருந்த ஒரு சிறு பாறையின் மேல் அமர்ந்தான்.

''நம்மைக் காலந்தான் பிரித்து வைத் திருந்ததே தவிர, நம் உள்ளம் என்றோ

ஒன்றுபட்டு விட்டது. அதில் என்றும் மாறுதல் இல்லை. ஆனால், நாம் இருவரும், திசை மாறி, வெவ்வேறு பாதைகளில் போகிறோம். என் உள்ளம் உலக வாழ்வைப் பொறுத்தவரையில் விரக்தியடைந்து விட்டது. இனி, அதில் காதலுக்கும், உடல் இன்பத்துக்கும் சிறிதும் இடமில்லை...!''

''மாலவல்லி! நீ இப்பொழுது இருக்கும் மன நிலையில் அப்படித்தான் பேசுவாய். பாவம்! உன்னை விதி மிகவும்சோதித்து விட்டது. ஆனால் என் உள்ளத்தை நீ அறியவில்லை. என் தகப்பனார் இறந்துவிட்டார். மக்கள் மன்றத்தில் உன்னை மணந்து கொள்ளப் பூரண அனுமதி பெற்று விட்டேன். இனி உன் அனுமதிதான் தேவை. வீணாகத் தாமதம் செய்யாதே. யார் எந்தச் சாம்ராஜ்யத்தை நிறுவினால் என்ன? எந்த ராஜா எந்தப் பட்டணத்தை ஆண்டால் என்ன? இதிலெல்லாம் எனக்குத் துளிக்கூடச் சிரத்தை கிடையாது. மாலவல்லி! நான் உண்மையில் கூறுகிறேன். என் உடல், பொருள், ஆவி யாவும் நீதான். அரச போகமும், அரச வாழ்வும், அரசுரிமையும் எல்லாம் உனக்குப் பிறகுதான். நீ அடைந்த துன்பங்களெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் நீ ஒரு தவறு செய்து விட்டாய். அந்த புத்தபிக்ஷு ரவிதாஸன் சம்பாதிவனத்து புத்தவிஹாரத்தில் கொலைசெய்யப்பட்ட சமயத்தில் நீ தப்பி ஓடிவிட்டாய். காகம் உட்காருவதற்கும் பனம்பழம் விழுவதற்கும் சரியாய்ப் போனது போல், அந்தக் கொலைக்கும் உன் மறைவுக்கும் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு நீ குற்றவாளியாகக் கருதப்பட்டிருக்கிறாய். அந்தக் கொலையைச் செய்தவர் யார் என்று விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு விடும். நீ குற்றமற்றவள் என்று நிரூபிக்கப்படுவதற்காகநான் எத்தகைய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன், தெரியுமா? நீ துக்க மிகுதியினால் மனம் குழம்பி யிருக்கிறாய்..'' என்று பிருதிவீபதி மிகவும் உணர்ச்சியோடு கூறினான்.

''......இல்லை, இல்லை. நீங்கள் என் மன நிலையை அறிய மாட்டீர்கள். எந்தக் குற்றம் என்மீது சுமத்தப்பட்டாலும் சரி, அல்லது நான் குற்றவாளியல்ல என்று நிரூபிக்கப்பட்டாலும் சரி, இனிமேல் என் மனம் உலக வாழ்வின் இன்பத்தை நாடாது. அரச வாழ்வுக்கு ஏற்றவளல்ல நான். போதி சத்துவரின் அருள் வேறு விதமாயிருக்கிறது. என் உள்ளம் அறிய நான் குற்றவாளியல்ல; புத்த பகவான் பாதசாட்சியாக நான் குற்றவாளியல்ல. இனி உலகோர் அறிய, நான் குற்றவாளியல்ல என்று யாருக்கும் நிரூபணம் செய்ய வேண்டியது அவசியம் இல்லை. என் வாழ்க்கையில் சாதிக்கவேண்டியது ஒன்று பாக்கியிருக்கிறது. சோழப் பேரரசு உருவாக வேண்டும். அதை நான் கண்ணாரக் கண்ட பின்பு இந்த உடலை விட்டு உயிர் போய் விட்டாலும் பாதகம் இல்லை.''



''மாலவல்லி! சோழ அரசு உருவாகும்வரையில் நாம் மணம் செய்துகொள்ளவேண்டாம். நானும் சோழ அரசு உருவாவதற்கு வேண்டிய முயற்சியில் என்னை அர்ப்பணித்துக்கொள்ளுகிறேன். பல்லவ சக்கரவர்த்தி நந்திவர்மனின் நட்பும் உறவும் எனக்கு இருக்கின்றன என்று நினைத்து நீ என்னை அலட்சியம் செய்யாதே. உனக்காக, உன் அன்புக்காக யாருடைய பகைமையும் நான் அறைகூவி ஏற்கச் சித்தமா யிருக்கிறேன். மாலவல்லி, என் இதயம் உனக்காகத் துடிக்கிறது......நீ உன் இதய ஒலியைக் கவனித்துக் கேள். அதுவும் எனக்குச் சாதகமாகத்தான் ஒலிக்கும்.''


உடனே மாலவல்லி பிருதிவீபதியின் காலடியில் விழுந்து வணங்கி அவன் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''நீங்கள் தயவு செய்து......என்னை மறந்து விடுங்கள்......உங்கள் அன்புக்காக அந்தப் பேதைப் பெண் சுகேசி காத்திருக்கிறாள். அவளுக்கு ஏமாற்றத்தை அளித்து விடாதீர்கள்.''

மாலவல்லி கூறியதைக் கேட்டுப் பிருதிவீபதி திடுக்கிட்டான்.

''நேரமாகிறது. நான் ஆசிரமத்துக்குப் போக வேண்டும்'' என்று கூறிவிட்டு மாலவல்லி இடுப்பில் குடத்துடன் ஒற்றையடிப் பாதையின் வழியே நடக்கலானாள்.

(தொடரும்)


காலத்திற்கேற்ற
அழகு
இதோ நவநாகரீகமான
ஆடவர்க்குரிய நேர்மைச்சிறப்புடன்
திகழும் கடிகாரம்—ஸாண்டோ 'டேமாடிக்'
தேதியுடன் தானாக இயங்குவது, 17 ஜுவல்கள்
தண்ணீர் புகாதது, அதிர்ச்சி பாதுகாப்
புடையது, காந்தக் கவர்ச்சியற்றது.
மாடல் 3543 முழுதும் ஸ்டீல் கேஸ் ... 308/-
மாடல் 3542 முகப்பு ரோல்டுகோல்டு
பின்புறம் ஸ்டீல் கேஸ் ... 316/-
ஜ்வலிக்கும் டயல்களிலோ அல்லது
ஜ்வலிப்பில்லாத சாதா டயல்களிலோ கிடைக்
கும். நாகரீகமாக இருங்கள்
ஸாண்டோ டேமாடிக் அணியுங்கள்
SANDOW Day Matic
FAVRE-LEUBA
FAVRE-LEUBA & CO. PRIVATE LTD.
பேவர் - லூபா & கம்பெனி பிரைவேட் லிமிடெட்
பம்பாய் ★ டெல்லி ★ கல்கத்தா
F 63



கலை கண்ட மலேயா (13)

அன்புக்குள் அடங்கும் கலை

டி. கே. சண்முகம் - புத்தனேரி சுப்பிரமணியம்

சிங்கப்பூரிலும் மலேயாவிலும் வாழும் இந்தியப் பெருமக்களுக்கும் ஏனைய இனத்தவருக்கும் தமிழ் நாடகக் குழுவினரை அறிமுகப் படுத்தும் முறையில் சுவையான ஓர் இசை நிகழ்ச்சியை உருவாக்கி விருந்தோம். அந்த அறிமுக நிகழ்ச்சி ''ரேடியோ மலேயா''வில் இரு முறை ஒலிபரப்பாகியது.

அந்த நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பு வைத்தாற் போல் விளங்கிய கவிதையைக் கேளுங்கள்.

''இன்பத் தமிழ்நாட்டின்
எல்லை தனைத்தாண்டி
அன்பும் அறிவும்
ஆற்றலும் கொண்டவராய்ச்
சிங்கை மலாய்நாட்டில்
சிரோங்க வாழ்ந்துவரும்
தங்கக் குணம்படைத்த
தமிழன்புச் சான்றோரே!
மங்காக் கலையார்வம்
வளர்க்கின்ற அன்பர்களே!
உங்களுக் கெங்கள்
வணக்கம் உரித்தாகும்:
வந்ததெல்லாம் கொள்ளும்
மதராசுக் கப்பலிலே
செந்தமிழ் நாடகமாம்
சொந்தச் சரக்கேற்றி
அலைகடலைத் தாண்டித்
தொலைதூரம் வந்துள்ளோம்:
உலகம் வியக்கும்
உயர்ந்த கலைச்சரக்கை
அள்ளியள்ளித் தந்தாலும்
எள்ளளவும் குன்றாது!
கள்ளருக்கும் எட்டாது;
காவலுக்கும் அடங்காது!
எந்தவிலை தந்தாலும்
ஈடாக மாட்டாது!
பண்புடைய நன்மக்கள்
பற்றுடனே பாராட்டும்
அன்புக்கு மட்டும்
அடங்கும் கலைச்சரக்கு!...''

''ஓ, அப்படியா! அன்புக்கு மட்டுந்தான் உங்கள் கலைச் சரக்கு அடங்குமா? சரி! அன்பினால் உங்களை என்ன பாடு படுத்துகிறோம் பாருங்கள்!'' என்று சவால் விடுவதுபோல் ரசிகப் பெரு மக்கள் தங்கள் கலையார்வத்தை அன்புப் புயலாக வீசத் தொடங்கினார்கள்!

அந்த ரசிகர்கள் கலைக் குழுவினரைக் கண்டு மகிழ்ந்து தவித்தார்கள்; கையெழுத்துப் புத்தகங்களைக் கொண்டு வந்து குவித்தார்கள்! வாஞ்சையுடன் விருந்துக்கு அழைத்தார்கள்; வரவேற்பு நல்கத் துடித்தார்கள். தனிப்பட்ட அன்பர்கள் மட்டுமின்றிப் பொதுநல மன்றங்கள் பலவும் எங்களை வரவேற்று உபசரிக்கும் வாய்ப்பை எதிர்நோக்கின.

இயன்ற மட்டும் கலையன்பர்களின் ஆவலை நிறைவேற்றுவதென்று முடிவு செய்தோம். வரவேற்பு நல்குவதில் தமிழ் இனத்தவர் மட்டுமல்லாமல் பிற இனத்தவர்களும் ஆவலோடு முன்வந்தது எங்கள் அனைவரது உள்ளங்களையும் கவர்ந்து விட்டது.

முதன் முதலாக நமது கலைக் குழுவினருக்கு ஒரு சிறந்த வரவேற்பு விருந்து நல்க முன்வந்தவர்கள் கத்தே நிறுவனத்தார். இந்தக் கத்தே நிறுவனத்தின் தலைவராக இருந்து

சீனக் கழகத் தலைவர் திரு லீ சியூ பாங் (ஜரிகைமாலையுடன் நிற்பவர்) தமது கலை மாளிகையில் அளித்த வரவேற்புக் காட்சி.

பணியாற்றுபவர் திரு லோக் வான் தோ என்னும் சீனக் கோடீசுவரர்.


கத்தே நிறுவனம் திரைப்படத் துறையில் உலகப் புகழ் பெற்றது. சிங்கப்பூர், மலேயா, போர்னியோ, சாரவாக் போன்ற நாடுகளில் நாற்பத்தொன்பது சினிமாக் கொட்டகைகள் கத்தே நிறுவனத்துக்குச் சொந்தமாக விளங்குகின்றன. ஆங்கிலம், சீனம், தமிழ், இந்தி முதலிய மொழிகளில் வெளியாகும் திரைப் படங்கள் பலவற்றை வினியோகிக்கும் உரிமையையும் இந்த நிறுவனம் ஏற்றுள்ளது.

கத்தே நிறுவனத்துக்குச் சொந்தமாக 'கிரிஸ் ஸ்டுடியோ' என்ற பெயரில் ஒரு படத்தயாரிப்பு நிலையம் சிங்கப்பூர் கிழக்கரை வீதியில் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப்பட உலகில் புகழ்பெற்று விளங்கிய டைரக்டர் திரு பி. என். ராவ் இப்போது கத்தே நிறுவனத்தின் சினிமா டைரக்டராகப் பணியாற்றுகிறார். இவரது டைரக்ஷனில் உருவான ''பாண்டியாளு'' என்ற மலாய்ப் படம் சிங்கப்பூர் கத்தே சினிமாவில் மிக வெற்றிகரமாக ஓடியது.

திரு பி. என். ராவ் எங்களை அடிக்கடி கண்டு பேசி அளவளாவிக் கொண்டிருந்தார். சிங்கப்பூரிலும் மலேயாவிலும் மிகக் குறைந்த செலவில் திரைப்படம் உருவாக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்; மலாய் நடிக நடிகைகளுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் மிகக் குறைவு என்றும், ஆனால் அவர்களின் ஒத்துழைப்பு மிக அதிகம் என்றும் திரு ராவ் தமது அநுபவ உண்மையை விளக்கினார்.

டைரக்டர் ராவ் கூறிய மற்றொரு செய்தி எங்களுக்கு வியப்பை அளித்தது. சினிமாவுக்காக ஒரு போலீஸ் ஸ்டேஷன் காட்சியைப் படமாக்க விரும்பினால் அதற்காக 'செட்' போட்டுத்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயம் இல்லையாம். நகரில் வசதியாக இருக்கும் உண்மையான ஒரு போலீஸ் ஸ்டேஷனையும், தேவையான போலீஸ்காரர்களையும் சினிமாவுக்காகப் படமாக்கிக் கொள்ளும்படி அரசாங்கத்தாரே அநுமதியளித்து விடுவார்களாம். இதைப்போல் அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள எந்த நிலையத்தையும் படப் பிடிப்புக்குரிய சாதனமாகப் பயன்படுத்த இசைவு கிடைக்கும் என்று திரு ராவ் குறிப்பிட்டார். கத்தே நிறுவனத்தின் துணைத் தலைவராக விளங்கும் திரு எஸ். ஏ. ராவ் என்னும் இந்திய நண்பரைப் பற்றியும் சில வார்த்தைகள் கூற வேண்டும். இவர் உடுப்பியில் பிறந்தவர்.

மலைநாட்டின் இயற்கை வளத்தையும் பண்பாட்டையும் பின்னணியாகக் கொண்டு கிரிஸ் ஸ்டுடியோவில் ஒரு தமிழ்ப் படத்தை உருவாக்க வேண்டும் என்ற ஆவல் உள்ளவர். இவர் தமிழ்நாட்டின் கலைச் சிறப்பைச் சீன நண்பர்களுக்கும் எடுத்துக் காட்டிப் பெருமைப்படும் இதயப் பண்பு படைத்தவர்.



திரு லோக் வான் தோ

சிங்கப்பூரில் உள்ள மாபெரும் கத்தே மாளிகைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. வங்கச் சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவத்தின் தலைமை நிலையம் கத்தே மாளிகையில்தான் விளங்கியது என்று இந்தியப் பெருமக்கள் இன்னும் பாராட்டுகின்றனர்.

கத்தே நிறுவனத் தலைவர் திரு லோக் வான் தோ சிறந்த கலையன்பர்; உயர்ந்த புகைப்பட நிபுணர்; பறவைகளின் இயல்புகளை ஆராய்வதற்காகப் பல நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் செய்து பெரும் பொருளைச் செலவிட்டு வருபவர். தமது ஆராய்ச்சியின் பயனாகப் ''பறவைக் கூட்டம்'' என்ற பெயரில் ஒரு சிறந்த நூலை உருவாக்கியுள்ளவர். உலகின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான ஓவியங்களைத் தொகுத்து வைத்துள்ளார்.

திரு லோக்-வான்-தோ நமது இராஜராஜ சோழன் நாடகத்துக்கும் ஒரு நாள் தலைமை வகித்து அதன் சிறப்பியல்புகளை மிகவும் வியந்து பாராட்டினார்.

தமிழன் கண்ட கலைக்குத் தமது மரியாதையை அறிவிக்கும் நோக்கத்துடனேயே தமது கத்தே நிறுவனத்தின் சார்பில் ஒடியன் தியேட்டரின் மாடியில் உள்ள அழகான ஹாலிவுட் அறையில் ஒரு வரவேற்பு விருந்து நடத்தினார் திரு லோக் வான் தோ.

சிங்கப்பூர் மலேயாவில் உள்ள ஒவ்வொரு நகரத்திலும் நல்லதொரு நாடக அரங்கம் கட்டுவதற்குக் கத்தே நிறுவனம் ஏற்பாடு செய்யவேண்டும் என்ற யோசனையைத் திரு லோக் வரவேற்றுத் தம்மாலான முயற்சிகளைச் செய்வதாக வாக்களித்தார்.

சீனர்களின் சிறந்ததொரு திரைப்பட நிறுவனம் செந்தமிழ்க் கலைஞர்களாகிய எங்களைப் பாராட்ட முன்வந்த சிறப்பை எண்ணி எண்ணி மகிழ்ந்தோம்.

பின்னர், இந்தியர் நுண்கலைக் கழகம், சிங்கப்பூர் தமிழர் சங்கம், இலங்கைத் தமிழர் சங்கம், தேவி புரொடக்ஷன்ஸ் நாடக மன்றம் முதலிய பல நிறுவனங்கள் தொடர்ந்து பல வரவேற்பு விழாக்களை நடத்தின. ''நீண்ட கடலால் பிரிக்கப்பட்டு, தமிழகத்துக்கு வெகு தூரத்துக்கு இப்பால் நாங்கள் வாழ்கிறோம்; எனினும் நாங்கள் மொழியால், இனத்தால் தமிழர் என்பதை எண்ணிப் பெருமை கொள்கிறோம்'' என்று ஒவ்வொரு மன்றத்தினரும் தமது இதய ஒலியை எழுப்பினர்.

எல்லா வரவேற்புக்களுக்கும் சிகரம்போல் விளங்கியது, சீனக் கழகத் தலைவர் திரு லீ சியூ மாங் மே மாதம் பத்தொன்பதாம்தேதி இரவு அவரது இல்லத்தில் அளித்த வரவேற்பு.

திரு வி சியூ மாங் இணையற்ற ஓவியர் ; இசைஞானம் மிகுந்தவர் ; சீனர்களின் பெருமதிப்புக்குரிய தலைவர்; தமது இல்லத்தையே கலை நுணுக்கம் செறிந்ததாக அமைத்துள்ளார்.



திரு எஸ். ஏ. ராய்

சிங்கப்பூரில் தமிழ் நாடக விழாவின் கடைசி நாளாக நடைபெற்ற 'இராஜ ராஜ சோழன்' நாடகத்துக்குத் தலைமை தாங்கினார் திரு வி சியூ மாங். நாடகச் சிறப்பிலே தம் இதயத்தைப் பறி கொடுத்தார். நமது கலைக் குழுவினரைத் தமது இல்லத்துக்கு வரவழைத்துப் பாராட்ட வேண்டுமென்ற எண்ணத்தால் உந்தப்பட்டார். எனவே அதற்கான ஏற்பாட்டையும் செய்தார்.

திரு மாங் அவர்களின் இல்லத்துக்கு எங்களை அழைத்துச் சென்று ஏனைய நகரப் பிரமுகர்களுக்கும் குழுவினரை அறிமுகப்படுத்தும் பொறுப்பை மேற்கொண்டவர் திரு கே. சி. நடராஜன் என்னும் தமிழன்பர். இவர் சிங்கையில் வருமான வரி உதவி அதிகாரியாகப் பணியாற்றுகிறார்.

வரவேற்பு வைபவத்தையே ஒரு கலை நிகழ்ச்சியாக அமைத்திருந்தார், திரு வி சியூ மாங். சீனப் பாடகர் - பாடகிகள் சிலரும் விழாவிலே கலந்து கொண்டனர்.

தேநீர் விருந்துக்குப் பின் பிடில் ஒன்றை வாசித்துக் காண்பித்தார் திரு மாங். அவருடைய சின்னஞ்சிறு புதல்விகளான வி சு பெங், வி சு லியா இருவரும் 'யாங் கின்', 'சேங்' என்ற பெயருடைய நரம்புக் கருவிகளை மீட்டி இசை யெழுப்பினர். புதல்விகளுக்கு உதவியாகத் திரு மாங் பிடில் வாசித்து ரசிகர்களின் மனத்தைக் கவர்ந்தார்.

இந் நிலையில் கலையுணர்ச்சியால் உந்தப்பட்ட சீனப் பாடகர்கள் இருவரும் பாடகிகள் இருவரும் தாமாகவே வலிய வந்து சில பாடல்களைப் பாடினர். அவர்கள் பாடிய ராகம் நமது மோஹன ராகத்தின் சாயலாகவே தோன்றியது.

இந் நிகழ்ச்சிகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த 'தமிழ் முரசு' திரு செல்வ கணபதி ஓர் அறிவிப்புச் செய்தார்:-

"அன்பர்களே! இப்போது சீனப் பாடகர்கள் பாடிய பாட்டின் மெட்டிலேயே திரு டி. கே. சண்முகம் ஒரு தமிழ்ப் பல்லவி பாடுவார்!"

உடனே, "சீனரும் தமிழரும் சிங்கைமா நகரில் சேர்ந்து வாழ்வோமே!" என்ற பல்லவி சீனர்கள் பாடிய பாணியிலே பாடப்பட்டது. குழுமியிருந்தோர் அனைவரும் புளகாங்கித உணர்ச்சியோடு கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பின்னர் "ஜயபேரிகை கொட்டடா!" என்ற மகா கவி பாரதியாரின் பாடல் வீர முழக்கம் செய்யப்பட்டது.

பின்னணிப் பாடகி குமாரி அபிராம சுந்தரி "சின்னஞ் சிறு கிளியே!" என்ற பாடலை அற்புதமாகப் பாடினார். சிறுமி சந்தோஷ் "வெண்ணிலாவும் வானும் போலே" என்ற கீதத்துக்கு அபிநயம் பிடித்தாள்.

இப்படிச் சேர்ந்தாற்போல் தமிழ் இசை முழங்கியதைக் கேட்ட மலையாள நண்பர் ஒருவருக்கு உற்சாகம் கரை புரண்டு வந்தது. அவர் விரைந்து வந்து, "எங்கே தேடினும் காணலாம்" என்ற மலையாளப் பாடலை உணர்ச்சியோடு பாடினார். நல்ல தமிழ்ச் சொற்கள் பாடலிலே பொதிந்திருந்தமையால், அந்தப் பாடலும் தமிழ்ப் பாட்டுப் போலவே ஒலித்தது.

இவ்வாறு ஏறத்தாழ இரண்டு மணி நேரம் போட்டி போட்டுக் கொண்டு இசை முழக்கினர் கலைஞர்களும் கலையன்பர்களும்.

முடிவில் திரு வி சியூ மாங் நமது தென்னாட்டுக் கலையின் சிறப்பை இதயம் கனிந்து பாராட்டி ஓர் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார்.

" கலாசாரப் பரிவர்த்தனை " என்று பொருள்படும் சீன வாக்கியம் எழுதப்பட்ட அழகான பட்டுக் கலைக் கொடி ஒன்றைத் திரு

வி சியூ மாங் நமது கலைக் குழுவுக்கு அன்புப் பரிசாக வழங்கினர். குழுவினர் அனைவருக்கும் சீனக் கலைப் பொருள்கள் சிலவற்றை அன்பின் அடையாளமாக நல்கினர்.

"திறமான புலமையெனில்
வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல்
வேண்டும்......"

என்ற மகாகவி பாரதியின் வாக்குக்கு இணங்கச் சீனக் கலைபண்பார்கள் நமது தமிழ் நாடகக் கலையை மனதாரப் போற்றி வாழ்த்திய பெருமையைத் திரு வி சியூ மாங் அவர்களின் இல்லத்தில் கண்ணாரக் கண்டு களித்தோம்.

மறுநாள் நாடகக் குழுவினர் சிங்கையை விட்டுக் கோலாலம்பூருக்குப் புறப்படுவதென்று திட்டமிடப்பட்டது.

புறப்படுவதற்கு முன் கப் வீதியில் உள்ள ஒரு வீட்டில் ஏழைத் தமிழ் மக்கள் எவ்வளவு நெருக்கடியில் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள் என்பதை அவசியம் காண வேண்டும் என்று தொண்டர்படைத் தலைவர் திரு ஆ. க. இராமலிங்கம் எங்களை அழைத்தார்.

அவர் குறிப்பிட்ட வீட்டுக்குள் நுழைந்தோம். மாடியில் உள்ள ஓர் அறையில் குடியிருந்த தமிழர்களின் அன்பு முகங்களைக் கண்டோம். அந்த அறைக்குள் ஏறக்குறைய முப்பது பேர்கள் தத்தம் பெட்டி படுக்கையுடன் குடியிருக்கக் கண்டோம்.

தமிழ் நாட்டிலிருந்து மலேயாவுக்குச் சென்றிருக்கும் எண்ணற்ற தமிழ் மக்களின் வாழ்க்கை நிலைமையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இப்பொழுது ஒரு வாய்ப்பு கிடைத்தது. மனைவி மக்களை விட்டு, உற்றார் உறவினரைவிட்டுக் கடல்கடந்து வந்திருக்கும் தமிழ் மக்கள் சிங்கப்பூரிலும் தமிழ் மக்களாகவே வாழ்கிறார்கள். அவர்கள் தமிழை மறக்கவில்லை. தமிழ் நாட்டை மறக்கவில்லை. தமிழ்ப் பண்பை மறக்கவில்லை. தாங்கள் சிங்கப்பூரில் வாழ்கிறோம் என்பதையும் மறக்கவில்லை. அங்குள்ள சூழ்நிலை காரணமாகப் பலர் பலவிதமாக மாறிப்போனாலும் குறிப்பாகப் பெரும்பாலான தமிழ் மக்கள் நமது நாட்டின் கௌரவத்தை உயர்த்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.


நாங்கள் பார்த்த அந்தச் சின்னஞ் சிறு அறையில் முப்பதுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தங்கியிருந்தாலும் அவர்களுடைய எண்ணங்களும் இலட்சியங்களும் மட்டும் தனித் தனியாக இருந்த அழகைப் பார்த்து அனுபவித்தோம். அந்த அறையில் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அத்தனை பேதங்களும் அவர்களுக்குள் உண்டு என்பதை ஒவ்வொருவரும் தத்தம் பெட்டிக்கு மேல் உள்ள சுவரில் மாட்டியிருந்த படங்களைக் கொண்டும், அவர்கள் வைத்திருந்த புத்தகங்களைக் கொண்டும் தெரிந்து கொண்டோம். பெட்டி படுக்கை வைப்பதற்கு வேண்டிய தட்டுக்கள் அறையில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் மாதம் ஐந்து வெள்ளி வாடகை தருகிறார்களாம். அத்தனை கருத்து வேற்றுமையிலும் ஒற்றுமையாக அந்தச் சிறு அறைக்குள் வாழ்ந்து வரும் தமிழர்களின் இணைக்கத்தைப் போற்றினோம். கூட்டு வாழ்க்கை முறையில் இவ்வாறு தொல்லைப்பட்டுச் சின்னஞ் சின்னமாகப் பொருள் ஈட்டி, அயராத உழைப்பினால் முன்னுக்கு வருகிறார்கள் தமிழ்த் தொழிலாளர்கள் என்பதை நன்கு புரிந்து கொண்டோம்.

இவர்கள் சிங்கப்பூரில் ஆற்றிவரும் தொண்டை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. தமிழ்நாட்டிலிருந்து யாராவது சிங்கப்பூருக்குச் சென்றுவிட்டால் போதும். அவர்களுக்கு வேண்டிய எல்லாவித உதவிகளையும் தொண்டர் படை செய்து விடுகிறது. எத்தனை ரூபாய் செலவழித்தாலும் கிடைக்காத, நெருங்க முடியாத பல காரியங்களைத் தொண்டர் படை செய்து கொடுத்து விடுகிறது. தொண்டாற்றுவதில் ஏற்படும் இன்பத்தைப் பரிபூரணமாக உணர்ந்தவர்களாதலால் மிகுந்த கடமை உணர்ச்சியுடன், மலர்ந்த முகத்துடன் தங்கள் தொண்டைச் செய்து வருகிறார்கள். பயன் கருதாத் தொண்டாற்றும் தொண்டர் படையையும், அதன் தலைவர் திரு ஆ. க. இராமலிங்கம் அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். வாழ்க தொண்டர் படை. வளர்க அவர்கள் அன்புத் தொண்டு!

பாடுபட்டு உழைப்பவர்கள் பலன் காணாமல் போவதில்லை. ஆரம்பத்தில் சின்னஞ் சிறு அறையில் கஷ்டமான நெருக்கடியில் குடியிருந்த சிலர் இப்போது நல்ல செல்வாக்கோடு வாழ்கின்றனர் என்றும் நண்பர் தெரிவித்தார்.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

(தொடரும்)



முதலாளி

“ “என்ன மிஸ்டர் காந்தன், உங்களைப் பார்த்து வெகு நாட்களாகிவிட்டன. தமிழ்ப் படங்கள் சம்பந்தமாக உங்களை ஒரு கேள்வி கேட்கவேண்டு மென்று எனக்கு நெடுநாளாக ஆசை. தமிழ்ப் படங்கள் இப்பொழுது முன்னேற்றம் அடைந்திருக்கின்றனவா, இல்லையா?'' என்று கேட்டார் என் நண்பர்.

'' நீங்கள் அடிக்கடி படம் பார்க்கிறீர்களே, உங்களுக்கு என்ன தோன்றுகிறது?'' என்று பதிலுக்கு அவரை ஒரு கேள்வி கேட்டேன்.

'' சரியாய்ப் போயிற்று. நீங்கள் பட விமரிசனம் எழுதுகிறீர்களே என்று உங்களை அபிப்பிராயம் கேட்டால் என்னையே திருப்பிக் கொள்ளுகிறீர்களே!'' என்றார் நண்பர்.

பட விமரிசகன்தான் படத்தைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியும் என்பதில்லை. பார்க்கப்போனால், படம் பார்க்கும் ரஸிகர்களின் அபிப்பிராயத்தைத்தான் விமரிசகர்கள் எழுதுகிறார்கள் என்று சொல்ல வேண்டும். என் நண்பரைப் போலவே இதே கேள்வியை என்னைப் பலபேர்கள் கேட்டிருக்கிறார்கள். ஒரு விஷயத்தில் எப்பொழுது நமக்குச் சந்தேகம் ஏற்படுகிறதோ அப்பொழுதே அதில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். ஆதிகாலத்துத் தமிழ்ப் படங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இக்காலத்தில் தமிழ்ப் படம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்றே கூறலாம். ஐம்பதுக்கு மேற்பட்ட பாடல்களை, பேசும் படங்களில் புகுத்தி அவற்றைப் 'பாடும் படங்க'ளாக்கி ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்த தமிழ்ப் படாதிபதிகள் பெரிய மனசு வைத்துப் பாடல்களைக் குறைத்து விட்டார்கள். இன்னும் கொஞ்சம் மனம் வைத்து, தைரியமாகச் சில முன்னேற்றங்களை அவர்கள் செய்யலாம்.

இப்பொழுதெல்லாம் தமிழ்ப் படங்களில் அருவருக்கத்தக்க காட்சிகள் எதுவும் அனேகமாகக் காணப்படுவதில்லை. அதுவும் ஒரு முன்னேற்றம்.

எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் '' முதலாளி '' படம் பார்த்தேன்;

சில படங்களுக்கு விமரிசனம் எழுதும்போது திரைக் கதையை முழுவதும் கூறவேண்டியிருக்கும். திரைக் கதையைத் தெரிந்து கொள்ளாவிட்டால் விமரிசனத்தை மட்டும் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?

ஆனால் '' முதலாளி '' கதை சுலபமான கதை. சேலத்தில் இருந்த ஒரு கண்ணாடித் தொழிற் சாலையின் உரிமையாளன் வசந்தன். அவன் கடல் கடந்து சென்று மேல் நாட்டில் உயர்தரக் கல்வி கற்றுத் திரும்புகிறான். பம்பாய்க்கு வந்ததும் ஒரு பெரிய ஹோட்டலில் தங்குகிறான். அந்த ஹோட்டல் சர்வர் ஒருவன் வசந்தனின் அகக் கண்ணைத் தன் அநுபவ அறிவினால் திறக்கிறான். அதன் காரணமாக முதலாளி வசந்தன் பாட்டாளி வரதனாக மாறுகிறான்; தன்னுடைய தொழிற்சாலையிலேயே தொழிலுக்கு அமர்ந்து, பாட்டாளி மக்களின் பரிபவங்களை நேருக்கு நேர் பார்க்கிறான். உழைத்தவன் உழைப்பின் பயனின்றி ஏங்க, உழைப்பற்ற தொழிற்சாலை மானேஜர், உண்டு களிக்கும் அநியாயத்தைக் கண்டு பொங்குகிறான்; தன் அத்தை மகன் கோகிலத்தின் அட்டூழியச் சாகஸங்களையும்பார்க்கிறான். கடைசியில் வசந்தன் தன் உண்மையை வெளிப்படுத்தி, தீயவர்களைத் தண்டிக்கிறான்.

சூரனை மாய்க்க அவதரித்த முருகப்பெருமான் கடைசியில் வள்ளியையும் கல்யாணம் செய்து கொள்ள வில்லையா? அதுபோல, தீயோரைத் தேய்க்கவும், தூயோரைக் காக்கவும் கங்கணம் பூண்ட வசந்தன் வாழ்விலும் வள்ளி என்னும் பேதைப் பெண் குறுக்கிடுகிறாள்; இந்தக் காதலுக்குக் குறுக்கே தொழிற்சாலை மானேஜர் குறுக்கிட்டுத் தோல்வியடைகிறான். வசந்தன்-வள்ளி காதல் 'ஜாம் ஜாம்' என்று ஓடும் சைக்கிளிலும், சோலைப்புறத்திலும், தடாகக் கரையிலும் நமக்கு அலுப்பு ஏற்படும் வரையில்வளர்கிறது.

தாந்தன்

புதர் மண்டிப்போன இடத்தில் ஒரு சிறு மூலிகை கிட்டுவது போல், ''முதலாளி'' படத்தில் வேண்டாத காட்சிகள் வேண்டும் அளவுக்குமேல் போய் அலுப்படையச் செய்த பின்பு, நல்ல கருத்துள்ள கதை வருகிறது. முதலாளி பாவம், தொழிலாளியாக மாறி உழைக்கிறான். கொஞ்சம் காதலித்து விட்டுப் போகட்டுமே என்று பார்த்தால், ''தென்னை மரச் சோலையிலே......'' என்று பாடி, கரும்புச் சக்கையை மீண்டும் மீண்டும் மெல்லுகிற மாதிரி காதல் காட்சியில் நம்மைப் பழி வாங்குகிறான். இந்தச் சக்கையைத் தாராளமாகக் குறைத்துக் கொண்டு, முதலாளி-தொழிலாளி நல்லுறவைப் பேணும் வழிகளை நல்ல காட்சிகளாகச் சித்திரித்துப் படத்தில் இன்னும் சிறிது உணர்ச்சியைக் காட்ட முயன்றிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இப்படம் உண்மையில் முதல் தரப் படமாயிருந்திருக்கும்.

வசந்தனுடைய உள் மனமும் வெளி மனமும் போராடுகின்றன. வரதனாக மாறிய வசந்தனின் உள்ளத்தில், ஆடம்பர வாழ்வுக்கு ஏற்ற உள்ளம் தலைதூக்கி அவனுடன் பேசுகிறது. அந்தக் கட்டங்கள் பாராட்டத்தக்க முறையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. எஸ். எஸ். ராஜேந்திரன் அந்தச் சந்தர்ப்பங்களில் நல்ல பாவத்துடன் நடித்திருக்கிறார்.

திரைக் கதை வசனம் பாத்திரத்துக்கு ஏற்ற இயல்புடன் அமைந்திருக்கிறது.

தொழிலாளர்கள் நடனத்தை எடுத்துவிட்டுப் படத்துக்கு இன்னும் விறுவிறுப்பை ஏற்படுத்தியிருக்கலாம். அந்த நடன நிகழ்ச்சியைப் பார்த்ததும் எனக்குப் பழைய கால நாடக மேடை நினைவுக்கு வந்தது. காட்சி ஜோடனைகள் தயாராவதற்குத் தாமதமாகும் போலிருந்தால், கோமாளியை மேடைக்கு அனுப்பிவிடுவார்கள். அவன் வந்து சம்பந்தம் இல்லாத ஹாஸ்யங்களையும் வேடிக்கைகளையும் கதம்பமாகக் காட்டி, எல்லோரும் சிரிப்பதற்குப் பதிலாகத் தானே உரக்கச் சிரித்து விட்டுப் போய்விடுவான். அந்த நிலையில்தான் இந்த நடன நிகழ்ச்சி இருக்கிறது.

இந்தப் படத்தில் பாடப்படும் பாடல்களில் ஒன்றுகூட எடுப்பாக அமையாதது வருந்தத் தக்கது. கதை யம்சம் சிறப்பாயிருப்பதால், படம் சுவாரஸ்யமாயிருக்கிறது. ஆனால் அந்தச் சுவாரஸ்யத்தைக் கெடுக்கப் பல சுவையற்ற அம்சங்கள் சேராமலிருந்திருந்தால் இன்னும் நன்றாயிருக்கும்.

இந்தப்படத்தில் சில ஏமாற்றங்கள் எனக்கு ஏற்பட்டன! ஆனால் அவை நல்ல 'ஏமாற்றங்கள்; வரவேற்கத் தக்க ஏமாற்றங்கள்!

படத்தில் அலைகடல் வந்தது; உடனே வள்ளி வேகமாக வந்தாள். சரி, கடலில் விழுந்து விடுவாள், பரதவர்களால் காப்பாற்றப்பட்டு, காதலனை எப்படியும் காண்போம் என்னும் தைரியத்தில் எங்கேனும் தங்கியிருப்பாள் என்று எதிர்பார்த்தேன்.

நல்லவேளை! அவள் கடலில் விழவில்லை:

தொழிற்சாலை மானேஜர் வள்ளியைப் பலாத்காரம் பண்ண முயன்றபோது வசந்தனுக்கும் மானேஜருக்கும் ஒரு மல் யுத்தம் நடக்குமென்று எதிர்பார்த்தேன். நல்லவேளை. அதுவும் நடக்கவில்லை.

வசந்தனாக நடிக்கும் எஸ். எஸ். ராஜேந்திரன் நன்றாய் நடித்திருக்கிறார். தற்கால வாலிப உள்ளங்கள் உவகை கொள்ளும் வண்ணம் வீரச் சொற்பொழிவுகளும் செய்திருக்கிறார். காதலியை, சைக்கிளின் பின்புற ஆசனத்தில் அமர்த்திக் கொண்டு பட்டணம் முழுவதும் உல்லாஸமாக வலைய வருகிறார்.

கோகிலமாக வரும் எம். என். ராஜம் படத்தில் முக்கிய பாகம் வகிக்காவிட்டாலும் காதலனுடன் கொஞ்சி, நடனமாடிப் பிறகு வசந்தனால் நிராகரிக்கப் பட்டு, (படத்திலிருந்து) வெளியேறி விடுகிறாள்.

வள்ளியாக, நடிப்பவர் தம் பொறுப்பை யுணர்ந்து கச்சிதமாக நடித்திருக்கிறார். அன்பைக் காட்டும்போது வரும் முக பாவத்தை விட, வரதனிடம் சிடுசிடுக்கும் போது வரும் முகபாவம் அவருக்கு நன்றாய் வருகிறது.

ஹோட்டல் சர்வர் பூங்காவனம் பாகத்தை ஏற்றவர் சாதுரியமாகவும், இயல்பாகவும் நடித்திருக்கிறார்.

டி. பி. முத்துலக்ஷ்மி முதலாளி வீட்டு வேலைக்காரியாக வருகிறாள்; படம் பார்ப்பவர்கள் கொஞ்சம் சிரிப்பதற்குச் சந்தர்ப்பங்களைத் தர முயன்றிருக்கிறார்.

தொழிற்சாலை மானேஜராக நடித்தவர், மிடுக்கு நடை போட்டு, துடுக்குப் பேச்சுப் பேசி, சிகரெட்டுக்களைப் புகைத்து, தாம் படத்தின் வில்லன் என்பதை நன்கு நிரூபித்திருக்கிறார்.

படத்தின் புறக் காட்சிகளும், கண்ணாடித் தொழிற்சாலையும் நன்றாய்த் திறமையுடன் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன.





விதி வகுத்த வாழ்வு

ப. ராதாகிருஷ்ணன்

இரவு மணி பத்திருக்கும். வைரவன் செட்டியார் தம் மளிகைக் கடையைப் பூட்டிக் கொண்டு வீதியில் இறங்கும்போதே வானில் மேகங்கள் கூட்டம் போடத் தொடங்கின. வேகமாக நடந்து மழையை முந்திக் கொள்ள முயன்றார் செட்டியார். பயனில்லை. சில கெஜ தூரம் நடப்பதற்குள் பொட்டுப் பொட்டென்று ஐந்தாறு மழைத் துளிகள் அவர் மீது விழுந்தன. மின்னல்கள் பளிச்சுப் பளிச்சென்று வெட்ட, இடியோசை குமுற, இவற்றுடன் காற்றும் பெரிதாக வீசத் துவங்கியது.

இருளில் மூழ்கி நிர்மானுஷ்யமாகி யிருந்தது ரஸ்தா. கடையிலிருந்து செட்டியார் வீடு சுமார் ஒரு மைல் தூரமிருக்கும். வழக்கமாக அவரைப் பார்த்துக் குரைத்தபடி தொடர்ந்து வரும் தெரு நாய்கள் கூட இன்று மழைக்கு அஞ்சி எங்கோ முடங்கிவிட்டன. தெப்பலாக நனைந்து விட்ட செட்டியார் எப்படியோ தட்டுத் தடுமாறி நடந்தார். வாய்க்கால் கரைத் தெருவின் மேலக் கோடியிலிருந்த தம் வீட்டு வாசற்படியை அவர் மிதிக்கும்போது மணி பத்தரை.

கையில் ஹரிக்கேன் லாந்தரும் முகத்தில் கவலைக்குறியுமாகக் கணவர் வரவை எதிர் நோக்கியவளாய்த் திறந்த கதவினருகே நின்றிருந்தாள் அவரது இல்லாள்.

"என்னங்க ஒரு குடைகூட எடுத்துப் போகாமல்......? உங்கள் உடம்புக்கு ஏதாவது வந்து விட்டால் என்ன செய்வது?" என்று அன்போடு கடிந்து கொண்டாள்.

"மழை வருமென்று யார் கண்டார்கள், மீனு? அடேயப்பா! கோடை மழை எப்படிக் கொட்டுகிறது பார்!" என்று வியந்தவராய் அவள் கையிலிருந்த துவாலையை வாங்கிச் செட்டியார் தலையைத் துவட்டிக் கொண்டார். ஈரம் சொட்டும் ஆடைகளைப் பிழிந்தார். அப்பொழுது 'பளீர், பளீர்' என்று மின்னல் மின்னியது.

அப்போதுதான் திண்ணையின் மூலையில் அசைந்துகொடுக்கத் தொடங்கிய ஓர் உருவம் அவர் கண்ணிற் பட்டது. இதுவரை அவர் அத்திசையில் நோக்கி யிருக்கவில்லை.

அம்மாளின் கையிலிருந்து ஹரிக்கேன் லாந்தரை வாங்கித் தூக்கிப் பிடித்தார். படுத்திருந்த உருவம் மெல்ல எழுந்து உட்கார்ந்தது.

ஓர் சிறுவன்—வயது எட்டு இருக்கலாம். அயர்ந்த நித்திரையிலிருந்தவன் இடியோசை கேட்டுத் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு கண் விழித்தான். தன் சிறு கைகளால் கண்களைக் கசக்கிக் கொண்டு, எதிரே நின்ற செட்டியார் தம்பதிகளை ஒரு நிமிஷம் பார்த்தான். எதை நினைத்துப் பயந்தானோ, தெரியவில்லை. உடனே அழத் தொடங்கிவிட்டான்.

தம்பதிகள் உள்ளம் கரைந்தனர்.

அந்தக் குழந்தையின் பசியால் சுருங்கிய முகத்திலும் ஓர் தனிப் பொலிவு தோன்றியது. குழி விழுந்த கண்களினின்றும் அறிவுச் சுடர் வீசியது. 'இவன் யார்? இங்கே இந்த நிலையில் எப்படி வந்து சேர்ந்தான்?' என்பன போன்ற ஆயிரம் கேள்விகள் அவர்கள் மனத்தில் மேலோங்கி நின்றன.

"பயப்படாதே, தம்பி! எழுந்து இப்படி வா. வீட்டுக்குள் போகலாம்" என்று அழைத்த செட்டியாரின் அன்பு ததும்பும் குரல் அவனுக்குத் தைரியமூட்டியது; தயங்கித் தயங்கி நெருங்கியவனைக் கைலாகு கொடுத்து அவர் திண்ணையிலிருந்து இறக்கினார். நிமிர்ந்து நிற்கவும் கூட அச் சிறு உடலில் சக்தியில்லாத வாறு செய்திருந்தது பாழும் பசி.

தாமதியாமல் தட்டத்தை எடுத்து வைத்து மீனாட்சியம்மாள் பரிமாறிய தயிர்சோற்றைப் பரபரப்புடன் அவன் உண்டான். உண்ண உண்ண அவன் உடலில் தெம்பு ஊறியது. முகத்தின் தேஜஸ் முழுவதும் திரும்பியது. தம்பதிகளின் கேள்விகளுக்கு விடையாகச் சுருக்கமாய்த் தன் கதையைச் சொன்னான். கதை என்னவோ சாதாரணமானதுதான்.

நூற்றைம்பது மைல்களுக்கப்பால் இருந்தது, அவனது ஊர். தாயில்லாக் குழந்தை. தகப்பன் மறுமணம் செய்து கொண்டு விட்டான். நான்கு ஆண்டுகளாகச் சிற்றன்னையின் கொடுமைகளைப் பொறுத்து வந்தான். எதற்கும் ஒரு எல்லைக்கோடு உண்டல்லவா? நாலு நாட்களுக்கு முன்பு பையன் அந்த எல்லைக்

கோட்டைத் தாண்டிவிட்டான்: யாருக்கும் சொல்லாது வீட்டிலிருந்து வெளியேறியிருந்தான். எங்கு செல்வது, எப்படிப் பிழைப்பது என்ற திட்டம் எதுவும் அவனுக்குக் கிடையாது. ஆனால், என்ன நேர்வதாயினும் அந்த மாற்றாந்தாயுடன் ஒரு கூரையின் கீழ் வாழ்வதில்லையென்ற உறுதி மட்டும் அவ்விளம் நெஞ்சில் நின்றது:

டிக்கட்டின்றி ரயில் பிரயாணம் செய்தவனைப் பரிசோதகர் பிடித்து இந்த ஊர் ஸ்டேஷனில் இறக்கி விட்டார். பையன் தெருத் தெருவாகச் சுற்றினான்; சில இடங்களில் யாசித்தும் பார்த்தான். ஒரு கவளம் அன்னம் கிட்டவில்லை. பசியின் மயக்கத்தோடு நடந்தவனுக்குக் காலியாகக் கிடந்த செட்டியார் வீட்டுத் திண்ணை அடைக்கலம் அளித்தது.

அந்தத் திண்ணைக்கே அத்தனை இதயமிருந்தால், அதன் சொந்தக்காரரான வைரவன் செட்டியாரின் உள்ளம் இன்னும் எவ்வளவு மென்மையானதாயிருக்க வேண்டும்! திண்ணை பையனுக்கு இரவு ஒதுங்க இடம் தந்தது. செட்டியாரோ, பையனுக்கு வாழ்நாள் முழுவதும் அடைக்கலம் தந்து ஆதரிக்கத் தீர்மானித்து விட்டார்.

"தம்பி, சுந்தரம்! உன் கதை எங்கள் மனத்தை உருக்கி விட்டது. ஆண்டவனைப் பார்த்துத்தான் உன்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறான் போலும்! 'மேலே என்ன?' என்ற கவலையே உனக்கு வேண்டியதில்லை. இன்றிலிருந்தே நீ இக் குடும்பத்தில் ஒருவன் போல வாழலாம்...சரி. மிகக் களைத்திருக்கிறாய். படுத்துத் தூங்கு, அப்பா!" என்றார் அவர்.

மீனாக்ஷியம்மாளுக்கும் ஒரே மகிழ்ச்சி. அவள் விரித்த மெத்தையில் சிறுவன் படுத்துக் கொண்டான். செட்டியார் தம் கையால் போர்வையை எடுத்து அவன்மீது போர்த்தினார். 'என்னை மறந்து விட்டீர்களே' என்று பெற்றோருக்கு நினைவூட்டுவது போல் உள்ளே தூளியில் கிடந்த இரண்டு வயதுப் பெண் குழந்தை லக்ஷ்மி வீறிட்டு அழும் குரல் கேட்டது. பல வருஷங்களாகப் பிள்ளையின்றித் தவித்துத் தவங் கிடந்து அவர்கள் பெற்றெடுத்த செல்வம் அது! அதை எடுத்து வருவதற்கு ஓடினாள் மீனாட்சியம்மாள்.

* * *


சுந்தரம் அவ் வீட்டில் கால் வைத்த வேளையின் விசேஷம் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். செட்டியாரின் கல்லாவில் பணம் புரளத் தொடங்கியது. ஆறுமாத காலத்துக்குள் வீட்டைப் பழுது பார்க்கப் போதிய வசதியுண்டாயிற்று. அடுத்த இரண்டு வருடங்களில் இன்னுமொரு பெரிய வீடுகட்டி அதற்கே குடி போய்விட்டார்.

அவரது கடையும் பழைய மளிகைக் கடையாகவா இருந்தது? இப்போது அது விரிந்து ஒரு 'ஜெனரல் ஸ்டோர்' ஆகப் பரிணமித்திருந்தது. அங்கு கிடைக்காத பொருள்கள் அவ்வூரிலேயே வேறெங்கும் இல்லையெனலாம்.

"எங்கிருந்தோ வந்தான். கூடவே லக்ஷ்மி கடாக்ஷத்தையும் கொண்டுவந்து சேர்த்திருக்கிறான். நாம் தொட்டதெல்லாம் பொன்னாகிறது. அவ்வளவு சொன்னால் போதுமா? போதவே போதாது. வயதில் சிறியவனானாலும் வியாபார நுணுக்கங்களை எவ்வளவு எளிதாகக் கிரகித்துக் கொள்கிறான்! அவன் சொல்லும் மணி மணியான யோசனைகளைப் பார். இத்தனை வருஷங்களாகக் கல்லாவின் அடியில் பழி கிடந்திருக்கிறேனே. என் களிமண் மண்டையில் இவ்வளவு அருமையான கருத்துக்கள் உருவானதேயில்லை. சிறு பையன் பேச்சு என்று தள்ளாமல் நடத்திப் பார்த்தேன். நூற்றுக்கு நூறு வெற்றி, மீனா! வாஸ்தவத்தில் மனித குலத்துப் பையன்தானா, அல்லது நம் குல தெய்வம் மீனாக்ஷிசுந்தரக் கடவுளே நம்மை ஆட்கொள்ள இப்படி வந்திருக்கிறாரா?" என்று தம் பத்தினியிடம் சுந்தரத்தை வியந்துரைப்பார் வைரவன் செட்டியார்.

அம்மாளுந்தான் சுந்தரத்தினிடம் தன் பிராணனையே வைத்திருந்தாள். சுந்தரமும் குழந்தை லக்ஷ்மியும் அத்தம்பதிகளின் கண்மணிகள் போல வளர்ந்தனர். அவ குக் ஸ்ரீ குழந்தையின் மேல் கொள்ளை ஆசை. பள்ளிக்கூட நேரந் தவிர மற்றப் பொழுதெல்லாம் அதைத் தோளில் சுமந்துகொண்டு திரிவான்; அல்லது மெல்ல நடத்திக் கொண்டு உலவி வருவான். ஸ்ரீ தங்கச் சிலை போன்றிருந்த லக்ஷ்மியின் கண்கள் சிறிது கலங்கினாலும் சுந்தரத்தினால் சகிக்க முடியாது.

குழந்தைக்கு 'அத்தான்' சுந்தரத்தின்மீது அத்தனைக்கத்தனை ஆர்வம் இருந்தது இயற்கை. கள்ளமில்லாத இந்த அன்பு வளரவேண்டும், உரிய காலத்



தில் இவ்விருவரையும் தாம்பத்ய வாழ்க்கையில் ஒன்றுபடுத்த வேண்டும் என்று வைரவன் செட்டியாரும் அவர் மனைவியாரும் விரும்பினார்கள். ஆம்! லக்ஷ்மிக்குச் சுந்தரத்தைவிடப் பொருந்திய வேறு மணாளன் யார் வாய்க்க முடியும்?

* *

இன்னும் சில ஆண்டுகள் கடந்தன. ஸ்கூல் பைனல் பரீக்ஷை தேறிவிட்ட சுந்தரத்தை மேலே படிக்கச் சொன்னார் செட்டியார். "எதற்கு மாமா? எவ்வளவு உயர்தரக் கல்வி பயின்றாலும் கூடப் பிறகு கடையில் தானே உட்கார வேண்டும்? நான் படித்த வரை போதும், மாமா. வியாபாரத்தில் உங்களுக்கு ஒத்தாசையாக இருந்து நாலு விஷயங்களைத் தெரிந்து கொள்கிறேன்" என்றான் அவன்.

"என்னப்பா சுந்தரம். கேலி செய்கிறாயா என்னை? நான் உன்னிடமிருந்து கற்றுக் கொண்டதுதான் அதிகமே தவிர, என்னிடத்திலிருந்து நீ தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றும் கிடையாது...சரி. மேற்படிப்பின் அவசியம் உனக்குத் தோன்றிவிட்டால் நான் வற்புறுத்த மாட்டேன். நீ கடையைப் பார்த்துக் கொள்வதானால் எனக்கும் சௌகரியந்தான்" என்று செட்டியார் சொன்னார்.

மெல்ல மெல்ல முழுப் பொறுப்பையும் சுந்தரத்தின்மீது சுமத்திவிட்டு விலகிக்கொண்டார் அவர். வயதுக் காலத்திலாவது சற்று ஓய்வு பெற்று, பக்தித் துறையில் ஈடுபட வேண்டாமா? அந்திய காலம் வரை கல்லாப் பெட்டியருகே அமர்ந்து விட்டால் போகிற வழிக்குப் புண்ணியம் எப்படிக் கிடைக்கும்?


வீட்டில் செட்டியார் பக்தி செய்தார். சுந்தரம் கடையில் பணத்தைப் பெருக்கினான். லக்ஷ்மி பள்ளிக்கூடத்துக்குப் போய் வந்து கொண்டிருந்தாள்.

இயற்கை யழகின் மீது பருவத்தின் சோபையும் ததும்பிநின்ற காலம். லக்ஷ்மி ஓர் பூங்கொடி போல் திகழ்ந்தாள். 'அத்தான்! அத்தான்!' என்று சுந்தரத்தை அருமையாகக் கொஞ்சியழைத்து அவனோடு விளையாடிய நாட்கள் போய்த் தற்சமயம் அடக்கமும் நாணமுமே அவளுக்கு அணிகலனாகி யிருந்தன: அன்போடு அவனுக்கு வேண்டிய பணிவிடைகளெல்லாம் செய்வாள். ஆனால் பேச மாட்டாள். நாளை அவளுக்குத் தாலி கட்டப் போகிற மணாளனல்லவா சுந்தரம்!

"பெண் படித்தது போதும். காலாகாலத்தில் இவர்களுக்குக் கலியாணம் செய்து வைத்து விடலாம்" என்று செட்டியார் தம்பதிகள் அவசரப்பட்டார்கள். ஆனால் அத்தனை அவசரம் சுந்தரத்துக்கு இல்லை. "கொஞ்சம் பொறுக்கலாம், மாமா! அவளும் ஸ்கூல் பைனல் தேறி விடட்டும். அதற்குள் நான் செய்து முடிக்க வேண்டிய காரியங்களும் சில உண்டு. கடை வீதியின் நடுவே ஓர் புதுக் கட்டடம் கட்டி அதற்கு இந்தக் கடையை மாற்றி விடலாம் என்றிருக்கிறேன். அங்கேயே ஒரு பகுதியில் துணி வியாபாரமும் தொடங்கலாமென்றும் ஆசை. இத்திட்டங்கள் ஈடேறி விட்டால் பிறகு மண வாழ்க்கையில் பிரவேசிப்பதற்கு ஒரு தடையுமில்லை. நான் எங்கு போய் விடுகிறேன், மாமா? அல்லது லக்ஷ்மிதான் ஓடி விடுகிறாளா?" என்று அவன் சமாதானம் சொன்னான். 'அதுவும் சரிதான்' என்று ஆமோதிப்பது தவிரச் செட்டியாருக்கு வழி எதுவும் தோன்றவில்லை.

ஆனால், பாவம், இந்த இடைக்காலத்திலும் கூட எதிர்பாராத வகையில் சில மாறுதல்கள் முளைத்து வளரக் கூடுமென்று அவர்களில் யாருமே எண்ணவில்லை.

லக்ஷ்மிக்கு ஒரு தோழி. பெரும் பணக்காரர் வீட்டுப் பெண். இருவரும் ஒரே வகுப்பில் படித்து வருபவர்கள். செல்வத்தின் திமிர்



அப் பெண் வனஜாவின் தலைக்கேறி யிருந்தது. தன் பேச்சுக்களால் லக்ஷ்மியின் மனத்தைக் கலைக்கத் தொடங்கினாள்.

''நீ எவ்வளவு படித்து என்ன பிரயோசனம்? கடைசியில் ஒரு கடைக்காரன் மனைவியாகத் தானே ஆகப் போகிறாய்? அதிலும் அவன் யார்? உங்களை அண்டிப் பிழைத்து வரும் ஓர் அனாதை. சோற்றுக்கில்லாமல் எங்கெங்கோ திரிந்து வந்து சேர்ந்தவனுக்கு அடைக்கலம் தந்து ஆதரித்ததோடு நின்றிருக்கக் கூடாதா உன் தகப்பனார்? உன்னையே அவனிடம் ஒப்படைத்து விடப் பார்க்கிறாரே!'' என்று வனஜா அங்கலாய்ப்பாள். லக்ஷ்மி அவள் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் வனஜாவின் தாயும் இதரப் பெண் பிள்ளைகளும் இந்தவிதமாக முதலைக் கண்ணீர் வடித்து வருவார்கள்.

'எறும்பூரக் கல்லும் குழியும்' என்பது முதுமொழி. நாள் செல்லச் செல்ல லக்ஷ்மியின் உள்ளம் ஆட்டம் கண்டது.

சுந்தரத்தினிடம் லக்ஷ்மி கொண்டிருந்த அன்பு கலந்த மரியாதை முதலில் மௌனமாக மாறியது. பின் மெல்ல மெல்ல வெளிப்படையான உதாசீனமாகி வந்தது. பிரேமையில் மூழ்கிக் கிடந்த சுந்தரம் முதலில் இம் மாறுதலைக் கவனிக்கவில்லை, கவனித்தபோது புரிந்து கொள்ளவுமில்லை. 'நமது லக்ஷ்மி தானே? உரிமையினால் இப்படி நடந்து கொள்கிறாள்' என்று எண்ணினான் அவன்.

ஆனால் எத்தனை நாட்களுக்கு இந்தப் பிரமை? அவள் முன்போல் தன்னை விரும்பவில்லை, வெறுக்கிறாள் என்பது இறுதியில் அவனுக்குப் புரிந்தது.

ஆனால் முதலிலேயே இவ் விபரீத மாறுதலைக் கவனித்துப் புரிந்துகொண்ட செட்டியார் தம்பதிகள் பதறினர். தாட்சண்யம் பாராமல் மகளைத் தனிமையில் கண்டித்தார் தகப்பனார். தாயார் நல்ல வார்த்தைகள் சொன்னாள்; பலன் மட்டும் பூஜ்யந்தான்.

இதற்கிடையே நடுக்கடை வீதியில் பெரிய கட்டடம் எழுப்பப்பட்டுச் செட்டியாரின் கடை பல அபிவிருத்திகளுடன் அவ்விடத்துக்கு மாறியது. சலியா உழைப்பினாலும் அதற்கு வழிகாட்டிய புத்தி நுட்பத்தாலும் சுந்தரம் தன் குறிக்கோளை நிறைவேற்றிவிட்டான்.

லக்ஷ்மி ஸ்கூல்பைனல் பரீட்சை தேறிவிட்ட செய்தியும் வந்தது.

செட்டியார் முகூர்த்தத்துக்கு நாள் வைக்கப் புறப்பட்டார்.

* * *

''என்ன? முகூர்த்தமா வைத்து விட்டு வருகிறீர்கள்? யார் கலியாணத்துக்கு அப்பா?'' என்று லக்ஷ்மி வெடுக்கென்று கேட்டபோதே அவள் கன்னத்தில் ஓங்கி அறைய வேண்டும் போலிருந்தது செட்டியாருக்கு. கோபத்தைச் சிரமத்துடன் அடக்கிக் கொண்டு பேசினார்.

சுப சமாசாரம். நயமான முறையில் நடத்திப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார்.

ஆனால் அவளது பிடிவாதமோ; பேச்சுக்குப் பேச்சு, சிறலுக்குச் சிறல் என்று தந்தைக்கும் மகளுக்குமிடையே போராட்டம் நடந்தது.

''அப்பா! உங்கள் கண்ணுக்கு அவன் மணலைச் சர்க்கரையாக்கும் மந்திரவாதியாக இருக்கலாம். ஏன், தேவ புருஷனாகவே தோன்றலாம். ஆனால் எனக்கு அப்படியல்ல. எங்கிருந்தோ வந்து சேர்ந்து, சோற்றுக்கும் துணிக்கும் நம் கையை எதிர்பார்த்து நின்ற ஒரு அனாதைக்கு மாலையிடுவதைவிட நான் குளம், கிணறு பார்த்து என் வாழ்வை முடித்துக் கொள்வேன்......'' என்று பதற்றமாக அவள் பேசிய மொழிகள் அப்போதுதான் வீட்டு வாசலை மிதித்துக் கொண்டிருந்த சுந்தரத்தின் காதில் விழுந்தன; உள்ளத்தில் சுருக்கென்று தைத்தன.

அதற்குமேல் இங்கு தாமதிக்க வேண்டிய காரணம் அவனுக்குத் தோன்றவில்லை. கடையின் சாவிகள், இரும்புப் பெட்டியின் சாவி இவற்றைச் செட்டியார் பார்க்கும்படியாகத் தாழ்வாரத்தில் வைத்தான். ஓசையின்றித் திரும்பி நடந்தான். வேகமாக நடந்தால் சென்னை செல்லும் ரயிலைப் பிடிக்கலாம்.

சுந்தரம் வீட்டுக்கு வந்தான், மறுபடியும் உடனே எங்கோ போனான் என்பதற்கு அத்தாட்சியாக அந்தச் சாவிகள்தான் நின்றன. அவற்றைக் கண்டபோதே 'ஏதோ விபரீதம் விளைந்து விட்டது. கேட்கக் கூடாத அந்தப் பொல்லாத வார்த்தைகளைச் சுந்தரம் கேட்டு விட்டான்' என்ற அதிர்ச்சி தரும் உண்மை அவருக்குத் துலங்கியது.

''அடி சண்டாளி! அந்த உத்தமனை விரட்டி விட்டாயேடி'' என்று மகளைச் சபித்துவிட்டுச் சுந்தரத்தைத் தேடிப் பிடிக்க அவர் கிளம்பினார். நாற்புறமும் ஆட்களை அனுப்பினார். அவன் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடப்பதைப் பார்த்ததாக யாரோ சொன்னார்கள். அவ்வளவுதான்; மறுநாள் காலைத் தபாலில் அவனது கடிதம் அவர் கைக்குக் கிடைத்தது. முத்துப் போன்ற அவன் கையெழுத்து



கூறியது. ''லக்ஷ்மியின் ஆனந்தமே என் ஆனந்தம். அவளுக்குக் கஷ்டம் தரும் வகையில் இங்கு தங்க நான் விரும்பவில்லை. அவள் விரும்பும் வரனைப் பார்த்து மணம் செய்து வையுங்கள். எங்கிருந்தாலும் உங்கள் அன்பை நான் மறவேன்.''

கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு வைரவன் செட்டியார் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுதார். தம் இரு கண்களையும் பறி கொடுத்துவிட்டு அந்தகாரத்தில் நிற்பது போலிருந்தது அவருக்கு. மீனாட்சியம்மாளின் துக்கமும் சொல்லத் தரமன்று.

*　　*　　*

இரண்டே வருஷங்கள். அத்தனை விரைவாக மேலெழுந்த வைரவன் செட்டியார் அதைவிட விரைவான வீழ்ச்சியையும் கண்டு விட்டார். கோபுரம் சரிந்து குப்பை மேடானது போல அவரது வியாபாரம் நசித்து விட்டது. செட்டியாரின் மனக்கவலை, அதன் காரணமான உடல் நலிவு இவற்றோடு வடிகட்டின அயோக்கியனை ஒரு காரியஸ்தனும் சேர்ந்தான்; எல்லாம் தொலைந்தது.

ஆனால் அவர் இது பற்றி ஆச்சரியப்படவில்லை. எல்லாம் அவர் எதிர்பார்த்ததுதான். பாக்கிய சக்கரத்தைக் கொண்டு வந்தது சுந்தரம்; அவன் பிரிந்தபோது அதுவும் அவனைத் தொடர்ந்து சென்று விட்டது. அப்படிப் போகும்போதும் சும்மாப் போகவில்லை. இருந்த சிறிது வசதிகளையும் சுரண்டிக் கொண்டு அவரைக் கடனாளியாக்கி விட்டது.

அதோடு நின்றிருக்கக் கூடாதா? இத்தனை வருஷ காலம் நல்ல ஆரோக்கியசாலியாக இருந்தவருக்குத் திடீரென்று வாத நோய் வந்து அவரைப் படுத்த படுக்கையாக்கி விட்டது. கடனோடு கடனாக மருந்துச் செலவுகளும் ஏறி விட்டன.

எப்போதும் அவருக்கு ஒரே ஸ்மரணைதான். 'சுந்தரம், சுந்தரம்' என்று ஏங்கியவாறு இருந்தார். 'எனக்குச் செல்வம் வேண்டாம், ஆரோக்கியம் வேண்டாம். அவனை ஒரு முறை கண்ணால் பார்த்துக் கட்டித் தழுவிக் கொண்டால் போதும். சந்தோஷமாகக் கண்ணை மூடுவேன்' என்று புலம்பினார். பலனைக் கருதாத பரிசுத்த அன்பு அவரது.

'பாவி நான்தானே இந்தச் சர்வநாசத்துக்கும் பொறுப்பாளி! கேட்கத் தகாத பேச்சைக் கேட்டு அவர் மனம் நோகச் செய்தேனே. இனி அந்தச் சுந்தர வதனத்தையும் கம்பீரத் தோற்றத்தையும் மறுபடியும் காணப் போகிறேனா? அவரது மன்னிப்பைப் பெறப் போகிறேனா?' என்று லக்ஷ்மி துடித்ததிலும் குறைவில்லை. சுந்தரத்தின் படத்தை எடுத்து வைத்துக் கொண்டு கண்ணீரால் அதை அபிஷேகம் செய்வாள். கண்ணீர் வற்றி விட்டபோது அதற்கு மலர் சூட்டி அலங்கரித்து ஓர் தெய்வம் போல் வழிபடுவாள்.

வனஜாவின் நட்பு இப்போது அவளுக்கு இல்லை. அவளாக விரும்பினாலும் அதைப் பெற முடியாதபடி லக்ஷ்மி ஏழையாகி விட்டாளே! கடன்காரர்களின் உபத்திரவம் ஒருபுறம் வாட்டியது. அதைவிட, செட்டியாரின் உடல் நிலை வரவர மோசமாகிக் கவலைக்கு இடம் தந்தது. டாக்டரை அழைத்துக் காட்டப் பணம் தேவையாயிருந்தது. பணத்துக்கு எங்கே செல்வது?

லக்ஷ்மி யோசித்தாள். விற்கும்படியான நகைகளோ, இதரப் பொருள்களோ குடும்பத்தில் ஒன்றும் மிஞ்சி நிற்கவில்லை. பழைய சிநேகிதி வனஜாவின் உதவியை நாடுவது ஒன்றுதான் வழியெனத் தோன்றியது. வெய்யில் கொளுத்தும் வேளையில் காலில் செருப்புக் கூட இல்லாது இன்று அவள் வீடு நோக்கி நடந்தாள் பேதை.

அங்கு அவளுக்குக் கிடைத்த வரவேற்பு தைரிய மூட்டுவதாயில்லை. 'யார் நீ?' என்பது போல் அவளை நோக்கினாள், ஒரு காலத்தில் உயிர்த்தோழியாக இருந்த வனஜா. அவளருகே நின்றான் சென்னையில் உத்தியோகம் பார்த்து வரும் அவள் கணவன்.

லக்ஷ்மி நிலைமையை உணர்த்தி உதவி வேண்டினாள். '' நானாக எதுவும் செய்வதற்கில்லை, அம்மா. ஏனென்றால் நான் மணமானவள் பார். என் கணவர் எப்படி எண்ணுகிறாரோ?'' என்று தனக்காக வனஜாவின் பதில் வந்தது.

''பரவாயில்லை, வனஜா! இதற்கெல்லாம் நான் தடை சொல்வேனா? நூறு ரூபாய்தானே? சும்மாக் கொடு'' என்று உளறி வைத்தான் உண்மை தெரியாத அந்த அப்பாவிக் கணவன். வனஜா அவனைப் பார்த்த பார்வை அப்படியே சுட்டெரிப்பதாயிருந்தது.

''நன்றாயிருக்கிறது. இப்போது இப்படிச் சொல்வீர்கள். பிறகு 'ஏன் கொடுத்தாய்?' என்று என் காதைத் திருகுவீர்கள். நான் மாட்டேன்...நீ போய் வா அம்மா லக்ஷ்மி!'' வனஜா சட்டென்று உள்ளே மறைந்து விட்டாள். நீர் நிறைந்த கண்களுடன் வந்த வழியே திரும்பி நடந்தாள் லக்ஷ்மி. ''அடி முட்டாளே! இதே வனஜாவின் சொல் கேட்டுக் கேட்டுத்தானே உன் தலையில் நீயே கல்லைப் போட்டுக் கொண்டாய்? இப்போது பார்'' என்று உள்ளம் குத்தியது.

வெறுங் கையுடன் வீடு திரும்பி நோய்ப் படுக்கையில் கிடக்கும் தந்தையைக் காண அவள் விரும்பவில்லை. புண்ணான நெஞ்சம் 'இந்த வாழ்க்கையை முடித்துக் கொண்டால் தான் என்ன?' என்ற ரீதியில் எண்ணமிடத் தொடங்கியது. சாலையோரம் இருந்த ஓர் மர நிழலில் ஒதுங்கி நின்றபடி யோசித்தாள்.

''சகோதரி!'' என்ற குரல் அவளைத் திடுக்கிடச் செய்தது. தலை நிமிர்ந்தவள் சற்று முன் சந்தித்த வனஜாவின் கணவன் எதிரே நிற்பதைக் கண்டாள்.

''வனஜா உன்னிடம் சரியாக நடந்து கொள்ளாததற்கு நான் மிகவும் வருந்துகிறேன். உதவி நாடி வந்த ஓர் பழைய சிநேகிதியிடம் நடந்து கொள்ளும் முறை இதுவல்லவென்று நான் அவளுக்கு எடுத்துச் சொன்னேன். அவள் தன் பிழையை உணர்கிறாள். அவளே இந்தப் பணத்தைக்கொடுத்து உன்னிடம் சேர்ப்பிக்கச் சொன்னாள். பெற்றுக்கொள், அம்மா!'' என்று கூறி ஒரு நூறு ரூபாயை நீட்டினான் அவன்.

பம்பாய் மாதுங்காவில் உள்ள ஆஸ்திக சமாஜத்தின் ஆதரவில் அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த சுகப் பிரம்மம் ஸ்ரீ எஸ். ராமசாமி சாஸ்திரியாரின் ஸ்ரீமத் பாகவத கதாப் பிரசங்கம் சென்ற செப்டம்பர் மாதம் ஆரம்பமாகிப் பல நாட்கள் நடந்தன. ஆஸ்திக மக்கள் கேட்டுப் பரவசம் அடைந்தனர். வேதத்திலும் சாஸ்திரங்களிலும் வல்லுனரான ஸ்ரீ ராமசாமி சாஸ்திரியார் பல பட்டங்கள் பெற்றவர். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் அருளும் ஆசியும் பெற்றவர்.



இவ்வுதவியைப் பெற லக்ஷ்மியின் மனம் கூசியது. ஆனாலும் வேறு கதியில்லாத நிலைமை. நடுங்கும் விரல்களால் அந்தப் பச்சை நோட்டை வாங்கினாள். கைப்பையிலிருந்து சின்னஞ்சிறு தோல் மணிபர்ஸை எடுத்து அதனுள் அடக்கம் செய்யப் போனாள். அப்போதுதான் பர்ஸிலிருந்த சுந்தரத்தின் சிறு புகைப்படம் நழுவிக் கீழே விழுந்தது. அதை லக்ஷ்மி கவனிக்குமுன் வனஜாவின் கணவன் பார்த்து விட்டான். குனிந்து பொறுக்கி எடுத்து அவளிடம் தந்தான்.

அவன் கண்கள் வியப்பாலும் திகைப்பாலும் மலர்ந்து விரிந்திருந்தன.

* * *

சென்னை அரண்மனைக்காரத் தெருவின் மத்தியில் இருந்த பிரும்மாண்டமான கட்டடங்களிலொன்று 'சுந்தரம் அண்டு கம்பெனி'யின் காரியாலயத்தைத் தன்னுள்ளடக்கிக் கொண்டிருந்தது. கையில் பொருள் இல்லாமல்தான் அவன் சென்னையில் கால் வைத்தான். ஆனால் பாக்கியலக்ஷ்மி அவனைத் தொடர்ந்து இங்கும் வந்திருக்கும்போது என்ன குறை? கண்டிராக்ட் துறையில் புகுந்தான்; காசு சேர்க்கத் தொடங்கி விட்டான். இப்போது பல எஞ்சினியர்களும் ஓவர்ஸியர்களும் தன் கீழ் அடங்கி வேலை செய்யச் சொந்தமாக ஸ்தாபனத்தை நிறுவிவிட்டான்.

பணம் வந்து குவிந்து கொண்டுதானிருந்தது. ஆனால் மனத்துக்கு அவ்வளவாகச் சாந்தியில்லை. தன்னை ஆளாக்கிய வைரவன் செட்டியார் தம்பதிகளையும், தன்னை அலட்சியம் செய்த லக்ஷ்மியையும் பற்றி அவன் உள்ளம் ஓயாது எண்ணமிட்டவாறு இருந்தது.

லக்ஷ்மி அவன் விஷயத்தில் அத்தனை உதாசீனமாக நடந்து கொண்டிருந்த போதிலும் கூட அவனால் அவளை மறக்க முடியவில்லை! 'உம். நல்ல புருஷனை மணந்து சந்தோஷமாக வாழட்டும்!' என்ற ஆசியைக் கொண்டே தன் நிராசையை மெழுகிவிட முயன்றான்.

அவன் பிரிந்த பின் வைரவன் செட்டியாருக்கு நேர்ந்த துர்க்கதியைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை; எனவே இன்று வந்த தந்தி அவனை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. அவன் கீழ் உத்தியோகம் பார்க்கும் எஞ்சினீயர் ராகவன் விடுமுறை பெற்றுக்கொண்டு தன் மனைவியைக் காணச் சென்றிருந்தான். அந்த ஊரும், தான் முன்பிருந்த ஊரும் ஒன்றுதான் என்பது அதுவரை சுந்தரத்துக்குத் தெரியாது!

அப்படி என்ன செய்தி அடங்கியிருந்தது, தந்தியில்? "உமக்குத் தெரிந்த பெண் - லக்ஷ்மி - தன் குடும்பத்துடன் பெருங் கஷ்டத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது. உடனே புறப்பட்டு வரவும்.—ராகவன்."

அப்புறம் சுந்தரம் ஏன் தாமதிக்கிறான்? தன் புத்தம் புதிய ப்யூக் காரில் உடனே கிளம்பி விட்டான். வாயு வேகமாகப் பறந்து சென்றது அந்த வண்டி.

* * *

இரவு நேரம். ஊசிகள் போட்டுவிட்டு டாக்டர் வெளியேறினார். தெய்வ கிருபையால் அபாயத்தின் எல்லையைக் கடந்துவிட்ட வைரவன் செட்டியார் மெல்லக் கண் விழித்துப் பார்த்தார். அருகே மீனாட்சியம்மாள் அமர்ந்து மெல்ல விசிறிக் கொண்டிருப்பது தெரிந்தது. எதிரே சுவரில் தொங்கியது சுந்தரத்தின் பெரிய புகைப்படம். தேவதா விசுவாசத்துடன் அதற்கு மலர் சூட்டி விளக்கேற்றி வைத்துக் கொண்டிருந்த மகளைக் கண்டதும் அவர் கண்களில் நீர் சுரந்தது.

வாசலில் ஓசை செய்யாமல் வந்து நின்றது ஒரு கார். அதிலிருந்து இறங்கி உள்ளே பிரவேசித்த சுந்தரத்தின் கண்ணில் முதன் முதலாகப் பட்டதும் லக்ஷ்மி தன் படத்துக்கு மாலை சூட்டும் காட்சிதான்!

"லக்ஷ்மி!" என்று நடுங்கும் குரலில் அழைத்தான் அவன். "அத்தான்!" என்று அந்த ஆர்வத்தை எதிரொலித்தது அவள் குரல்.


தாம் காண்பது கனவோ என்ற சம்சயத்துடன் மெல்லப் படுக்கையில் எழுந்து உட்கார முயன்ற வைரவன் செட்டியாரின் கால்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் விட்டான் சுந்தரம். "மாமா! உங்களை இந்தக் கோலத்தில் காண்பேனென்று நான் நினைக்கவில்லையே. எனக்கு முன்பே விஷயம் தெரிந்திருந்தால் ஓடி வந்திருப்பேனே!" என்று கதறினான்.

அவனைக் கட்டியணைத்துக்கொண்டு கண்ணீரைத் துடைத்த செட்டியார் சொன்னார்: "வருந்தாதே, தம்பி! வாழ்வின் சில பாடங்களைப் பெரும் கஷ்டத்தின் வாயிலாகத் தான் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த முட்டாள் பெண் லக்ஷ்மியின் சுய அறிவு திரும்புவதற்காக விதி எங்கள் எல்லோரையுமே துன்புறுத்தி விட்டது. அதனால் பரவாயில்லை. அவளுக்குப் புத்தி வந்ததும் விதி உன்னையும் எங்களுக்குத் தந்திருக்கிறது. இனி நீங்கள் இருவரும் சதிபதிகளாய் வாழத் தடையில்லையே?" என்று கூறி அவர்களது கரங்களை இணைத்து வைத்தார்.

மார்க்கெட்டிற்கு

நாகரீகமடைந்த அடிபோஸர் செல்லுதல்





பூமியினடியிலிருந்து நான் கண்டு பிடிக்கப்பட்டு, இறைத்து மேலே கொண்டு வந்து, சுத்திகரணத்தால் பல பொருட்களாக்கி, மார்க்கெட்டிற்கு என்னை கொண்டு போகிறார்கள். மார்க்கெட் என்பது சாதாரணமாக நீங்கள் நினைக்கும் சந்தை யல்ல. சுத்திகரிப்புச் சாலையிலிருந்து வாங்கி உபயோகிப்பவர்களாகிய உங்களை நான் அடையும் வித்தையே இப்படி இவர்கள் கூறுவது வழக்கம். இங்கிருந்து என் யாத்திரை திறம் நிறைந்த அநுபவசாலிகளால் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. நமது பாரத தேசத்திற்கு 60 வருஷங்களுக்குமேலாக தரம் நிறைந்த பெட்ரோலிய பொருள்கள் இந்த அநுபவசாலிகளே சப்ளை செய்து வந்திருக்கிறார்கள்.

ஸ்டானவாக் தேசத்தின் முக்கியமான இடங்களில் அமைக்கப்பட்ட 4 டெரிட்டரி ஆபீஸ், 7 விற்பனை ஆபீஸ், 9 டெப்போக்கள், சுமார் 2000 டீலர்கள், ஏஜண்டுகளும் அவசியப்பட்ட இடங்களில் ஏற்படுத்தி, இவர்களின் மூலம் பாரத மக்களுக்கு கோடிக்கணக்கான காலன்கள், கேஸோலின், கிரோஸின் மற்றும் இண்டஸ்டிரியல் ப்யூயல் ஆயிலும் தங்கு தடையின்றி சப்ளை செய்து வருகிறார்கள்.

ஸ்டானவாக் — வளர்ச்சிக்கென்றே நிற்கும் பெயர்

ஸ்டாண்டர்ட் வாக்குவம் ஆயில் கம்பெனி

யு. எஸ். ஏ. வில் இணைக்கப்பெற்றது கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது



PL.851/G/2



INAS-56



கடைசி விளக்கு

நா. மார்க்கண்டேயன்

தோளில் மாட்டிய ஏணியுடன் அவன் அந்தி மயங்கும் வேளையில் தெரு வழியாக நடந்து கொண்டிருந்தான்.

அந்த இடம் வந்து விட்டது. அவனது கால்கள் தானாக நின்றுவிட்டன. தோளின் மீதிருந்த ஏணியைக் கம்பத்தில் சாய்வாகச் சாத்தினான். அதை இரு கைகளாலும் ஒரு உலுக்கு உலுக்கிச் சரியாகப் பதிய வைத்தான். படிகளில் காலை வைத்து வெகு சுலபமாக ஏறி உச்சியை அடைந்தான்.

அவன் விளக்கைக் கூண்டிலிருந்து வெளியே எடுத்துக் கந்தைத் துணியால் நன்றாகத் துடைத்தான். அவ்விளக்கை மறுபடியும் கூண்டுக்குள் பொருத்தினான். தன் பையிலிருந்த தீப்பெட்டியை எடுத்து விளக்கின் திரியைப் பற்ற வைத்தான். திரி நன்றாக எரிந்தது. அதன் ஒளி அவனது முகத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

நல்ல வாலிபனின் முகம்தான். அவனுக்கு அப்படியொன்றும் வயது அதிகமாகிவிடவில்லை. அதிகமாகப் போனால் முப்பது அல்லது முப்பத்திரண்டுதான் இருக்க வேண்டும். முகத்தில் அடர்ந்திருந்த தாடியும், மீசையும் அவனது வயதை அதிகமாக்கிக் காட்டியிருக்கலாம்.

அவன் விளக்கின் சிம்னியைப் பொருத்த முயன்றான். அவ்வேளையில் சூறாவளிக் காற்று எங்கிருந்தோ வளைத்துக் கொண்டு வந்து விளக்கைச் சட்டென்று அணைத்து விட்டது.

மறுபடியும் மற்றொரு குச்சியைக் கிழித்து விளக்கைப் பற்ற வைத்தான். அதன் ஒளியைக் கண்டதும் அவன் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டான். அதில் எவ்வளவோ அர்த்தம் இருந்தது.

அவனது மனைவி செங்கமலம் படுக்கையில் படுத்துப் பத்து நாட்கள் ஆகிவிட்டன. அப்போது அவள் நிறை மாதமாயிருந்தாள். உடம்பில் ஜுரம் இருந்தது. அவளால் ஒன்றும் முடியவில்லை படுக்கையில் படுத்தவாறு 'உம்' 'உம்' என்று முனகிக்கொண்டேயிருந்தாள்.

'செங்கமலம்' என்னும் விளக்கு அணையாமல் இருக்க வேண்டுமே என்று எத்தனையோ தடவை ஏங்கி விட்டான் அவன். அவ்வூர் மலைமீதிருந்த சுப்பிரமணியக் கடவுளைச் சதா வேண்டிக் கொண்டான். செங்கமலத்துக்கு மலைமேல் சாமியிடத்தில்தான் பலத்த நம்பிக்கை. மலைமேல் சாமிக்கு நம்மேல் ஏதோ கோபம் என்று செங்கமலம் ஒரு தடவை அவனிடத்தில் கூறியிருந்தாள். அவன் விரும்பியபடியே ஒரு தேங்காயை உடைத்துக் கற்பூரம் ஏற்றித் தன் குறையைப் போக்கும்படி வேண்டிக் கொண்டான் இவ்வளவு செய்தும் ஜுரம் நிற்கவேயில்லை; அதிகமாகிக் கொண்டேதான் வந்தது.

அவன் கீழே இறங்கி ஏணியை எடுத்துக் கொண்டு விடுவிடென்று தன் வீட்டை நோக்கிச் சென்றான். அவனது தோளின் மீதிருந்த பை அவனது நடையின் வேகத்தை வியந்து அவன் முதுகில் தட்டிக் கொடுத்தது.

வீட்டின் வாயிலிலே சிறிய விளக்கின் வெளிச்சம் தெரிந்தது. அங்கே நாலைந்து பெண்கள் நின்று கொண்டிருப்பதை அந்த ஒளி அவனுக்கு எடுத்துக் காட்டியது. அவனது மனத்தில் ஒருவித பயம் சூழ்ந்து கொண்டது. 'செங்கமலத்துக்கு உடம்பு அதிகமாகிவிட்டது போலிருக்கிறது' என்று ஒரு கணம் நினைத்துப் பயந்தான். அந்தப் பயம் அவனது கால்களைத் தூண்டி விட்டது. முன்னிலும் வேகமாக நடந்து வந்தான் அவன்.

"சுப்புராமா! சின்னயிக்கு ஜுரம் அதிகமாகிவிட்டது. உடம்பெல்லாம் வெடவெடவென்று உதறுகிறது" என்று ஒரு குரல் அவனை வரவேற்றது.

அவன் மௌனமாகவே உள்ளே சென்றான்:

"ஐயோ, பாவம்! செங்கமலம் பொழைச்சு நல்லபடியா வாழணுமே" என்ற சலிப்புக் குரல் அவனைத் துரத்திக் கொண்டே வந்து காதுகளில் பாய்ந்தது.

செங்கமலம் படுத்துக் கொண்டிருந்தாள். வெங்கைய முதலியார்தான் நாடி பார்த்துக் கொண்டிருந்தார்.

"டேய், சுப்புராமா! பித்தம் தலைக்கு அதிகமாக ஏறியிருக்கு. இன்னும் இப்படியே இருந்தால் ஜுரம் இன்னும் அதிகமாகப் போய்விடும். நம்ப மருந்தெல்லாம் இதற்கு மேலே ஒன்றும் செய்யாது. நீ சீக்கிரமாய்ப் போய்ச் செய்யாற்று டாக்டரைக் கூட்டிக் கிட்டுவா." இப்படி வெங்கைய முதலியார் வந்ததும் வராததுமாகக் கூறிவிட்டார்.

"வைத்தியரே! நீங்களே கொஞ்சம் கவனிச்சுக்குங்கோ; இதோ நொடியிலே கூட்டிக் கிட்டு வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டுத் துண்டை உதறித் தோளின்மீது போட்டுக் கொண்டு வெளியே கிளம்பினான் சுப்புராமன்.

"நம்மிடம் பணமோ கிடையாது. யாராவது கடனாவது கொடுப்பார்களா?"-அவன் தன்னையே கேட்டுக் கொண்டான்.

"ஏழைக்கு யார் கொடுப்பார்கள்?" அவனது மனம் அவனைத் திருப்பிக் கேட்டது.

"அப்படியானால் பணத்துக்கு எங்கே போவது? அப்போது செங்கமலத்தின் கதி?"

அவனது கன்னத்தில் யாரோ அறைவது போலிருந்தது. அவன் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

எங்கும் ஒரே இருள். அவனது மனத்தினுள்ளும் இருள்தான் தன் அகன்ற சிறகுகளால் மூடிக் கொண்டிருந்தது. இரண்டு இருளும் சேர்ந்து அவனது அச்சத்தை அதிகமாக்கின. அவனது கால்கள் தடுமாறின.

வீட்டுக்குத் திரும்பி விடலாமா என்று கூட நினைத்தான் அவன்.

சுற்றிலும் கண்களைத் திருப்பினான். இருள் அவனுக்கு ஒன்றையுமே காட்டவில்லை. ஆனால் ஒரு பக்கத்தில் தூரத்தில் ஒரு சிறு விளக்கு இருளோடு போராடிக் கொண்டிருந்தது.

அதன் ஒளி அவனது மனத்திலிருந்த இருட்டைப் போக்கியது. இருள் நீங்கிய மனத்தில் ஒளி பரவியது. அதற்கு நம்பிக்கை துணையாக நின்று இருளை விலக்கி வழி விட்டது: ஏதோ இனம் தெரியாத ஒரு இன்பம் அவன் மனத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. கால்களை அவ்விளக்கின் திசையை நோக்கிச் செலுத்திவிட்டான். "மலைமேல் சாமியை நினைத்துக் கொண்டு காரியத்தில் இறங்கினால் பலன் கிட்டும்" என்று நினைத்துக் கொண்டான் அவன். கடைசித் தடவையாகவாவது கடவுள் தன்னைக் கைவிடமாட்டார் என்ற பலத்த நம்பிக்கை அவனுக்கு.


இருளின் நிழலிலே அமைதி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. அதன் உறக்கத்தை ஒரிரு நாய்கள் குரைத்துக் குரைத்துக் கலைத்துக் கொண்டிருந்தன.

அந்தி வேளையில் ஆடிப்பாடிய பறவைகள் மரங்களின் உச்சிக் கிளைகளில் அயர்ந்து தூங்கிக் கொண் டிருந்தன. இவனதுகாலடிஓசையைக் கேட்டு ஒரு சில பறவைகள் சிறகடித்துத் தம்மை அவனுக்குத் தெரிவித்துக்கொண்டன. காற்று கொம்புகளை அசைத்துச் செல்லும்போது, "ஙம்" "ஙறு" என்ற ஒலியை இடையிடையே எழுப்பியது.

அவனுக்கு இதெல்லாம் பழக்கந்தான்: என்றாலும் அவனுக்கு அச்சமாகவே இருந்தது. "செங்கமலத்துக்கு இப்போது எப்படியிருக்கும்?" என்று இடையிடையே கேட்டுக் கொள்வான். அதற்குப் பயங்கரமான பதில்கள் கிடைக்கும். அவனுக்கு அப்படியே வியர்த்துக் கொட்டும்; என்றாலும் அவனது கால்களில் மட்டும் வன்மை குறைவதில்லை.

அந்த முருகன் கோயில் பெரிய கோயில் இல்லை. சிறியது தான். ஆனால் அதன் அழகு அதிகம். பெருமையும் அதிகம்தான்; அதற்குச் சிறப்பானதலபுராணமும் இருந்தது.

சுப்புராமன்மேல்துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டான். முருகப்பெருமான் விளக்கின் ஒளியில் அழகாக மயில் வாகனத்தின் மீது அமர்ந்திருந்தார். வாசற்படியின் மீது வைத்திருந்த திருநீற்றை எடுத்



துப் பூசிக் கொண்டான். கைகளைக் கூப்பி மனத்தையும் ஒருமுகப்படுத்தினான்.

''கடவுளே! எனது குறையைப் போக்க வேண்டும். எனக்கு அருள் தரவேண்டும்'' என்று பலமுறை வேண்டிக் கொண்டான்.

பூசாரி இத்தனை நாட்கள் கதவைச் சிறிது முன்பாகவே மூடிக்கொண்டு சென்று விடுவதுண்டு. இன்று சுப்புராமன் செய்த புண்ணியமோ என்னவோ இவ்வளவு நேரம்வரை மூடாமல் இருந்தான். ஒருசில பேரும் அந்த நேரத்துக்கு அங்கே வந்து வணங்கிச் சென்றனர். அவர்களெல்லாம் அநேகமாய்த் தொழிலாளிகளாய்த்தான் இருக்க வேண்டும். அவர்களுக்குப் பகலில் நேரம் ஏது அங்கே வந்து விடுவதற்கு!

சுப்புராமனுக்குத் திடீரென்று ஏதோ ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. அவன் எதையோ நினைத்துக் கொண்டான்.

சுப்புராமன் சுற்றிலும் கண்களைச் சுழற்றினான். அங்கே ஒருவரையும் காணோம். பூசாரியையும் அங்கே காணவில்லை. வெளியில் எதற்கோ சென்றிருக்க வேண்டும்.

அவன் மெதுவாக உள்ளே நுழைந்தான்: மார்பு பலமாக விரிந்து சுருங்கியது. மனம் படபடத்தது. தனது இடதுகையால் மார்பை அமுக்கினான். படபடப்பு நின்றுவிடும் என்ற அசட்டுத் தைரியம். அப்போது தொண்டை வறண்டது போலிருந்தது. ஒரு முறை எச்சிலை விழுங்கிக் கொண்டான். அவனது வலது கை விளக்கின் சுடரை அணைத்தது. விளக்கினை லாகவமாகப் பற்றினான். அதை எடுத்துக் கொண்டு வாயிலை நோக்கி நடையிட்டான். இடையில் தட்டு ஒன்று அவன் காலில் பட்டு ஓசையிட்டு விட்டு ஓய்ந்தது. அவற்றையெல்லாம் தாண்டிக் கொண்டு வேகமாகக் கீழே இறங்கி வந்தான்.

இருளின் பயங்கரம் அவனைப் பார்த்துச் சிரித்தது. பொன் வண்டுகளின் ரீங்கார ஓசை அவன் பயத்துக்குச் சுருதி கூட்டியது. இதயம் மத்தளம் அடித்தது. கால்கள் நடனமாடின.



இடையிடையே 'திருடன், திருடன்' என்று கத்திய பூசாரியின் ஓசை அவனது பயத்துக்குச் 'சபாஷ்' கூறுவது போன்றிருந்தது.

இந்நிலையில் தலை தெறிக்க வீட்டை நோக்கி ஓடினான் அவன்.

செங்கமலம் மட்டும் பாயின்மீது புரண்டு கொண்டிருந்தாள். அருகிலிருந்த பெண்கள் அதிக நேரமாகி விட்டதால் சாப்பாட்டுக்காகச் சென்று விட்டனர். வைத்தியரும் எங்கோ வெளியில் சென்றிருந்தார். வீடு வெறிச்சென்றிருந்தது. செங்கமலத்தின் முனகல் சத்தந்தான் அங்கு நிலவிய அமைதியைப் பயங்கரமாக்கியது.

''செங்கமலம்! இனி நம் கவலையெல்லாம் தீர்ந்தமாதிரிதான். மலைமேல் சாமி நமக்குக் கருணை காட்டிவிட்டது.'' பெருமூச்சோடு கலந்து வந்தன அவனது வார்த்தைகள்.

'டாக்டர் கிடைத்தாரா; வருகிறாரா?'' செங்கமலம் தாழ்ந்த குரலிலேயே கேட்டாள்:

''கிடைக்கிறதுக்கு வழிதானே மலைமேலே சாமி நமக்குச் செய்ஞ்சது. இதோ பாரு, செங்கமலம். நான் போய்க் கொண்டிருக்கும் போது இந்த விளக்குக் கிடைச்சது. இதை மார்வாரிக் கடையிலே போட்டுப் பணமாக்கி விட்டு வருகிறதுக்குள்ள உன்னைப் பார்த்து விட்டுப் போகலாம்னு இங்கே வந்த......'' அவன் பேச்சை நிறுத்தக்கூட இல்லை.

''விளக்கா?'' வியப்போடு கலந்து வந்தது அந்த வார்த்தை அவளிடமிருந்து.

''ஆமாம்; விளக்குத்தான், செங்கமலம்!'' என்று மடியிலிருந்து எடுத்துக் காட்டினான் சுப்புராமன்.

அவள் தலையை நன்றாகத் தூக்கிப் பார்த்தாள். அருகிலிருந்த விளக்கு வெளிச்சத்தில் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது.

அந்த மின்னலினூடே ஒரு பேரிடி.

''ஐயோ!'' என்ற ஒலி உச்சி முகட்டைப் பிளந்தது. செங்கமலம் இரு கைகளாலும் தன் முகத்தில் அடித்து மூடிக் கொண்டாள்.

''என்ன செங்கமலம்! ஏன், ஏன் இப்படிக் கத்தறே?'' அவன் மிகவும் திகிலோடு அவளது கைகளைப் பற்றினான்.

கைகளைத் தூக்கிப் பார்த்தான். அவளது கண்கள் மூடியிருந்தன. அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''செங்கமலம் பிரிந்து விட்டாளா?'' என்று தன்னையே கேட்டுக் கொண்டான். அதற்குப் பதில் கிடைப்பதற்கு முன் அவளது கண்கள் படபடவென்று அடித்துக் கொண்டன. அதைப் பார்ப்பதற்கே அவனுக்கு மிகவும் பயங்கரமாக இருந்தது.

'அவள் மயக்கமடைந்திருக்கலாம்' என்று நினைத்தான். ஒரு குவளை நீரைத் தன் உதறும் கைகளால் அவளது முகத்தில் அடித்தான். சிறிது நேரத்தில் அவள் தன் கண்களை மெதுவாகத் திறந்தாள். அவனுக்குப் பாதி உயிர் திரும்பி வந்ததைப் போன்றிருந்தது. அவளது முகத்தையே உற்று நோக்



"உங்கள் பற்களை பாதுகாறுங்கள்!"
விஸ்டம் பல் வைத்தியர் எப்படி என்று கூறுகிறார்
உங்கள் குழந்தைகளுக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்களின் பற்களின் மீது பெருமிதம் கொள்ள கற்றுக் கொடுங்கள்! ஒவ்வொரு குழந்தைக்கும் 'விஸ்டம்' ஜூனியர் டூத் ப்ரஷ் வாங்கிக் கொடுங்கள். ஜூனியர் குழந்தைகளுக்கென்றே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டவை. பிறகு...
...இரவிலும் காலையிலும், பின்னர் உணவருந்திய பிறகு சாத்தியமானால் ஒவ்வொரு தடவையும், பற்களையும் ஈறுகளையும் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைக்க ப்ரஷால் துலக்குவதன் அவசியத்தை விளக்குங்கள்.
ஒரு உதாரணத்தை ஏற்படுத்துங்கள்! குழந்தைகளுக்கு, பற்களின் எல்லா பக்கங்களையும் சுத்தம் செய்ய சரியான முறையை காட்டுங்கள். தினசரி டூத் ப்ரஷ் அப்பியாசம் கொடுத்து வழக்கத்தை ஏற்படுத்துங்கள்.
காலாகாலத்தில் அவர்களை பல் வைத்தியரிடம் அழைத்துச் செல்லுங்கள். அவர் உறுதியான வெண்மையான அழகான பற்கள் வளருவதற்கு உதவும் நண்பர் என்று குழந்தைகளுக்குக் கூறுங்கள்.
உங்கள் பற்களை ஆரோக்கியமாய் வையுங்கள்: இரவிலும் காலையிலும் விஸ்டம் ப்ரஷால் துலக்குங்கள். துலக்க சுலபமாயிருக்க அதன் நேரான தலை மற்றும் வளைந்த கைப்பிடியானது பால் வாயின் மூலை முடுக்குகளிலும் புகுத்தலாம்; அதன் விறுவிறுப்பான நைலான் குச்சங்கள் பல் இடுக்குகளில் நுழையும். பொருத்தமான வடிவம் கொண்ட விஸ்டம் டூத் ப்ரஷை உபயோகியுங்கள்!
காலாகாலத்தில் உங்கள் பல் வைத்தியரைக் காணுங்கள்.
Wisdom REGD.
நீடித்து உழைக்கும் டூத் ப்ரஷ்



புது தில்லி ஷண்முகானந்த சபையார் ஆறு படை வீடுடைய ஆறுமுகனுக்கு சஷ்டி கொண்டாடுகிறார்கள். புது தில்லியின் சரித்திரத்தில் இவ்வளவு பெரிய ஊர்வலமோ, உற்சவமோ, ஸஹஸ்ர போஜனமோ நடந்ததில்லை என்ற அளவுக்கு அமைத்து விட்டார்கள் இந்த ஆஸ்திகக் குழுவினர். கந்தனின் சதுர்ப்பவனி கண்கொள்ளாக் காட்சி. செம்பனார் கோவில் பெரியவரின் பேரன்மார் முத்துக்குமாரசாமியும் வைத்தியநாதனும் பொழிந்த நாதஸ்வர இசையில் ஷண்முகப்ரியா அவனுக்குப் பிரியமாகவே அமைந்து விட்டது. இளைஞர்களின் வாசிப்பு அவர்களுக்கு இசை உலகில் பிற்காலத்தில் ஒரு இடத்தை நிச்சயம் செய்யும் வகையில் அமைந்தது.

கி கொண்டிருந்தான் அவன். "நீங்க இந்தவிளக்கையா எடுத்துக்கிட்டு வந்தீங்க?" அவனது வயிறு அழுங்கி அவனைப் பேச விடாது தடுத்தது.

"ஆமாம்" என்று கூறுவது போலத் தலையை அசைத்தான் அவன் குரங்காட்டியின் கையிலிருந்த குரங்கின் முகத்தைப் போல் தொங்கிப் போயிருந்தது அவனது முகம்.

"இது யார் செய்த பாவமோ?" அவள் தொடர்ந்தாள் மெல்லிய குரலிலே. "நமக்கு நல்லபடியாகக் குழந்தை பொறக்கணும்னு தான் நம்ப மலைமேல் சாமியை வேண்டிக் கொண்டேன். எப்படி எப்படியோ பணம் சேர்த்து வெள்ளியிலே விளக்கு செய்து இரண்டு நாளுக்கு முன்னேதானே சாமிக்கு வைச்சுட்டு வந்தேன்! அதை எடுத்துக்கிட்டு வந்துவிட்டீங்களே. நம்ப குலத்துக்கு அடுக்குமா? நம் குழந்தைதான் பொழைக்குமா? நம்பதான் எப்படி நல்லா..."

"ஐயோ!" என்று சுப்புராமன் அலறியது, அவளது பேச்சைத் தடை செய்தது. அவனது தலையில் யாரோ ஓங்கிச் சம்மட்டியால் அடித்தது போலிருந்தது.

"போதும், செங்கமலம்! போதும்! இது எனக்குப் போதும்; நீ வைத்த விளக்கை நான் திருடிக் கொண்டு வந்து விட்டேனே."

"திருடினீர்களா?" அச்சத்தில் அவளது வாய் அகல விரிந்தது.

"ஆமாம், செங்கமலம்! திருடியதல்லாமல் உன்னிடம் பொய் வேறு சொன்னேன். நான் செய்தது அந்தச் சுப்பிரமணியச் சாமிக்குப் பொறுக்காது. நான் பாவி; நான் மகாபாவி!" அவன் தன் தலையில் அடித்தபடி கதறினான்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. யாருக்கும் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. செங்கமலம் மட்டும் வலிதாங்காமல் 'அம்மா! அம்மா!' என்று முனகிக் கொண்டிருந்தாள்.

"நீங்க அதைக் கொண்டுபோய் மலை மேலேயே வைச்சுட்டு வந்திடுங்கோ. அப்பத் தான் என் மனசு நல்லாயிருக்கும். சாமி கோபம் பொல்லாதது. இல்லாட்டி என்னை உயிரோடு நீங்க பார்க்க முடியாது." அவளது குரல் தழுதழுத்தது.

"நீ அப்படிச் சொல்லாதே, செங்கமலம்! இதோ விளக்கைக் கொண்டுபோய்ச் சாமி பீடத்திலேயே வைத்துவிட்டு டாக்டரின் காலில் விழுந்தாவது உடனே கூப்பிட்டுக் கொண்டு வந்துடறேன். இப்ப நடந்ததை யெல்லாம் நீ மறந்துடு, செங்கமலம்" என்று அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டுக் கிளம்பினான் சுப்புராமன்.

"பத்திரமாய்ப் போய்ச் சீக்கிரமாய் வந்து விடுங்கோ" என்று அவள் கூறியதைக் கேட்டுக் தலையசைத்துக் கொண்டே அவன் வெளியில் வந்தான்.

இருள் அவனது கண்களுக்குத்தான் தெரிந்தது. அவனது கால்களுக்கு அது பகல்

பண்டித ஜவாஹர்லால் நேருவை என் நெருங்கிய நண்பர்களில் ஒருவராக நினைக்கும் பாக்கியமும் பெருமையும் எனக்குக் கடந்த சில ஆண்டுகளாகக் கிடைத்துள்ளன. அவரது குணங்களைக் காணக் காண அவரிடம் என் பக்தி சிரத்தை அதிகமாகிறது. ஆனால், நாட்டின் பணியிலே எத்தனையோ பேர் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்திருக்கும் பொழுது. தம்மை மட்டும் புகழ்வதை ஜவாஹர்லால் சிறிதும் விரும்பவில்லை. எனவே, தனிப்பட்ட முறையில் யாராலும் மறுக்க முடியாத உண்மையை நான் சொல்லவே விரும்புகிறேன்: அவரைப் போல் சீரிய ஒழுக்கமும், அநுபவமும், உதாரகுணமும் ஒருங்கே சேர்ந்த ஒரு மகாபுருஷரைத் தனது பிரதம மந்திரியாக அடையும் பாக்கியம் பெற்ற பாரதத்தின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்.

—லார்ட் பெதிக் லாரன்ஸ்

போலவேதான் இருந்தது. கிடுகிடு வென்று மலைமீதேறிக் கோயிலுக்குள் நுழைந்தான்.

"ஐம்பது, அறுபது ரூபாய் இருக்குங்க அந்த வெள்ளி விளக்கு. அத்தனையும் வெள்ளி; படுபாவி எவனோ தூக்கிகிட்டுப் போயிட்டானே" என்று பூசாரி சொல்லிக்கொண்டிருந்தான் அங்கொரு போலீஸ்காரரிடம்.

மற்றொரு போலீஸ்காரர் டார்ச் லைட் அடித்துக் கீழே திருடனின் காலடிகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

சுப்புராமன் நேராக அவர்கள் எதிரில் சென்று நின்றான். நின்றிருந்த போலீஸ்காரர் சட்டென்று அவனது கையைப் பற்றிக் கொண்டார். அந்தப் போலீஸ்காரரின் பார்வை பெரிய வீரனைப் போன்றிருந்தது.

மற்றொரு போலீஸ்காரர் அவனது முகத்தில் டார்ச்சை நன்றாக அடித்தார். அவனது தாடி மீசை அவன் மதிப்பைக் குறைத்துக் காட்டியது.

"டேய்! நீதானே விளக்கைத் திருடினாய்?" இது அவனது கையைப் பிடித்திருந்த போலீஸ்காரரின் கேள்வி.

"ஆமாங்க. நான்தான் திருடினேன்!" என்று சுப்புராமன் சாவதானமாகப் பதில் சொன்னான்.

"கோயில் சொத்தைத் திருடலாமா? சாமிக்குத் துரோகம் செய்வது பெரிய பாவமில்லையா?"—இது மற்றொரு போலீஸ்காரரின் கேள்வி.

"அப்படின்னு தெரிந்துதானுங்க கொண்டு வந்து திருப்பி வைக்க வந்தேன்." சாதாரணமாகத்தான் இருந்தது அவனது பதில்.

"அண்ணே! இதெல்லாம் சுத்தப் பொய்! போலீஸ்காரங்கபிடிச்சிடுவாங்கன்னு பயந்துகிட்டுத்தான் இவன் இங்கே தானாக வந்து விட்டான். இவனை இப்படியே விட்டு வைச்சா ஊரு அநியாயமாகக் கொள்ளை போயிடும். இவனைக் கொஞ்ச நாள் உள்ளே தள்ளினால்தான் உருப்படுவான்." இன்னும் ஏதேதோ சொல்லிக் கொண்டே அவனைப் பிடித்துக் கொண்டிருந்த போலீஸ்காரர் அவனது கைகளைச் சங்கிலியால் பிணைத்தார்.

"ஐயா! மனைவி சாகக் கிடக்கிறா ஐயா: அவளுக்கு டாக்டரை அழைத்துச் சென்று காட்டி விட்டு வந்து விடுகிறேனையா, கொஞ்சம் தயவுசெய்யுங்களையா!" என்று சுப்புராமன் கெஞ்சினான்

மற்றொரு போலீஸ்காரர் அவனை இரக்கத்தோடு பார்த்தார். அதற்குள் சுப்புராமனைக் கட்டிய போலீஸ்காரர் அவனது முதுகில் தட்டி அவனை ஓர் ஒதுக்குப்புறமாக அழைத்துச் சென்றார்.

"யார் எப்படிப் போனால் நமக்கென்ன? நமக்கோ இரண்டு வாரமாக ஒரு கேசுகூடக் கிடைக்கவில்லை. இவனைக் கையும் களவுமாகப் பிடித்தோம் என்று வழக்கை ஜோடித்துப் பூசாரியிடம் ஒரு சாட்சியம் வாங்கிக் கொண்டால் போகிறது. இவன் சிறையில்தான் கொஞ்ச நாட்கள் கிடக்கட்டுமே?"

"அதுதான் சரி!" ஆமோதித்தது ஒருகுரல்;

"உம், நட" என்று இன்னொரு குரல் சுப்புராமனை அதட்டியது.

அவன் சங்கிலி பிணைத்த கைகளோடு முன்னே சென்று கொண்டிருந்தான். இருள் அவனைப் பார்த்துச் சிரித்தது. அவன் திருப்பி இருளைப் பார்த்துச் சிரித்தான். இடையிடையே டார்ச்சின் ஒளியில் அவன் ஆடி ஆடிச் செல்வதைப் போலீஸ்காரர்கள் பார்த்தனர்.

"பைத்தியம் போல் ஆடுகிறானே" என்று பூசாரி போலீஸ்காரரிடம் வியப்போடு கூறினான்.

"தன் வீட்டின் இருள் நீங்கி விடும் என்று விளக்கைத் திருடினான். அவ் விளக்கு அணைந்ததோடு அது அவனது குடும்பத்தையே அணைத்துவிட முற்பட்டது."

செங்கமலத்தைச் சுற்றிலும் பெண்கள் நின்றிருந்தனர். அவள் ஒரு குழந்தையை ஈன்றிருந்தாள்.

"ராசாமாதிரி இருக்கிறே, கண்ணு!" என்று அந்தக் குழந்தையைத் தூக்கி நெட்டி மடக்கிக் கூறினாள் ஒரு கிழவி.

"இதென்ன இவள் முகத்திலே தண்ணி கொட்டி வச்சிருக்கு. ஜன்னியில்லே பொறந்துடும்" என்று ஒரு பெண் பரிதாபப் பட்டாள்.

"டாக்டரைக் கூட்டிவரச் சென்ற சுப்புராமன் இன்னும் வரவில்லையே?" என்று ஏங்கினாள் மற்றொருத்தி.

"வந்துடுவான்; வந்துடுவான்; இந்நேரம் வந்துகிட்டுத்தானிருப்பான்." அந்தக்கிழவிக்குச் சுப்புராமனின் மீது அத்தனை நம்பிக்கை.

ஜுரம் விரு விருவென்று குறைந்தது.

அந்தக் குடும்பத்துக்கு நல்ல விளக்காக அந்தக் குழந்தை வந்து தோன்றினான்.

அந்தக் கடைசி விளக்கும் அணையாது எரிந்து கொண்டேயிருந்தது. செங்கமலம் குழந்தையை அணைத்துக் கொண்டு கொஞ்சி முத்தமிட்டாள்.

சுப்புராமன் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்து கொண்டேயிருந்தான்!



அல்லி விஜயம்


"அம்மா! இங்கே வந்து பார், அம்மா, இந்த ராஜுவை! முட்டாள், மடையன், மூஞ்சியைப் பார், மூஞ்சியை!"

"ஏய்! இன்னும் ஒரு தரம் ஏதாவது திட்டினாயோ, இதோ இதைத் தூக்கி அடிச்சு உன் தலையைப் பிளந்து விடுவேன்!"

"அடிப்பையோ......? அடிச்சால் கையை ஒடிச்சுட மாட்டேனா......? பெரிய 'இவன்'தான்!"

"எங்கே, ஒடி, பார்க்கலாம்."

ராஜு, செஸ் விளையாட்டுப் பலகையைத் தூக்கிக் கொண்டு எழுந்தான். விஜயம் திண்ணையிலிருந்து துள்ளிக் குதித்து உள்ளே ஓடினாள். அங்கே சென்று தாயிடம் நின்று கண்ணைக் கசக்கினாள்.



"அடாடா! இப்படியும் உண்டா? அவன் இருக்கிற இடத்துக்குப் போகாதே என்றால் நீ கேட்கிறதில்லை; உன் ஜோலிக்கு வரக்கூடாது என்றால் அவனும் கேட்கிறதில்லை!"

"என்ன மீனாட்சி?" என்றபடி கல்யாணி அங்கே வந்தாள்.

"இந்தப் பசங்களைத்தான் சொல்கிறேன். ஒன்றுக்கு ஒன்று வெட்டிக் கொண்டு மடிகின்றன" என்றாள் மீனாட்சி.

கல்யாணி சிரித்தாள். "எல்லாம் வாய் அமட்டலோடு சரி, மீனாட்சி! விஜயத்தின் மேல காற்றடிக்கப் பொறுப்பதில்லை ராஜுவுக்கு. ஒரு நாழிகை அவளைக் காணாவிட்டால் தவித்துப் போகிறான் இவன்."

"அது என்னவோ உண்மைதான்" என்றாள் மீனாட்சி.

கல்யாணி ராஜுவைத் தேடிக்கொண்டு வாசற்புறம் சென்றாள். வாயிற்படியிலே செஸ் பலகையும் திண்ணையிலே மூலைக்கொன்றாகக் காய்களும் கிடந்தன. கல்யாணி அவற்றை எடுத்துக்கொண்டு வந்தாள்.

இரவு ஒன்பது மணி. பின் கட்டிலிருந்து, "விஜயா!" என்ற மீனாட்சியின் குரல் சன்னமாக

எல்லார்வி



ஒலித்தது. தகப்பனாரிடம் சுவாரஸ்யமாகக் கதை கேட்டுக் கொண்டிருந்த ராஜு இலேசான நிழலாட்டம் கண்டு திரும்பிப் பார்த்தான். விஜயம் பூனைபோல் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தாள்.

"அப்பா! இத்தத்திருட்டு விஜயாவைப்பார், அப்பா! பதுங்கியிருந்து இவ்வளவு நேரமும் கதை கேட்டுவிட்டுப் போகிறாள் அப்பா!"

"போனால் போகட்டுமடா."

"எனக்காக நீ சொல்ற கதையை அவள் ஏன் அப்பா கேட்கணும்?"

சோமசுந்தரம் இடிஇடி என்று சிரித்தார். "நல்ல பிள்ளையடா நீ!"

★

மறுநாள் மாலை: ராஜு பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பினான். அங்கே அவன் கேள்விப்பட்ட செய்தி! — 'விஜயாவுக்கு டைபாய்டு!'

ராஜுவுக்குத் தரையில் கால் பாவவில்லை. நின்ற இடத்தில் நில்லாமல் சுற்றிச் சுற்றி வந்தான். நினைவை இழந்து படுக்கையில் கிடக்கும் விஜயாவைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் உகுத்தான். பிறர் பார்க்கும் போது கண்ணைத் துடைத்துக்கொண்டு கவலை அற்றவன்போல் காணப் பெற்றான். யாரிடமும் எதுவும் கேட்கவில்லை. மனத்துக்குள்ளாகவே மறுகித் தவித்தான். தனக்கே ஜுரம் வந்துவிட்டதுபோல் தத்தளித்தான்.

அன்றையப்பொழுது சென்றது. அடுத்த நாட்களிலும் அவன் அப்படியே இருந்தான். அன்னம் தண்ணீர் இன்றி, தூக்கம் இன்றி, நெஞ்சில் வேறு நினைப்பு இன்றி, நெக்குருகிப் போனான். ஒவ்வொரு நாளும் டாக்டர் வந்து செல்லும் வரை அப்பால் இப்பால் அசைவதில்லை. அவர் சாதகமான செய்தி சொன்னால் அவனிடம் சிறிது தெளிவு; கவலைக்கு இடமான செய்தியைக் கேட்டால் முகத்திலே சோர்வு; தடுமாற்ற நிலை.

'இந்தப் பிள்ளையின் போக்குத்தான் என்ன?' என்று பெரியோர்கள் வியந்தார்கள். ஜுரத்தால் பீடிக்கப்பட்டிருப்பது விஜயாவா, ராஜுவா என்று கேட்கும்படி இருந்தது. அவன் உடம்பு சில நாட்களுக்குள் அப்படி இளைத்துப் போய்விட்டது. பள்ளிப் பரீட்சையும் காலை வாரி விட்டு விட்டது.

இது என்ன அதிசயம்? ஒரு சமயம் ராஜுவுக்குக் காலில் ஆபரேஷன். விஜயா அவன் படுக்கையின் அண்மையிலிருந்து அகலவே இல்லை. மேதுக்கு எலியும் பூனையும் போல் இருந்தவர். உள்ளுக்குள் 'அடே அப்பா! திருஷ்டி விழாமல் இருக்க வேண்டும்' என்று மற்றவர்களுக்கு மிகப் பெருமையோடு கூறினார்கள் மீனாட்சியும் கல்யாணியும்.

★

'திருஷ்டி விழாமல் இருக்க வேண்டும்' என்று பெரியவர்கள் தங்கள் மக்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்தத் திருஷ்டி, யாரும் சற்றும் எதிர்பாராதபடி பெரியவர்கள் விஷயத்திலேயே ஏற்பட்டு விட்டது. இல்லையென்றால் நகமும் சதையும் போல் ஒன்றுபட்டு வாழ்ந்த அவ்விரு குடும்பத்தினரிடையே திடீரென்று மனஸ்தாபம் தோன்றுவானேன்? தோன்றினால் தான் என்ன? பிறகு சமரசம் ஏற்படக் கூடாதா? மாறாக, நாளுக்கு நாள் விரோதந்தான் வலுப் பெறலாயிற்று. 'இனி மூகாலோபனம் உதவாது' என்ற முடிவுக்கு இரு குடும்பத்தினருமே வந்துவிட்டனர். 'வீட்டைக் காலி செய்து விடுங்கள்' என்று சோமசுந்தரம் சொல்லிவிட்டார். 'காலி செய்து விடுகிறேன்' என்று சுந்தரேசனும் ஒப்புக்கொண்டு விட்டார். இவ்வளவுக்கும் மூலகாரணமாக இருந்தது உப்புப் பெறாத ஏதோ ஒரு சிறு விஷயந்தான். காரணம் எதுவானால் என்ன? காரியம் விபரீதமாகிவிட்டது. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து அந்த இளம் உள்ளங்களை அலையில் இட்டு வதக்குவது போலச் சித்திரவதை செய்தன. அவர்கள் கிடந்து தத்தளித்தனர்.

★

ராஜு பள்ளி நேரம் முடிந்து வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் உள்ளம் சுழற் காற்றில் சிக்கிய சிறு துரும்பென அலைந்து கொண்டிருந்தது. வேறு என்ன? எல்லாம் விஜயாவைப் பற்றின சிந்தனைதான்.

சுருக்கென்று காலில் என்னவோ குத்தியது. 'ஆ' என்ற ராஜு குனிந்து கவனித்தான். பாதத்தில் ரத்தம் பீறிட்டது. அதைக் கண்டதும் அவன் நெஞ்சிலே ஆத்திரம் பீறிட்டது. அப்போது அவன் காலடியில் கிடந்த சிறு தகரத்துண்டு கண்ணில் பட்டது. ஓர் அங்குல அகல நீளம் உள்ள அதன் வடிவம் அவன் கருத்தைக் கவர்ந்தது. மின்னல்போல் ஓர் எண்ணம்; அடுத்த கணத்தில் அவன் கால் வலி, மனவலி எல்லாம் நாகதாளி வேரைக் கண்ட பாம்பைப் போல் அடங்கி விட்டன. முகத்திலே அபூர்வமான ஒரு பிரகாசம். சட்டென்று பாய்ந்து அந்தத் தகரத்துண்டை எடுத்துக் கொண்டான். ஓட்டமும் குதிப்புமாக வீட்டுக்கு விரைந்தான்.

தினசரி மாலையில் அவன் வீட்டை அடைந்ததும் வயிற்றுக்கு ஏதாவது தின்னி வாங்கிக் கொண்டு விளையாடத் தெருவுக்கு ஓடிவிடுவான். கூடத்திலே அவன் விட்டெறிந்த புத்தகப் பையிலிருந்து சிதறிய பொருள்களையும் பையையும் கல்யாணி எடுத்து வைப்பாள். இன்று அப்படி இல்லை. வழக்கமான ஆர்ப்பாட்டம் இன்றிப் பூனைபோல் வந்து நுழைந்த ராஜு, புத்தகப் பையை மெதுவாக ஒருபுறம் வைத்து விட்டுச் சாமான் அறைக்குள் புகுந்தான். மும்முரமாக எதையோ தேடினான். 'கடபுடா' என்ற சந்தடியைக் கேட்டு, "யார் அங்கே?" என்றாள் கல்யாணி. பதில் இல்லை. சற்றுப்பொறுத்து மறுபடியும் சந்தடி. இம்முறை கல்யாணி யார் என்று கேட்கவில்லை. நேரே அறைக்குள் சென்றாள். அங்கே இருந்த ராஜு, தாயைக் கண்டதும் தன் கையில் இருந்த கத்தி, ஆணி, தகரத்துண்டு, 'ட்வைன்' நூல் முதலியவற்றைச் சட்டென்று மறைத்துக் கொண்டான்.

"நீதானா அப்பா? பதில் சொன்னால் என்ன? வாயிலே கொழுக்கட்டையா? திருட்டுக்

கழுதை! எதற்காக உள்ளே குடைகிறாய்?'' என்று அதட்டினாள் கல்யாணி.

ராஜு கைப்பொருள்களைப் பின்புறமாக மறைத்தபடி மெல்ல அங்கிருந்து நழுவினான். கல்யாணி அறைக் கதவைச் சாத்திக் கொண்டு அலுவலைக் கவனிக்கச் சென்றாள்.

சிறிது நேரம் சென்றது. குளியல் அறையில் 'மடார்' என்று செம்பு கீழே விழும் சத்தம் கேட்டது.

''யார் அங்கே, ராஜு?......'' என்று கூவியபடி கல்யாணி குளியல் அறைக்கு ஓடினாள். அங்கே இருந்த ராஜு அவசரம் அவசரமாகத் தன் காற்சட்டைப் பைக்குள் எதையோ திணித்துக் கொண்டான். பைக்கு வெளியே நூல் தொங்கிக் கொண்டிருந்தது. பையின் மேல் பகுதி எல்லாம் மஞ்சள்; அவன் இரு கைகளிலும் மஞ்சள்.

''என்னடா இது? மஞ்சள் பொடியை எல்லாம் கொண்டுவந்து, கொட்டி, இரைத்துப் பாழாக்கி, இது என்ன ஜாட்டி?'' என்று கையை ஓங்கினாள் கல்யாணி. ராஜு வளைந்து கொடுத்து ஓடியே போய் விட்டான்.

காரியாலயத்திலிருந்து வீடு திரும்பிய சோமசுந்தரம் சட்டைகளைக் கழற்றிக் 'கோட் ஸ்டாண்டி'ல் மாட்டிக் கொண்டிருந்தார். அவர் வருகையை எதிர்பார்த்து வாசற்படியில் காத்துக்கொண்டிருந்த ராஜு பின்னோடு உள்ளே வந்தான்.

''ஏன் அப்பா, அன்றைக்குச் சொன்னாயே, அல்லி விஜயம் கதை.''

காப்பியும் கையுமாய் அங்கே வந்த கல்யாணி, ''போடா, வேலையத்தவனே! அல்லி விஜயமும் ஆச்சு, முன்னி விஜயமும் ஆச்சு! படிப்பிலே ஒரு மண்ணாங்கட்டியும் காணும்; எப்போ பார்த்தாலும் கதை, கதை, கதை! வேறே வேலையில்லை?'' என்று அதட்டினாள்.

''ஏன் கல்யாணி இப்படிப் படபடவென்று பொரிகிறாய்?''

''சரி! சரி! அப்பா பாடு, பிள்ளை பாடு!'' என்று உள்ளே போய் விட்டாள் கல்யாணி.

''அல்லி விஜயத்திலே என்னடா ராஜு?''

''ஒன்றும் இல்லை அப்பா; அல்லி தூங்குகிற அப்போ அர்ஜுனன் அவள் கழுத்திலே தாலியைக் கட்டினானே, அதை அவள் ஏன் அவிழ்த்து எறியவில்லை?''

''அவள் முயன்றாள்; முடியவில்லை.''

''ஏன் முடியவில்லை?''

''கண்ணன் தெய்வப் பிறவி இல்லையா? அர்ஜுனன் கண்ணனின் அருள் பெற்றவன். அவனுடைய சம்மதத்தோடு, அருளாசியோடு அர்ஜுனன் கட்டிய தாலி அது. அதனால்தான் அல்லியால் அதை அகற்ற முடியவில்லை.''

''அது சரி. ஆனால் அந்தத் திருட்டுத் தாலியை எப்படி எல்லாரும் ஒப்புக் கொண்டார்கள்?''

பையன் இப்படியெல்லாம் கேள்வி கேட்பதில் தகப்பனாருக்குப் பரம சந்தோஷம். ''சரியான கேள்விதான். திருட்டுத் தாலி யானாலும் கட்டினது கட்டினதுதானே? ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்?'' என்றார்.

''பப்பாம்! பப்பாம்!''—ராஜுவின் வாய் இப்படிக் கூவியது. கால் தொண்டியடித்தது. அடுத்த கணத்தில் அவன் தெருவில் ஓடிக் கொண்டிருந்தான்: சோமசுந்தரம் மெல்ல நகைத்துக் கொண்டார்.

பிற்பகல். கல்யாணி கூடத்திலே தூங்கிக் கொண்டிருந்தாள். ராஜு அந்தப் பக்கம் வந்தான். கல்யாணி புரண்டாள். அவள் கழுத்து ஆபரணங்களுடன் மாங்கல்யமும் புரண்டது. ராஜு கூர்ந்து கவனித்தான். அவன் வாய் மெல்ல முணுமுணுத்தது:

''நிறம் ஒன்றிலேதான் சிறிது மாறு பாடு......'

திடீரென்று மனத்தில் ஓர் எண்ணம். முகத்தில் ஒரு பிரகாசம். ''ரை...ட்...டோ!...'' என்று குதி போட்டுக்கொண்டு தாழ்வாரத்து அறைப் பக்கம் ஓடினான். கொலுப் பெட்டியைக் கிளறினான். தேடியது கிடைத்து விட்டது. பொன் நிறக் காகிதத் துண்டு. அவன் சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

விடியற்காலை கண் விழித்த விஜயம் பாம்பை மிதித்தவள் போல் 'ஆ' என்று வாய்விட்டுக் கூவினாள். நல்ல வேளை; அவ



ளுடைய பெற்றோர் அப்போது அருகே இல்லை. அசட்டுப் பெண் கண்ணைக் கசக்கிக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டாள். ஆனால் சிறிது நேரத்தில் அழுகை 'கப்'பென்று நின்று போயிற்று. தானாக அல்ல; ராஜுவின் கரம் அவள் வாயில் பதிந்ததனால்.

''அழாதே,விஜயா! தெரிந்தால் என் அப்பா என் முதுகுத்தோலை உரித்து எடுத்து விடுவார்''—ராஜு அவள் மோவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சும் குரலில் வேண்டினான்.

விஜயா அவன் கையைத் தட்டி விட்டாள். ''சீ போ! என்கிட்டே ஒன்றும் பேசவேண்டாம்.'' சிறிது தூரத்தில் சென்று விசித்த படியே நின்றாள்.

''அப்படியானால் அதை என்னிடம் கொடுத்துவிடு.''

''முடியாது!''

''அப்போ அழாமல் இரு.''

''முடியாது!''

''யாரிட்டேயும் சொல்லாதே.''

''முடியாது!''

''சரி. நன்றாக அழு! எல்லாரிடமும் சொல்லு!''

''முடியாது! முடியாது!''

'ஓஹோ' என்று பலமாக வாய்விட்டுச் சிரித்தான் ராஜு.

''வ...வ்...வ...வ்...வே...!''

மீனாட்சி வந்து கொண்டிருப்பதைக் கவனித்த ராஜு மூன்கட்டை நோக்கி விரைந்தான்.

விஜயா கண்ணைத் துடைத்துக்கொண்டாள். மெல்லக் கையைத் திறந்தாள். சற்று முன் தன் கழுத்திலிருந்து அவன் கழற்றிய பொருள் அவள் கையில் இருந்தது. அதையே உற்று நோக்கினாள். அவள் உடம்பெல்லாம் புல்லரித்தது.

பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பிய விஜயா தோழிப் பெண்களைப் பிரிந்து தனிமையில் போய்க் கொண்டிருந்தாள். இப்போது அவளும் அவள் பெற்றோரும் சோமசுந்தரத்தின் வீட்டில் இல்லை. வேறு இடத்துக்குக் குடிபோய் விட்டார்கள். ஆள் குறைப்புத் திட்டத்தில் சுந்தரேசனுக்கு வேலையும் போய் விட்டது. அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

'' விஜயா!......''

'' என்ன அம்மா?''

அறை வாசற்படியில் கால் வைத்த விஜயா திடுக்கிட்டுப் பதுமை போல் அசைவற்று நின்றாள். அறைக்குள் மீனாட்சி அமர்ந்திருந்தாள். அவளைச் சுற்றித் திறந்த பெட்டிகள்; பலபல பொருள்கள் இருந்தன. அவற்றுள் விஜயாவின் சிறு பெட்டியும் ஒன்று.

தாயின் கையில் இருந்த பொருள்தான் மகளை அப்படித் திடுக்கிட வைத்தது. மஞ்சள் சரட்டிலே மாங்கல்யம்! தகரத் துண்டிலே அமைந்த தாலியின் மீது பொன் நிறமான காகிதம் ஒட்டி இருந்தது. மீனாட்சி அதை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

''இது என்னடி?'' அதட்டிக் கேட்டாள் அவள் தாயார்.

''தா......லி......''

''அது தெரிகிறது: ஏது என்றுதான் கேட்கிறேன்'' என்றாள் தாயார் கோபத்துடன்.

''ரா...ஜு......நவராத்திரிக்கு......கொலு பொம்மைக்கு......''

'' மீனாட்சி!''—சுந்தரேசன் குரல் கேட்டு மீனாட்சி எழுந்து சென்றாள். விஜயா சட்டென்று அங்கே சென்று அந்த மாங்கல்யத்தை எடுத்துக் கண்ணிலே ஒற்றிக் கொண்டாள்.

★

ஆண்டுகள் சென்றன. மேலே குறிப்பிட்ட விஷயங்களெல்லாம் இப்போது மிகப் பழங்கதை. ராஜு அழகுநிறைந்த வாலிபனாக வளர்ந்து, பட்டம் பெற்று, உத்தியோகத்தில் அமர்ந்து விட்டான். இப்போது அவனும் அவன் பெற்றோரும் வேறு ஊரில் வசித்து வந்தனர். காரணம் அவர்களுடைய உத்தியோக வழிதான். தவிர விஜயா, அவள் பெற்றோர் முதலியவர்களைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் அவர்களை இவர்களால் சிறிதும் மறக்கவே முடியவில்லை. ராஜுவின் தீவிரமான போக்குத்தான் காரணம்.

''இருக்கிறதெல்லாம் ஒன்றே. காலத்தில் அதற்கு ஒரு நல்லதைச் செய்து வைத்துக் கண்ணால் பார்க்க நாம் கொடுத்து வைக்கவில்லையே''—வழக்கம் போல் கல்யாணி பெருமூச்சுடன் இப்படிப் புலம்பினாள்.

சோமசுந்தரம் பதிலுக்குப் பெருமூச்செறிந்தார். ''உம்! அதற்கு என்ன செய்கிறது? 'மனம்போல மாங்கல்யம்' என்பார்கள். நம் பிள்ளையாண்டான் விஷயத்தில் அது நூற்றுக்கு நூறு சரியாக இருக்கிறது. கல்யாணம் என்று பேச்செடுத்தால் அவன் வேட்டை நாயாய்க்குலைக்கிறான். செத்துப்போன விஜயா மாலையும் கையுமாக வந்தால்தான் மலர்ந்த முகத்துடன் அவன் கழுத்தை நீட்டுவான் போல் இருக்கிறது. அதற்கு ஏற்றாற்போல் அவனுடைய ஜாதகம் எந்தப் பெண்ணின் ஜாதகத்தோடும் இணைய மாட்டேன் என்கிறது'' என்று சலித்துக் கொண்டார்.

''நீங்கள் சொல்கிறீர்கள், விஜயா செத்துப் போய் விட்டாள் என்று. அவன்தான் அதை நம்பவே மறுக்கிறானே? கார் விபத்துக்கு உள்ளானவள் விஜயா என்ற பெயருடைய வேறொரு பெண் என்றும், அவள் தகப்பனார்



ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் என்றும், அவர் பெயர் சுந்தரேசன் அல்ல; சுந்தரராமன் என்றும், இப்படி இன்னும் பல தகவல்களை அவன் விசாரித்து வைத்திருப்பதாகவும், தன்னுடைய விஜயா எங்கோ சுகமாக இருப்பாள் என்றும், தனக்காகத் தவம் செய்து கொண்டு இருப்பாள் என்றும் மிக உறுதியாகச் சொல்லிக் கொண்டிருக்கிறானே?''

''சொல்லிக்...கொண்டே...இருக்கட்டும்!'' என்று பல்லைக் கடித்தார் சோமசுந்தரம். சற்றுப் பொறுத்துக் கல்யாணியை நிமிர்ந்து பார்த்தார். கரகரத்த குரலில் மெதுவாகச் சொன்னார்: '' அந்த அஷ்ட தரித்திரத்தின் நினைவு அவனுடைய மனசை விட்டு என்றைக்கு நீங்குகிறதோ, அன்றைக்குத்தான் அவனுக்கு க்ஷேமம்!''

'' அவள் அஷ்ட தரித்திரம் இல்லை, அப்பா: அஷ்ட லட்சுமியின் ஒரே உருவான விஜய லட்சுமி அப்பா. வீணாக ஒரு பெண்ணை நிந்திக்காதீர்கள். அது பாவம்!'' என்று அங்கே வந்து சொல்லி விட்டு அப்பால் சென்றான் ராஜு. பெற்றோர்கள் திக்பிரமை கொண்ட நிலையில் இரண்டு நிமிஷம் வாயடைத்துப் போயிருந்தார்கள்.

'' லார்!...''

இந்தக் குரல் தம்பதிகளின் மௌன நிலையை மாற்றி விட்டது.

"யார் அங்கே?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து வாசற்புறம் வந்தார் சோமசுந்தரம். அங்கே அவருடைய நண்பர் சாமிநாதன் நின்றிருந்தார்; அவர் அருகே ஒரு புது மனிதரும் இருந்தார்.

"இவர் என்னுடைய நண்பர் குருமூர்த்தி. இவருடைய தமக்கை பெண்ணுக்காக வரன் தேடி வருகிறார். யாரிடமிருந்தோ நம் ராஜுவின் ஜாதகம் கிடைத்ததாம். ஒப்பிட்டுப் பார்த்ததில் நூற்றுக்கு நூறு பொருந்துகிற தாம்.." என்று சொல்லிக் கொண்டே வந்த சாமிநாதன், சோமசுந்தரத்தைச் சற்றுத் தள்ளி அழைத்துச் சென்று ரகசியமாக என்னவோ சொன்னார். பிறகு இருவரும் திரும்பி வந்து குருமூர்த்தியிடம் பேசினார்கள்.

அவர்கள் சென்றபின் உள்ளே வந்த சோமசுந்தரம் கல்யாணியிடம் ஒரேயடியாக அளக்கத் தொடங்கினார்.

"பெண்ணின் தகப்பனார் ஏதோ வியாபாரம் செய்து ஏராளமாகப் பணம் சேர்த்து வைத்திருக்கிறாராம். போன வருஷத்திலிருந்து நோயில் கிடக்கிறாராம். ஒரே பெண்ணும், அப்சரஸ் மாதிரி இருப்பாளாம். ஏராளமாகச் செய்வார்களாம்."

"எல்லாம் சரிதான். பையன் சம்மதிக்க வேண்டுமே?"

"பெண்ணைப் பார்த்தால் மறுக்க மாட்டான் என்ற ஏதோ குறி சொல்வது போல் அந்தக் குருமூர்த்தி என்பவர் சொல்கிறார், பார்க்கலாம்" என்று கூறிவிட்டு ஏதோ அவசர காரியமாக வெளியே சென்றார் சோமசுந்தரம்.

மறுபடியும் அவர் திரும்பி வந்த போது அவரிடம் ஒரு பரபரப்பு தென்பட்டது. ரகசியமாக மனைவியிடம் சொன்னார்: "கல்யாணி! குருமூர்த்தி என்பவர் நம் ராஜுவிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாராம்!"

"யார் சொன்னார்கள்?"

"கோபாலசாமி சொன்னார். ராஜு தெருவோடு போய்க் கொண்டிருந்தானாம். குருமூர்த்தி அவனை அணுகி என்னவோ பேசினாராம். இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென்று நான் நினைக்கிறேன்."

"எல்லாம் போகப் போகத் தெரிகிறது" என்றாள் கல்யாணி. சோமசுந்தரம் பெருமூச்செறிந்தார்.

அவர் சந்தேகப்பட்டதற்கு ஏற்ப, ராஜு வீடு திரும்பியபோது மிகவும் கலகலப்புடன் காணப்பட்டான். பல காலத்துக்குப் பின் அவன் முகத்திலே சிரிப்பு குமிழியிட்டது. பெண் பார்க்க என்று கிளம்புகிறபோது முன்னெல்லாம் போல் அவன் ஆட்சேபணை எதுவும் சொல்லாதது பெற்றோரின் வியப்பை மேலும் அதிகரித்தது. இதையெல்லாம் விட ஆச்சரியம் பெண் பார்க்கும் கட்டத்தில் விஜயா வந்து நமஸ்கரித்ததுதான்!

திருமணத்துக்குப் பின் விஜயா – ராஜு தனிமையில் முதற் சந்திப்பு.

"கடைசியில் பிடித்த பிடியை நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள்!" என்றாள் விஜயா சிரித்துக்கொண்டே.

"உன் பிடிவாதத்துக்கு உறை போடக் காணாதே! அதுமட்டுமா? உன்னுடைய ஆழ்ந்த கருத்தும், அளவற்ற முயற்சியும்..."

"போதும் புகழ்ச்சி!" என்று சிணுங்கினாள் விஜயா. பிறகு, "அது போகட்டும்; முகூர்த்த வேளையில் எதற்காக அப்படிக் குறும்பு செய்தீர்கள்?" நீங்கள் மெதுவாக, 'இந்தத் திருமங்கல்யத்திலா?' என்று கேட்கவே, எனக்குச் சொரேர் என்று ஆகி விட்டது. பயம் ஒருபுறம், சிரிப்பு ஒருபுறம்; தத்தளித்துப் போய் விட்டேன்!"

"பின்னே என்ன விஜயா? ஆயிரம் ஆனாலும் அந்தத் தகரத் தாலிக்கு உள்ள மதிப்பு என் வரையில்......"

"ஏன்? எனக்கு மட்டும்?"

"அது எங்கே விஜயா?"

"நல்ல வேளை! மணப் பந்தலிலேயே இப்படிக் கேட்டு விடுவீர்களோ என்று பயந்தேன். பெட்டியிலே பத்திரமாக இருக்கிறது. அது தான் நம்மைச் சேர்த்து வைத்தது!"

"எப்படி?"


"அம்மா மறுபடியும் ஒருநாள் அதைப் பார்த்து விட்டாள். முன்பு ஏதோ சாக்குப் போக்கு சொன்னேன். பிறகு கையுங் களவுமாகப் பிடிபட்டு விட்டேன். மஞ்சள், குங்குமம், வாடிய மலர் இவற்றுடன் பொட்டணத்தில் அதைக் காணவே பார்க்கிற வரன்களையெல்லாம் நான் ஏன் தட்டிக் கழித்துக் கொண்டே வருகிறேன் என்பதை அம்மா புரிந்துகொண்டு விட்டாள். அவள் அளவு கடந்த வாத்ஸல்யத்தோடு கேட்கவே நான் அழுகையுடன் கலந்து எல்லாவற்றையும் கொட்டிவிட்டேன். பிறகு ஒருநாள் கோமளா சொன்னாள், நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்று. அதற்கு மேல் குருமூர்த்தி மாமாவை அனுப்பி வைத்தோம்......"

ராஜு சந்தோஷப் பெருமூச்செறிந்தான். "எனக்கு நீ முக்கியம்; என் அப்பாவுக்குப் பணம் முக்கியம்; அம்மாவுக்கோ எல்லாமே முக்கியந்தான். இப்போது எல்லாருக்குமே சந்தோஷமாகி விட்டது."

"ஆம். இருவரின் துணிகரமான செயலால்: அப்பா துணிந்து வியாபாரத்தில் ஈடுபட்டுப் பணத்தைச் சேர்த்தார். நீங்கள் ஓயாமல் கதை கேட்டுக் கேட்டுத் துணிகரமாக அந்தத் தகரத் தாலியை......"

ராஜு கள்ளச்சிரிப்புடன் மெல்லிய குரலில், "அல்லி விஜயம்" என்று கூறிக் கண்ணைச் சிமிட்டினான். கன்னத்தைக் கிள்ளும் நோக்கத்துடன் அவளை நெருங்கினான். "போதுமே, உங்கள் பிரதாபம்!" என்று அவள் பின் நகர்ந்தாள். தெருவிலே வந்த 'அல்லி விஜயம்' சினிமா விளம்பர வண்டி இருவர் கவனத்தையும் கவர்ந்தது.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.



ப்ரீஸ் டாய்லெட் சோப் ஒன்றுதான்

ஆக்டமர்* அடங்கிய சோப்

—மணிக்கணக்காக நிலைபெறும் புத்துணர்ச்சிக்கான சோப்

ஸ்நானம் செய்தபின் புதுமலர்ச்சியை எவ்வளவு நேரம் அனுபவிக்கிறீர்கள்? ப்ரீஸ் டாய்லெட் சோப் உபயோகித்தால் புதுமலர்ச்சி மணிக்கணக்காக வாடாமலர்போல நீடித்திருக்கும்.

புதுமைப் பொலிவுக்கு பங்கம் விளைவிப்பவை சருமக்கிருமிகளால் ஏற்படும் வியர்வை நாற்றங்களே; ஆக்டமர் அடங்கிய ப்ரீஸ் சோப் அத்தகைய ஆபத்துக்களினின்று உங்களைக் காக்கும். ப்ரீஸ் உபயோகித்து நீராடி நெடுநேரம் ஆனபின்னரும், சருமக் கிருமிகளைத் தாக்குவதை ஆக்டமர் நிறுத்தாது. ப்ரீஸ் அளிக்கும் நறுமணமும் புதுமலர்ச்சியும் உங்கள் தேகத்தோடு இணைபிரியாமல் நிலைபெறும்.

விலை சற்றே கூடுதல் என்றாலும் அதிக நன்மை பயக்கிறது என்பதனால் ப்ரீஸ் சோப் பொதுஜனங்களைக் கவர்ந்துள்ளதில் ஆச்சரியமில்லை. ஞாபகமிருக்கட்டும்... ஒரே ஒரு வில்லை நெடுநாள் உழைக்கும்!



ஆக்டமர் (பைதியோனல்) என்பது அமெரிக்க மெடிகல் அசோஸியேஷனால் அங்கீகரிக்கப்பட்ட ரஸாயனப் பொருள்

*சரீரப் புத்துணர்ச்சி பெற விஞ்ஞானம் தந்துள்ள சாதனம் ஆக்டமர்!

BZ. 5A-50 T.M

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon